# වාර්ෂික වාර්තාව 2024

කළමනාකරණ පශ්චාත් උපාධි ආයතනය

ශ්‍රී ජයවර්ධනපුර විශ්වවිද්‍යාලය

# ஆண்டறிக்கை 2024

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம்

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

# Annual Report 2024

POSTGRADUATE INSTITUTE OF MANAGEMENT

University of Sri Jayewardenepura



# முகாமைத்துவப் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தை வியாபாரப் பாடசாலையாகத் திகழச்செய்தல்



# நோக்கு, செயற்பணி மற்றும் விழுமியங்கள்

**நோக்கு**

தெற்காசியாவின் முகாமைத்துவக் கல்வியில் உன்னதமிக்க மையமாகத் திகழ்தல்

**செயற்பணி**

உத்தரவாதமளிக்கப்பட்ட தரம், முன்மாதிரியான ஆளுகை, மற்றும் துணையூக்களிக்கின்ற நிலைபெறுதன்மை ஊடாக இயலச்செய்யப்பட்ட புத்தாக்கமிக்க கற்றல், நுண்நோக்குமிக்க ஆராய்ச்சி, வளமூட்டுகின்ற பங்குடமைகள் அத்துடன் எதிர்காலமிக்க அபிவிருத்தி என்பன ஊடாக மக்களிலும் நிறுவனங்களிலும் பெறுமானங்களிலும் பெறுமதியை உருவாக்குவதற்கு முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம் பாடுபடுன்றது.

**மைய விழுமியங்கள்**

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் மூன்று அடிப்படை விழுமியங்கள், பேரார்வம், நேர்மை மற்றும் சிந்தனையுடன் செயலாற்றுதல் என்பனவாகும். ஒவ்வொன்றின் கீழும் முக்கிய நடத்தைசார்ந்த குறிகாட்டிகள் மீது கவனம் செலுத்துகின்றோம்.

| **பேரார்வம்** | **நேர்மை** | **சிந்தனையுடன் செயலாற்றுதல்** |
|---|---|---|
| செயற்பாடுகளில் தொழில்சார் பண்பினைக் காண்பிப்பதிலும் முழுமையான ஒத்துழைப்புடன் விதிகளை மற்றும் ஒழுங்குவிதிகளை கடைப்பிடிப்பதிலும் பெறுபேறுகளை நோக்கிய ஆர்வம் மற்றும் ஆவலை எடுத்துக்காட்டும் நடத்தை.<br><br>முக்கிய நடத்தைசார் குறிகாட்டிகள்<br><br>1. எதிர்பார்க்கும் நடத்தைகளிலிருந்து விலகாமல் சுயக் கட்டுப்பாட்டை வெளிப்படுத்தல்<br>2. விதிகளை மற்றும் ஒழுங்குவிதிகளை அமுல்படுத்தும் போது விருப்பத்துடன் ஒத்துழைப்பு வழங்குதல்.<br>3. பெறுபேறுகளை பெறுவதற்கான விருப்பத்தைக் காண்பித்தல்<br>4. செயலில் ஆற்றலையும் சுறுசுறுப்பையும் வெளிப்படுத்தல் | கொடுக்கப்பட்ட பணிகளின் செயற்திறனில் முழுமனதுடன் பங்களித்தல் மற்றும் நிறுவனத்தின் சிறந்த நலன்களை மனதில்கொண்டு நெறிமுறையாக செயலாற்றுதல்<br><br>முக்கிய நடத்தைசார் குறிகாட்டிகள்<br><br>1. நிறுவனத்தின் நன்மைக் காக நேரத்தையும் சக்தியையும் அர்ப்பணித்தல்<br>2. ஒப்படைக்கப்பட்டுள்ள இலக்குகளை அடைவதில் அதிக ஈடுபாட்டைக் காட்டுதல்<br>3. ஒரு சிக்கலை அணுகுவதற்கான நேர்மறையான மற்றும் உற்சாகமான வழிகளைக் எடுத்துக்காட்டுதல் | பணிகளை மேற்கொள்கின்றபோது ஒரு மனதுடன் கவனம் செலுத்துதல் மற்றும் மற்றொரு நபரின் கன்ணோட்டத்தில் அவர்களின் அனுபவங்களைப் புரிந்துக்கொள்ளுதல்<br><br>முக்கிய நடத்தைசார் குறிகாட்டிகள்<br><br>1. ஒப்படைக்கப்பட்ட பணிகளைக் கையாள்வதில் கவனம் செலுத்துதல்<br>2. பணியுடன் தொடர்புடைய பொறுப்புகளைச் செயலாற்றுவதில் விரிவாக கவனம் செலுத்துதல்<br>3. கடமைகளைச் செய்வதில் மிகுந்த கவனம் செலுத்துதலை எடுத்துக்காட்டுதல்<br>4. ஏனையோரினகருத்தைக் செவிமடுக்கும் அதே நேரம், மற்றவர் ஒரு பிரச்சனையை எப்படிப் பார்க்கிறார் என்பதைப் புரிந்துகொள்ளவதற்கு முயலுதல் |

# பொருளடக்கம்

நோக்கு, செயற்பணி மற்றும் விழுமியங்கள்........ i
பணிப்பாளரின் செய்தி........ 1
முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம் (PIM) பற்றி........ 2
PIM Anthem ........ 3
PIM Anthem (English translation) ........ 4
முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் கீதம் (தமிழ் மொழிபெயர்பு)........ 5
நிறுவகமும் பல்கலைக்கழகமும்........ 6
நாம் யார் ? ........ 7
ஆளுகை ........ 8
நிறுவனத்தின் ஆளுகைச் சபை ........ 8
Organizational Structure ........ 15
நிறுவகத்தின் வலிமை ........ 16
நிறுவகத்தின் நிறுவக ஆளுகை ........ 17
இடர் முகாமைத்துவம் ........ 18
பெறுமதி ஊக்கி 1 – புத்தாக்கமிக்க கற்பித்தல் மற்றும் கற்றல் ........ 20
பெறுமதி ஊக்கி 2 – நுண்நோக்குமிக்க ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள் ........ 22
பெறுமதி ஊக்கி 3 – ஒத்துழைப்புக்கள் மற்றும் பங்குடைமைகளை வளப்படுத்துதல் ..... 28
பெறுமதி ஊக்கி 4 - எதிர்கால திறன் மேம்பாடு மற்றும் தலைமைத்துவ அபிவிருத்தி.. 39
இயக்குவிக்கும் காரணி 01 : உலகத் தரம் ........ 43
இயக்குவிக்கும் காரணி 02: முன்மாதிரியான ஆளுகை........ 46
இயக்குவிக்கும் காரணி 03: நிலைபெறுதன்மையை தூண்டுவித்தல் ........ 47
இயக்குவிக்கும் காரணி 04: சிந்தனைக்கு வழிகாட்டும் டிஜிற்றல் சிறப்பு ........ 54
தற்சமயச் செயலாற்றுகை (Current Performance) ........ 59
கற்கை நெறிகள் ........ 62
அனைத்து வசதிகளும் கொண்ட ஒரு நிறுவகம் (A Holistic Institute) ........ 71
ஒருவருக்கு ஒருவர் வழிகாட்டுதல் (One to One Mentoring) ........ 72
முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் பிறப்பிடம் (PIM. Genesis) ........ 72
பேராசிரியர் உதித்த லியனகே ஞாபகார்த்த நூலகம் ........ 73
பட்டப்பின்படிப்பு முகாமைத்துவ நிறுவக தகவல் தொழில்நுட்ப நிலையம் ........ 80
தர உறுதிப்பாடு மற்றும் தாரதர அங்கீகாரம் ........ 75
சமகால கற்றல் சூழல்........ 76
பட்டப்பின்படிப்பு முகாமைத்துவ நிறுவகத்தின் முன்னாள் மாணவர்கள் ........ 76
ஆராய்ச்சி........ 77
நிறுவகத்தால் வெளியிடப்பட்ட வெளியீடுகள்........ 77
உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு........ 80
ஒட்டுமொத்த நிதி மீளாய்வு........ 82
முன்னுறுகின்ற 10 ஆண்டுகளில் நிதியில் சிறப்புக்கூறுகள்........ 87
நிதிக் கூற்றுக்கள்........ 88
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை........ 119
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் வினாக்களுக்கான பதில்கள்........ 126

# பணிப்பாளரின் செய்தி



2024 ஆம் ஆண்டுக்கான முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் ஆண்டறிக்கையினை சமர்ப்பிப்பது மிகவும் மகிழ்ச்சியளிக்கின்றது. கடந்த ஆண்டானது முன்னொரு போதும் இல்லாதவாறு எமது நாட்டில் பொருளாதார மற்றும் சமூக நிச்சயமின்மையைக் கொண்ட சகாப்தம் ஒன்றினை அடையாளப்படுத்தியது. துரிதமான தொழில்நுட்பவியல் முன்னேற்றங்களும் மாறிவருகின்ற உலகளாவிய இயக்கவாற்றல்களும் நிலவுகின்ற உலகில், முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம் இலங்கையில் பட்டப்பின்படிப்பு கல்வியில் உன்னதத்திற்கான அதன் கடமைப் பொறுப்பில் உறுதியாக விளங்குகின்றது.

1998 தொடக்கம் சுயநிதியளிக்கப்படும் மற்றும் ஓரளவு தன்னாட்சிமிக்க அரசாங்க நிறுவனமொன்றான முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம் அதன் முகாமைத்துவ சபை மற்றும் கற்கைகள் சபை மூலம் வழிநடாத்தப்பட்டும் பணிக்கப்பட்டும் 2024 ஆம் ஆண்டுக்கான நிறுவன திட்டத்தினால் நிர்ணயிக்கப்பட்ட
இலக்குகளையும் குறிக்கோள்களையும் அடைவதன் மீது தொடர்ந்தும் அதன் கவனத்தை செலுத்தியது. அதிகரித்த உள்நாட்டு மற்றும் சர்வதேச மாணவர் சேர்வுகள் மற்றும் நிறுவகத்தின் கற்கைநெறிப் பட்டியல் முழுவதும் பட்டதாரி வெளியீடு அதேப்போன்று ஆராய்ச்சி வெளியீட்டில் அதிகரிப்பு என்பனவூடாக இது பிரதிபலிக்கப்பட்டது. நிறுவனங்களின் அவற்றின் எதிர்கால தலைவர்களை விருத்திசெய்வதில் நிறுவகத்திற்கு பெறுமதியினை சேர்ப்பதன் மூலம் நிறைவேற்று அபிவிருத்தி பிரிவில் அதன் பிரசன்னத்தை மேம்படுத்துவற்கு நிறுவகம் இயலுமாகவிருந்தது. அதன் கற்கும் பங்காளர்களுக்கு அக்கபூர்வமானதும் சிறந்த தரத்திலுமான கற்றல் சூழலை வழங்குவதற்கு உட்கட்டமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்தவதன் மீதும் நிறுவகம் கவனம் செலுத்தியது. இதற்கு மேலதிகமாக, தென்னாசியாவில் முகாமைத்துவ அபிவிருத்தி நிறுவகங்கள் அமைப்பின் (AMDISA) ஊடாக தென்னாசிய தர உத்தரவாத முறைமை தராதரச்சான்றை (SAQS) பெற்றுக்கொள்ளும் செயன்முறையில் நிறுவகம் துரித முன்னேற்றமடைந்தது.

ஆராய்ச்சி மற்றும் கல்விசார் உன்னதத்தைக் கொண்ட கலாசாரத்தை பேணிவளர்ப்பதில் பீடத்தின் அர்ப்பணிப்புக்கு கடந்த ஆண்டு சான்று பகர்கின்றது. குறிப்பான பிரயோகத்துடன் திட்டவட்டமான அறிவினை கலக்கச்செய்கின்ற பாடவிதானம் ஒன்றினூடாக நவீன பணி உலகை இயக்குவதற்கு அவசியமான தேர்ச்சி, அறிவு மற்றும் எண்ணப்பாங்குளைக் கொண்டு எமது கற்றல் பங்காளர்களுக்கு நாம் வசதியளித்துள்ளோம். எமது பீடமும் எமது கற்கும் பங்காளர்களும் உயர்தாக்கமிக்க அராய்ச்சிகளை வெளியிட்டுள்ளதுடன் மாநாடுகளை ஒழுங்கமைத்து, பங்கேற்று, பாராட்டுதல்களை பெற்று தேசிய மற்றும் சர்வதேச அங்கீகாரம் இரண்டையும் பெற்றுக் கொண்ட கூட்டான கருத்திட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

இறுதியாக, கடந்த ஆண்டானது முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம் அதன் சுயநிதியிடப்பட்ட அந்தஸ்தை வலுப்படுத்துவதற்கு இயலுமாகவிருந்த அதேவேளை, பொதுத் திறைசேரிக்கும் பங்களித்தது. எமது பகிரப்பட்ட தொலைநோக்கினை அடைவதில் அவர்களது அசைக்க முடியாத அதரவுக்கும் கடமைப்பொறுப்பிற்கும் எமது பீடத்திற்கும் அலுவலர்களுக்கும் அதேபோன்று நிறுவகத்தின் கற்றல் பங்காளர்களுக்கும் எனது உண்மையான நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன். ஒன்றாக இணைந்து நாம் “புதிய உலகத்திற்கான வணிகக்கல்லூரி” ஆகத் திகழ்வதற்கான எமது பயணத்தை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கேற்ப இலங்கையிலும் அதனைத் தாண்டியும் முகாமைத்துவ பட்டப்பின்பின்படிப்பு கற்கையின் எதிர்காலத்தை தொடர்ந்தும் நெறிப்படுத்துவோம்

கலாநிதி அசங்க ரணசிங்க
பணிப்பாளர்

# முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம் (PIM) பற்றி

இலங்கையின் உயர் முகாமைத்துவக் கல்வி மற்றும் பயிற்சியின் முன்னோடியாக, முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் 38 ஆண்டுகளுக்கும் மேலாக வர்த்தக சமூகத்திற்கும் தேசத்திற்கும் சேவை செய்து வருகின்றது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்துடன் இணைந்த, பகுதியளவான தன்னாட்சி நிறுவனமாக, இது தொழிற்துறை, கல்வி மற்றும் அரசாங்க பிரதிநிதிகளைக் கொண்ட முகாமைத்துவக் குழுவால் நிர்வகிக்கப்படுகிறது. முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் நாட்டின் பல்கலைக்கழக அமைப்பில் உள்ள ஒரே சுய-நிதியளிப்பு நிறுவனமாகும். இலங்கையில் முகாமைத்துவத்தின் மிகவும் சவாலான கற்றல் வாய்ப்புகளை வழங்குவதனால் முகாமைத்துவ பட்டபின்படிப்பு நிறுவனத்தின் பட்டநிலை பின்படிப்பு கற்கைநெறிகள் ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான முகாமையாளர்களை ஈர்க்கின்றன.


Pix by Kumara Edirisooriya

# PIM Anthem

ජයවද්දන පුර විදුදය සරසවි
පද්ම තටාකේ විකසිත පියුම ඔබ යි
පින්බර අප විද්‍යා භූමි
කිතු ගොස දස දෙස විදා
වොරැඳේවා ජය දද බන්දා
පින්බර අප විද්‍යා භූමි
දියුණුව සලසන නව්‍ය තාක්ෂණ
විදුරුවන් කිරණ නොමින් පෙරා ගෙන
මානව ශ්‍රම ගුණ නිසි ලෙස යොදවන
කළමනාකරණ විදුනැණ වඩවන
සරසවි වරමින් නැණ ගුණ රන්දන
ජය මඟ පාදන නියමු නිකේතන
සිරිලක සිරිසර මල්පල ගන්වන
විදුබිම නන්දන කරනෙමු වන්දන
ජයවද්දන පුර විදුදය සරසවි
පද්ම තටාකේ විකසිත පියුම ඔබ යි
පින්බර අප විද්‍යා භූමි
කිතු ගොස දස දෙස විදා
වොරැඳේවා ජය දද බන්දා
පින්බර අප විද්‍යා භූමි

ගී පද රචනය: ආචාර්ය එච් ඒ පී අබේවර්ධන
ගී තනු නිර්මාණය: විශාරද ආචාර්ය ඩබ් ඩී අමරදේව

# PIM Anthem (English translation)

Like unto a lotus fully blossomed,
In the pond: The Vidyodaya,
University of Jayewardenepura,
Our meritorious seat of learning,
May your fame spread,
In all ten directions,
With the banner of victory fluttering,

For providing us insight into new technology,
Imbibing the essence thereof,
Distilling the rays of science,
Enabling human endeavour appropriately,
Enhancing skills in management,
And by the grace of Saraswathi,
Fostering sublime qualities and virtues,
We adore you,
Our delightful centre of wisdom,
Like unto a lotus fully blossomed,
In the pond : The Vidyodaya, University of Jayewardenepura,
Our meritorious seat of learning,
May your fame spread,
In all ten directions,
With the banner of victory fluttering.

*English version by Dr. H A P Abeywardana*
*The composer of the original in Sinhala*

# முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் கீதம் (தமிழ் மொழிபெயர்ப்பு)

ஜயவர்தனபுர பல்கலைக் கழகம்
பத்ம தடாகத்தில் இலங்கிடும் கமலம் நீ

நம்முயிர் கல்விக் கூடம் நீ
உன் புகழ திக்கெட்டும் பரவ
உன் கொடி உயரப் பறந்திடுமே

நம்முயிர் கல்விக் கூடம் நீ

வளம்பெற வழிசெய் தொழில்நுட்ப ஆற்றல்
அறிவொளி தந்திடும் புதிய விஞ்ஞானம்
மானிட பண்புகள் இனிதே கற்றிட
முகாமைத் திறன்களை விருத்தி செய்திட
சரஸ்வதி அருளால் அறிவினை ஈந்து
ஜெயவழி காட்டிடும் பல்கலைக் கூடம்
தேசத்தின் பெருமையை பரப்பிடும் உனை நாம்
சிரமது தாழ்த்தி வணங்கிடுவோமே

ஜயவர்தனபுர பல்கலைக் கழகம்
பத்ம தடாகத்தில் இலங்கிடும் கமலம் நீ

நம்முயிர் கல்விக் கூடம் நீ
உன்புகழ் திக்கெட்டும் பரவ
உன் கொடி உயரப் பறந்திடுமே
நம்முயிர் கல்விக் கூடம் நீ

# நிறுவகமும் பல்கலைக்கழகமும்



1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் கீழ் 1986 ஆம் ஆண்டின் கட்டளைச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம், இலங்கையின் பல்கலைக்கழக அமைப்பில் உள்ள பத்து பட்டநிலை பின் படிப்பு நிறுவனங்களில் ஒன்றாகும். இது ஒப்பீட்டளவில் நிறுவப்பட்டு அதிக காலம் ஆகவில்லை என்றாலும், பட்டநிலை பின்படிப்பு நிறுவனங்களில் மிகப்பெரிய மாணவர் தொகையைக் கொண்ட நிறுவனமாகவும், நாட்டின் பல்கலைக்கழக அமைப்பில் உள்ள ஒரே சுய-நிதியளிப்பு உயர் கல்வி நிறுவனமாகவும் திகழ்கிறது.

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் இணைந்திருக்கும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் 60 ஆண்டுகளுக்கும் பழமைவாய்ந்தது. உண்மையில், ஒருவர் உயர் கல்வியின் இடமாக, அதன் பல ஆண்டு கால நீண்ட வரலாற்றை கருத்தில் கொண்டால், அது இன்னும் மிகப் பழமையானது ஆகும். இந்த நிறுவனத்தின் வரலாறு நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முந்தைய காலத்திற்கு செல்கிறது. அதாவது 1873 ஆம் ஆண்டில் அதி வணக்கத்துக்குரிய ஹிக்கடுவே ஸ்ரீ சுமங்கள நாயக்க தேரர் வித்யோதயா (அறிவின் விழிப்பு என்று பொருள்) என்ற பெயரில் ஒரு பிரிவேனாவை (பௌத்த மற்றும் பண்டைய ஆய்வுகளுக்கான நிறுவனம்) நிறுவியபோது இந்த உயர் கல்வி நிறுவனத்திற்கு அடித்தளம் இடப்பட்ட காலம் வரை செல்கின்றது.

1958 ஆம் ஆண்டில், அது பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் இலங்கை வித்யோதய பல்கலைக்கழகமாக மறுசீரமைக்கப்பட்டது. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் கீழ், அது இலங்கையின் புதிய நிர்வாகத் தலைநகரின் பெயரால், “ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்“ எனப் பெயரிடப்பட்டது. தற்போது, அங்கு 16,000 க்கும் மேற்பட்ட முழுநேர மாணவர்கள் மானிடவியல், சமூக அறிவியல், பிரயோக விஞ்ஞானம், முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகவியல், மருத்துவ விஞ்ஞானங்கள் பட்டப்படிப்பு கற்கைகள், தொழில்நுட்பம், பொறியியல், இணை சுகாதார விஞ்ஞானம், பல் மருத்துவம், நகர மற்றும் நீர்வாழ் உயிரியல் வளங்கள் மற்றும் கணினி பீடங்களில் சேர்ந்து கல்வி பயில்கின்றனர்.

# நாம் யார் ?







*அதிவணக்கத்துக்குரியஹிக்கடுவே ஸ்ரீ சுமங்கள நாயக்க தேரர்*

*வெலிவிட்டியே ஸ்ரீ சோரத்த தேரர் நாயக்க தேரர்*

*கலாநிதி குணபால நாணயக்கார*

*அதிவணக்கத்துக்குரிய*

மருத்துவவியல், கலை, விஞ்ஞானம், பொறியியல் மற்றும் சட்டம் போன்ற ஏனைய பாடங்களுடன் ஒப்பிடும்போது, இலங்கையில் உயர்கல்வித் துறையாக முகாமைத்துவக் கல்வி அண்மையில் தோன்றிய ஒன்றாகும். 1958 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் வித்தியோதய பிரிவேனாவுக்கு (கிழக்கத்தியக் கற்றலுக்கான உயர் கல்வி நிறுவனம்) பல்கலைக்கழக அந்தஸ்து வழங்கப்பட்டதன் மூலம் இந்த பயணம் 1959 இல் இலங்கை வித்தியோதய பல்கலைக்கழகம் தாபிக்கப்பட்டதன் மூலம் தொடங்கியது. வித்தியோதய பல்கலைக்கழகத்தின் ஸ்தாபக உபவேந்தர் அதி வணக்கத்துக்குரிய வெலிவிட்ட ஸ்ரீ சோரத்த நாயக தேரரின் தொலைநோக்குடன் கூடிய தலைமையின் கீழ், இலங்கை பல்கலைக்கழக கட்டமைப்புக்கு முகாமைத்துவக் கல்வியை அறிமுகப்படுத்துவது உட்பட புதிய திசைகளின் ஊடாக கல்வியை விரிவுபடுத்துவதற்கு தெளிவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

முகாமைத்துவ பட்டபின்படிப்பு நிறுவனம், என்பது ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்துடன் இணைந்த, பகுதிளயவு தன்னாட்சி நிறுவனமாகும். முகாமைத்துவம் மற்றும் நிர்வாக ஆய்வுகளின் பல்வேறு துறைகளில் பட்டப்பின்படிப்புக்கான ஆலோசனைகள், பயிற்சி, ஆய்வு மற்றும் அபிவிருத்தி ஊடாக

இலங்கையில் முகாமைத்துவத் துறையில் உயர்கல்வி மற்றும் தொழில்சார் தன்மையை மேம்படுத்துவதே இதன் குறிக்கோளாகும். தற்போது, இது தொழில்சார் முகாமைத்துவக் கல்வி மற்றும் பயிற்சியின் தேசியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஈடுபட்டுள்ளது. மேலும் ஆயிரக்கணக்கான உயர் மட்ட முகாமையாளர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கு கற்றல் மற்றும் திறன் மேம்பாட்டிற்கான சவாலான வாய்ப்புகளை வழங்குகிறது.இலங்கையின் உயர் முகாமைத்துவக் கல்வியின் முன்னோடியாக இருப்பதால், முகாமைத்துவ அறிவைப் புத்தாக்கம் செய்தல் மற்றும் பரப்புதல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும், உயர் கற்றல் விருப்பங்களைத் தேடுபவர்களுக்கும் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் வழிகாட்டுதலை வழங்குகிறது.

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பயணம் சுவாரஸ்யமானதும் முக்கியமான நிகழ்வுகளையும் உள்ளடக்கியதாகும். இது 1981 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் (கங்கொடவில, நுகேகொட) ஸ்ரீ சுமங்கல கட்டிடத்தில் ஓர் அர்ப்பணிப்புள்ள கல்வியாளரின் (கலாநிதி குணபாலா நாணயக்கார) தலைமையில்

தொடங்கப்பட்டது. கனடாவின் ஒட்டாவா மற்றும் கார்ல்டன் பல்கலைக்கழகங்களுடனான இணைப்புத் திட்டத்தின் ஊடாக இந்த பட்டப்பின்படிப்பு கற்கைப் பிரிவால் வியாபார நிர்வாக முதுமாணிப் பட்டம் (MBA)/ பொது நிர்வாக முதுமாணிப் பட்டம் (MPA) கற்கைநெறிகள் தொடங்கப்பட்டது. கல்வி நிகழ்ச்சிகளின் பிரபல்யம் காரணமாக அது 1986 சனவரி 1 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில், நாட்டின் உயர்மட்ட முகாமைத்துவக் கல்விக்கான முதன்மை நிறுவனமாக முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம் தாபிப்பதற்கு வழிவகுத்தது. சில மாதங்களுக்குப் பின்னர், 1986 ஏப்ரல் மாதத்தில், முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் தெஹிவளையில் (கொழும்புக்கு அருகில்) அமைந்துள்ள ஒரு சிறிய, இரண்டு மாடி கட்டிடமான ஸ்டார் இன்ஸ் ஹோட்டலுக்கு மாற்றப்பட்டது. அந்த இடத்தில் அது அடுத்த பத்து ஆண்டுகளுக்கு இயங்கியதுடன், அதன் செயல்பாடுகள் மற்றும் செயல்திறனில் விரைவான வளர்ச்சியைப் பதிவு செய்தது. 1995 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், ஒரு நிலத்தைக் கைப்பற்றுதல் மற்றும் அதிநவீன கட்டிட வளாகத்தை கட்டிய பின்னர், முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம், கொழும்பு 8, லெஸ்லி ரணகல மாவத்தை, இலக்கம் 28 இல் அமைந்துள்ள அதன் சொந்த கட்டிடத்திற்கு மாற்றப்பட்டது. அன்று தொடக்கம் இருபத்தெட்டு ஆண்டுகள் கடந்துள்ளதுடன், அந்த காலப் பகுதியில் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் பௌதீக மற்றும் மனித வளங்கள், வழங்கப்படும் சேவைகள், வெளியீடுகள் மற்றும் மிகை ஆகியவற்றின் அடிப்படையில் வேகமாக வளர்ந்துள்ளது. மேலும் அதன் செயல்பாடுகள் இலங்கை கடற்கரைகளுக்கு அப்பாலும் விரிவடைந்துள்ளன.

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம் இலங்கையின் உயர்மட்ட முகாமைத்துவக் கல்வித் துறையில் பல முதன்மையான சந்தர்ப்பங்களை உருவாக்கியுள்ளது. பரந்த அளவிலான செயல்பாடுகள் ஊடாக விரிவாக்கப்பட்டுள்ள இந்த முன்னோடி நிறுவனம், கல்வித்துறை, தொழில்துறை, நிர்வாகிகள், தொழில்முனைவோர், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் ஒட்டுமொத்த சமூகத்திற்கும் ஒரு கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறது. அது உருவாக்கிய முதன்மையான சந்தர்ப்பங்களில் பின்வருவன குறிப்பிடத்தக்கவையாகும்:

- வெளிநாட்டு ஒத்துழைப்புடன் வழங்கப்படும் முதலாவது வியாபார நிர்வாக முதுமாணிப் பட்டம் / பொது நிர்வாக முதுமாணிப் பட்டம்* (1981);
- வியாபார நிர்வாக முதுமாணிப் பட்டம் / பொது நிர்வாக முதுமாணிப் பட்டம் (கற்கைநெறியின் முக்கிய அம்சமாக அறிமுகப்படுத்தப்பட்ட முதலாவது தங்குமிடப் பயிற்சி பட்டறை (1982 முதல்)
- இலங்கை பல்கலைக்கழக முறைமையில் உயர் கல்வி நிறுவனமொன்றினால் நடத்தப்பட்ட முதலாவது முகாமைத்துவ /நிறைவேற்று அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (1990);
- இலங்கையில் நடைபெற்ற முகாமைத்துவ ஆய்வுகள் தொடர்பான முதலாவது ஆராய்ச்சி மாநாடு (1992);
- இலங்கை பல்கலைக்கழக முறைமையில் வெளியிடப்பட்ட முதலாவது கல்விசார் பதவியணி கையேடு (1994);
- சொந்த அமைவிடத்தைக் கொண்ட முதலாவது இலங்கை பட்டப்பின்படிப்பு நிறுவனம் (1995);
- இலங்கையில் தொடங்கப்பட்ட முகாமைத்துவ ஆய்வுகள் தொடர்பான முதலாவது கல்விசார் சஞ்சிகை (1996);
- நிதியியல் தன்னாட்சியை அனுபவிக்கும் இலங்கை பல்கலைக்கழக முறைமையில் உள்ள முதலாவது (மற்றும் ஒரேயொரு) உயர் கல்வி நிறுவனம் (1998 முதல்);
- சுனாமி பேரழிவின் போது நிறுவன சமூகப் பொறுப்புணர்வுத் திட்டத்தில் ஈடுபட்ட முதலாவது

உயர் கல்வி நிறுவனம் (2005);

- வெளிநாட்டில் தனது கற்கைநெறிகளை (வியாபார நிர்வாக முதுமாணி) வழங்கும் இலங்கை பல்கலைக்கழக முறைமையில் உள்ள முதலாவது உயர் கல்வி நிறுவனம் (2007);
- Superbrand (2007) மற்றும் ISO 9001: 2008 தரநிலையைப் பெற்று 9001:2015 இற்கு சீராக மாற்றமடைந்த முதலாவது இலங்கை பல்கலைக்கழக முறைமையில் உள்ள முதலாவது உயர் கல்வி நிறுவனம்
- தொழில்சார்ந்த வியாபார நிர்வாக பட்டப்பின் படிப்பு கற்கைநெறிகளை [சுங்க நிர்வாகம் (2009) மற்றும் சர்வதேச வணிகம் மற்றும் ஏற்பாட்டுச் சேவைகள் (2010)] ஆரம்பித்த இலங்கை பல்கலைக்கழக முறைமையில் உள்ள முதலாவது உயர் கல்வி நிறுவனம்
- தனது மிகையில் ஒரு பகுதியை பொதுத் திறைசேரியிடம் வழங்கும் இலங்கை பல்கலைக்கழக முறைமையில் உள்ள முதலாவது உயர் கல்வி நிறுவனம் (2022);
- ஆண்டின் 361 நாட்கள் திறந்திருக்கும் முதலாவது (மற்றும் ஒரேயொரு) இலங்கை பல்கலைக்கழக முறைமையில் உள்ள முதலாவது உயர் கல்வி நிறுவனம்.

இலங்கையர் வாழ்க்கையின் தனிநபர், நிறுவன மற்றும் சமூக மட்டங்களில் முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம் மகத்தான பங்களிப்பை வழங்கியுள்ளது. முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனத்தால் அறிவூட்டப்பட்ட ஏராளமான முகாமையாளர்கள் மற்றும் நிர்வாகிகள் வணிகத் தலைவர்கள், உயர் மட்ட நிர்வாகிகள்/ முகாமையாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள், கல்விமான்கள் மற்றும் தொழில்முனைவோர் என தங்கள் தொழில்களில் அழியாத முத்திரையை பதித்துள்ளனர். பட்டப்படிப்பு கற்கைநெறியால் ஏற்படுத்திய மாற்றத்தக்க மாற்றமானது, அவர்களின் நிறுவனங்களை சிறப்பை நோக்கி வழிநடாத்த அவர்களுக்கு உதவியுள்ளது, இதன் விளைவாக பொருளாதாரம் மற்றும் சமூகத்தில் சாதகமான தாக்கம் ஏற்பட்டுள்ளது. மேலும், நவீன முகாமைத்துவ அறிவில் பயிற்சி பெற்ற இரண்டாம் நிலை முகாமையாளர்கள் தங்கள் பணியிடங்களின் வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளனர். தனித்துவமான ஆனால் முக்கியமான துறையில், முகாமைத்துவ பட்டநிலை பின்படிப்பு நிறுவனத்தின் ஆராய்ச்சிப் பணிகள், ஆலோசனை சேவைகள் மற்றும் வெளியீடுகள், இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாட்டில முகாமைத்துவ நடைமுறைகள் பற்றிய அறிவை விரிவாக்க உதவியுள்ளன. மேலும், அதன் சட்டப்பூர்வ பொறுப்புகளுக்கு மேலதிகமாக, பல செல்வாக்குமிக்க நிறுவன சமூகப் பொறுப்புணர்வுத் திட்டங்கள் மூலம் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம், வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியுள்ளது. நிதி ரீதியாக சுதந்திரமான நிறுவனமாக இருப்பதுடன், தேவைப்படும்போது அரசாங்க நிதிகளுக்கு கூட பங்களிப்பதில் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் பெருமிதம் கொள்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் நாட்டின் ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு பின்பற்றத்தக்கதான ஒரு முன்மாதிரியாகும்.

** இலங்கையின் முதலாவது வியாபார நிர்வாக முதுமாணிப் பட்டம் / பொது நிர்வாக முதுமாணிப் பட்டம் கற்கைநெறிகளை வழங்கிய பெருமை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திற்கு உரியதும். 1968 இல் தொடங்கப்பட்ட இந்த கற்கைநெறிகள் ஏழு வருடங்களுக்குப் பின்னர் 1975 இல் முடிவுறுத்தப்பட்டது.*

# ஆளுகை

# நிறுவனத்தின் ஆளுகைச் சபை

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 24அ பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் கலந்தாலோசித்து, உயர் கல்வி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சராக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு சனாதிபதியினால் வெளியிடப்பட்ட கட்டளையின் மூலம் 1986 சனவரி 1 ஆம் திகதி சட்டரீதியாக தாபிக்கப்பட்ட நிறுவனமாகும். இந்த கட்டளை 1985 திசெம்பர் 24 ஆம் திகதி 381/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் அதிகாரங்களும் செயற்பாடுகளும், அதன் அதிகாரிகள் மற்றும் அவற்றின் அமைப்பு, கடமைகள் மற்றும் செயல்பாடுகள் இலங்கை பாராளுமன்றத்தால் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் ஒழுங்கு விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் தற்போதைய நடைமுறையில் உள்ள ஒழுங்கு விதிகள் 2018 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க ஒழுங்கு விதிகளாகும். இது இதற்கு முந்தைய 1985 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க ஒழுங்கு விதிகள் மற்றும் 1996 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க ஒழுங்கு விதிகள் ஆகியவற்றை இரத்துச் செய்கின்றது. சந்தைப்படுத்தல், மனித வள முகாமைத்துவம், நிதி, மூலோபாய முகாமைத்துவம் மற்றும் பொது நிர்வாகம் உள்ளிட்ட பல்வேறு முகாமைத்துவத் துறைகளில் மாணவர்களைச் சேர்க்கவும் பட்டபின்படிப்பு கல்வியை வழங்கவும் முகாமைத்துவ பட்டபின்படிப்பு நிறுவனத்திற்கு அதன் ஒழுங்குவிதிகள் அதிகாரம் வழங்குகின்றன. முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தால் வழங்கப்படும் பட்டபின்படிப்பு கற்கைநெறிகள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மூதவை மற்றும் ஆளுகைச் சபையின் பரிந்துரையின் பேரில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம் அதன் நடவடிக்கைகளின் வருடாந்த அறிக்கையைத் தயாரிக்கின்றது. வருடாந்த கணக்கு அறிக்கை இலங்கை கணக்காய்வாளர் நாயகத்தினால் கணக்காய்வு செய்யப்படுகின்றது. வருடாந்த அறிக்கை மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை இலங்கை பாராளுமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். முகாமைத்துவ சபை இலங்கை பாராளுமன்றத்திடம் பொறுப்பு கூறுதல் வேண்டும். விளக்கங்களைப் பெறவும் ஆலோசனைகளை வழங்கவும் முகாமைத்துவ சபை பாராளுமன்றத்தின் அரசாங்கத் தொழில்முயற்சிகள் பற்றிய குழுவுக்கு அழைக்கப்படலாம். எனவே, முகாமைத்துவ பட்டபின்படிப்பு நிறுவனத்தின் ஒட்டுமொத்த செயற்பாடுகளும் இலங்கை பாராளுமன்றத்தால் கண்காணிக்கப்படுகின்றது.

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனத்தில், மூலோபாயத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு குறிக்கோள் மற்றும் மூலோபாயத்திற்கும், முக்கிய செயலாற்றக் குறிகாட்டிகள் மற்றும் பொறுப்புகூற வேண்டிய நபர்களை அடையாளம் காணப்படுகிறது. மூலோபாயத் திட்டத்தின் அடிப்படையில் வருடாந்த செயல்பாட்டுத் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன, மேலும் ஒவ்வொரு மூலோபாயத்தின் கீழும் மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கியமான செயல்பாடுகள் பட்டியலிடப்படுகின்றன. ஒவ்வொரு செயல்பாட்டிற்கும் முக்கியமான செயல்திறன் குறிகாட்டிகள் மற்றும் ஒவ்வொரு மூலோபாய நடவடிக்கையையும் செயல்படுத்துவதற்கு பொறுப்பான நபரும் அடையாளம் காணப்படுகிறது. இம்முக்கிய செயலாற்றக் குறிகாட்டிகளின் அடைவுகள் பணிப்பாளரால் கண்காணிக்கப்படுவதுடன்,

அவ்வப்போது முகாமைத்துவ சபைக்கு தெரிவிக்கப்படுகின்றது. சில செயற்பாட்டு விடயங்கள் தொடர்பான முடிவுகள் பணிப்பாளர், சிரேஷ்ட உதவிப் பதிவாளர், பிரதி நிதியளார், தர உத்தரவாதம் மற்றும் அங்கீகார நிலையத்தின் தலைவர் கொண்ட முகாமைத்துவக் குழுவால் எடுக்கப்படுகின்றன.

ஆராய்ச்சி தொடர்பான செயல்பாட்டு நடவடிக்கைகள் ஆராய்ச்சி ஆலோசனைக் குழுவால் வழங்கப்படும் வழிகாட்டுதலின் கீழ் ஆராய்ச்சி ஒருங்கிணைப்பாளரால் மேற்கொள்ளப்படுவதுடன், அக்குழுவானது பணிப்பாளர், ஆராய்ச்சி ஒருங்கிணைப்பாளர், தர உத்தரவாதம் மற்றும் அங்கீகார நிலையத்தின் தலைவர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் படிப்பு கற்கை பீடத்தின் பீடாதிபதி மற்றும் முகாமைத்துவ சபையின் நியமன உறுப்பினர் ஆகியோரைக் கொண்டமைந்துள்ளது.

தர உத்தரவாத செயற்பாடுகள், தர உத்தரவாதம் மற்றும் அங்கீகார நிலையத்தால் மேற்கொள்ளப்படுகின்றது. செயல்பாட்டுக் குழு தர உத்தரவாதம் மற்றும் அங்கீகார நிலையத்தின் குழுவாகுவதுடன், இதில் பணிப்பாளர், தர உத்தரவாதம் மற்றும் அங்கீகார நிலையத்தின் தலைவர், கற்கைநெறி ஒருங்கிணைப்பாளர்கள், ஆராய்ச்சி ஒருங்கிணைப்பாளர், ISO ஒருங்கிணைப்பாளர், உதவி நூலகர், சிரேஷ்ட உதவிப் பதிவாளர் மற்றும் சிரேஷ்ட முகாமையாளர்/தகவல் தொழில்நுட்ப அலுவலர் ஆகியோரைக் கொண்டமைந்துள்ளது. இக்குழுவின் மாதாந்த கூட்டங்களில் அனைத்து தர உத்தரவாதம் மற்றும் அங்கீகார நடவடிக்கைகள் விவாதிக்கப்பட்டு தேவையான தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. சில தீர்மானங்கள அனுமதிக்காக முகாமைத்துவ சபை அத்துடன்/அல்லது கல்வி சபைக்கு தெரிவிக்கப்படுகின்றன.

நூலகத்தின் செயல்பாட்டு நடவடிக்கைகள், பணிப்பாளரிடம் நேரடியாக அறிக்கையிடுவதுடன், உதவி நூலகரால் மேற்கொள்ளப்படுகின்றது. நூலகத்தின் நடவடிக்கைகளின் முன்னேற்றம் தர உத்தரவாதம் மற்றும் அங்கீகார நிலையத்தின் குழு கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டு தேவையான வழிகாட்டுதல் வழங்கப்படுகிறது.

இக்குழுவில் எடுக்கப்படும் கல்விசார் நடவடிக்கைகள் தொடர்பான முடிவுகள் பீடாதிபதி கூட்டங்களில் பீடத்திற்கு அறிவிக்கப்படுகின்றன. இக்கூட்டங்களில் பீட உறுப்பினர்களால் தெரிவிக்கப்படும் கருத்துகள் செயல்பாட்டு நடவடிக்கைகளில் உரியவாறு கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

## முகாமைச் சபை *(Board of Management)*

நிறுவனத்தின் கல்விசார் மற்றும் நிறைவேற்று அமைப்பான தற்போதைய முகாமைச் சபையில் பின்வருவோர் இடம்பெறுகின்றனர்

**கலாநிதி கெலும் கமகே (தலைவர்)**

2024 மே 07 வரை முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தில் பணிப்பாளராக பணியாற்றினார். இவர் முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராவதுடன் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் பதவியை முன்னர் வகித்தார். கலாநிதி கமகே அவரது கல்விசார் தலைமைத்துவம் மற்றும் பட்டப்பின்படிப்பு முகாமைத்துவக் கல்வி அத்துடன் ஆராய்ச்சி என்பவற்றுக்கான பங்களிப்புகளுக்காக அங்கீகரிக்கப்பட்டவராவார்.

**கலாநிதி அசங்க ரணசிங்க (தலைவர்)**

2024 மே 08 தொடக்கம் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் பணிப்பாளராக இருந்து வருவதுடன் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் முன்னாள் தலைவருமாவார். 30 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொழிற்துறை மற்றும் கல்விசார் அனுபவத்துடன் இவர் விரைவாக விற்பனை செய்யப்படும் நுகர்வோர் பொருட்கள், திரவப் பெற்றோலிய எரிவாயு, பெற்றோலியம். வாகனம், விவசாயம் மற்றும் நவீன சில்லறை துறைகள் போன்ற துறைகளுக்கிடையில் சிரேஷ்ட வகிபாகங்களை வகித்து, நிறுவன உபாயம், சந்தைப்படுத்தல், வழங்கல் சங்கிலி மற்றும் ஆராய்ச்சி அத்துடன் அபிவிருத்தி என்பவற்றில் நிபுணத்துவத்தைக் எடுத்துக்காட்டுகின்றார். பட்டப்பின்படிப்பு கற்பித்தலில் ஏறத்தாள 01 தசாப்த அனுவத்துடன் முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரான கலாநிதி ரணசிங்க இரசாயனவியலில் முதல் பட்டத்தையும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் பட்டப்பின்படிப்பு தகமைகளையும் வாங்கவருபவர் சந்தைப்படுத்தலில் கலாநிதி பட்டத்தையும் பெற்றவராவார். அவரது உபாய ரீதியான தலைமைத்துவம், ஆராய்ச்சி வெளியீடுகள் முகாமைத்துவ மற்றும் சந்தைப்படுத்தலில் தொழில்சார் அபிவிருத்திக்கான பங்களிப்புகள் என்பவற்றுக்காக இவர் பரந்தளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளார்.

**திரு. ரி. ஜே. எம். பண்டார**

நிதி அமைச்சின் அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமாவார். இவர் அரசாங்க துறை நிதியியல் முகாமைத்துவம். ஆளுகை மற்றும் அரசாங்க தொழில்முயற்சி மேற்பார்வை என்பவற்றில் பரந்த நிபுணத்துவத்தை கொண்டவர். திரு. பண்டார அரசாங்கத்திற்கு சொந்தமான தொழில்முயற்சிகளின் நிதியியல் ஒழுக்கத்தை அதிகரித்தல் மற்றும் செயலாற்றத்தை மேம்படுத்துகின்ற கொள்கைகள் என்பவற்றை நடைமுறைப்படுத்துவதில் முக்கிய பங்காற்றுகின்றார்.

**கலாநிதி ஹர்ஷ கப்ரால்**

கம்பனி, வர்த்தக, புலமைச்சொத்து, சர்வதேச வணிகச் சட்டம் என்பவற்றில் 37 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சட்டத் தொழில் புரிவதுடன் கூடிய சனாதிபதி சட்டத்தரணியாவார். இவர் கன்பேரா பலகலைக்கழகத்திலிருந்து நிறுவன சட்டத்தில் கலாநிதி பட்டத்தை பெற்றுள்ளதுடன் இலங்கையின் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தை வடிவமைப்பதில் முக்கிய ஏதுவாக இருந்தார். கலாநிதி கப்ரால் தேசிய சேமிப்பு வங்கி மற்றும் டோக்கியோ சீமெந்து குழுமம் என்பவற்றில் தலைவராக பணியாற்றுவதுடன் பல எண்ணிக்கையான நிறுவன சபையிலும் தேசிய சட்ட ஆணைக்குழுவிலும் இடம்பெறுகின்றார். பரிசிலுள்ள சர்வதேச வர்த்தக நீதிமன்ற நடுத்தீர்ப்பின் முன்னாள் உறுப்பினரான இவர் சிரேஷ்ட வருகைதரு விரிவுரையாளரும் நிறுவன மற்றும் நடுத்தீர்ப்பு சட்டங்களில் பரந்தளவில் அறியப்படும் பதிப்பாசிரியருமாவார்.

**திரு. ரவி ஜயவர்தன**

மெலிபன் பிஸ்கட் மெனுபெக்சரிஸ் (பிரைவட் லிமிடெட்) நிறுவனத்தின் குழும பிரதம நிறைவேற்று அலுவலராவார். இங்கு இவர் கம்பனியின் உபாய வளர்ச்சி மற்றும் உலகளாவிய சந்தை விரிவுபடுத்தலுக்கு தலைமைத்துவம் வழங்குகின்றார். நிறுவன தலைமைத்துவம் மற்றும் வர்த்தகநாம முகாமைத்துவத்தில் பரந்த அனுபவத்துடன் கூடிய இவர் விரைவாக விற்பனை செய்யும் வாடிக்கையாளர் பொருட்கள் துறையில் புத்தாக்கத்தையும் தொழிற்பாட்டு ரீதியான உன்னதத்தையும் இயக்கியுள்ளார். திரு ஜயவர்த்தன முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தில் வருகைதரு பீட உறுப்பினராகவும் பணியாற்றி வளர்ந்து வருகின்ற வியாபார தலைவர்களுடன் அவரது தொழிற்துறை நிபுணத்துவத்தை பகிர்ந்து கொள்கின்றார்.

**பேராசிரியர் துஷான் ஜயவிக்கிரம**

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் பீடாதிபதியாவார். அனுபவம் வாய்ந்த கல்விசார் ஆராய்ச்சியாளரான இவர் முகாமைத்துவ கல்விக்கும் பாடவிதான அபிவிருத்திக்கும் பரந்தளவு பங்களித்துள்ளார். பேராசிரியர் ஜயவிக்கிரம முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் வருகைதரு பீட உறுப்பினராகவும் பணியாற்றி இங்கு பட்டப்பின்படிப்ப மாணவர்களுடன் முகாமைத்துவம் மற்றும் தலைமத்துவம் என்பவற்றில் நிபுணத்துவத்தை பகிர்ந்து கொள்கின்றார்.

**திருமதி திலகா ஜயசுந்தர**

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளராவார். இவர் தேசிய கல்விக் கொள்கை மற்றும் நிருவாகத்தில் தலைமைத்துவத்தை வழங்குகின்றார். பாரியளவு கல்விசார் மற்றும் தொழில்சார் முன்முயற்சிகளை முகாமைசெய்வதில் பரந்த அரசாங்க துறை அனுபவத்தைக் கொண்டுள்ளார். முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் பழைய மாணவரான திருமதி ஜயசுந்தர பொது நிர்வாகத்தின் முதுமாணி பட்டத்தினைப் பெற்றவராவார். இலங்கையின் கல்வி முறையை முன்னேற்றுவதில் அவரது கடமைப்பொறுப்புக்காக அங்கிகரிக்கப்பட்டவராவார்.

**பேராசிரியர் நில்மினி லியனகே**

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் தொழில் நுட்ப பீடத்தின் பீடாதிபதியாவார் இவர் முன்னேற்றகரமான தொழில் நுட்பக் கல்வி மற்றும் துறைகளுக்கிடையிலான புத்தாக்கத்தில் பரந்த அனுபவத்தடன் கூடிய தொழில்சார் மற்றும் ஆராய்ச்சியினை சாதித்தவராவார். பேராசியர் லியனகே பீடத்திற்கு உபாய ரீதியான தலைமைத்துவத்தை வழங்கி நவீன கல்வி, கற்கைநெறிகள் மற்றும் ஆராய்ச்சி முன்முயற்சிகளில் முக்கிய பங்காற்றுகின்றார்.

**கலாநிதி ரவி லியனகே**

றைகம் மார்க்கட்டிங் சேவிசஸ் பிரைவட் லிமிடெட் நிறுவனத்தின் தலைவரான இவர் கம்பனியின் உபாய ரீதியான வளர்ச்சி மற்றும் சந்தை அபிவிருத்திக்கு தலைமை தாங்குகின்றார். வியாபார முகாமைத்துவம் மற்றும் சந்தைப்புடுத்தலில் பரந்த வகையிலான அனுபவத்துடன் கூடிய இவர் றைகம் வர்த்தக நாமத்தை கட்டியெழுப்புவதிலும் விரைவாக விற்பனையாகின்ற வாடிக்கையாளர் விற்பனைத்துறையில் அதன் பிரசன்னத்தை விரிவுபடுத்துவதிலும் ஏதுவாக இருந்த வருகின்றார். கலாநிதி லியனகே அவரது தொழில்முயற்சிசார் தொலைநோக்கிற்காகவும் இலங்கையின் வாடிக்கையாளர் தொழிற்துறைக்கான பங்களிப்புக்காகவும் அங்கீகரிக்கபட்டவராவார்.

**பேராசிரியர் ரசிக பெரேரா**

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பட்டதாரி கற்கைகள் பீடத்தின் பீடாதிபதியாவார். சிறப்பு மிக்க கல்வி மற்றும் ஆராய்ச்சியாளரான இவர் பட்டப்பின்படிப்பு கல்வி மற்றும் துறைகளுக்கிடையிலான ஆராய்ச்சி என்பவற்றில் உபாய ரீதியான தலைமைத்துவத்தை வழங்குகின்றார். பட்டதாரிக் கல்வி புலமைப்பரிசிலினை முன்னேற்றுதல் மற்றும் பல்வகை கற்கை துறைகளுக்கிடையில் புத்தாக்கத்தை பேணிவளர்த்தல் என்பவற்றுக்காக பேராசியர் பெரேரா அங்கீகரிக்கப்பட்டவராவார்.

**திரு. தீபால் சூரியஆராச்சி**

ஏஜஏ குழுமத்தின் நிறைவேற்றுதரமல்லாத பணிப்பாளரும் காப்புறுதி மற்றும் நிதியியல் சேவைகள் துறையில் பரந்த அனுபவத்துடன் கூடிய மதிப்பளிக்கப்படும் வியாபார தலைவருமாவார். உபாய முகாமைத்துவம். சந்தைப்படுத்தல் மற்றும் தலைமத்துவ அபிவிருத்தி ஆகிய அவரது நிபுணத்துவத்துக்காக இவர் அறியப்படுகின்றார். திரு. சூரியஆராச்சி சாதனை மிக்க நூலாசிரியரும் பேச்சாளருமாவதுடன் நிறுவன தலைமைத்துவம் மற்றும் தனிப்பட்ட அபிவிருத்தி என்பவற்றுக்கான அவரது பங்களிப்புக்காக பரந்தளவில் அங்கீகரிக்கப்பட்டவராவர்

**திரு. லலித் வீரதுங்க**

இலங்கையின் சனாதிபதியின் முன்னாள் செயலாளரான இவர் கொள்கை வகுத்தல் மற்றும் தேசிய நிர்வாகம் என்பவற்றில் சிரேஷ்ட அரசாங்க சேவை அனுபவத்தை கொண்டு சேவையில் தசாப்தத்திற்கு மேற்பட்ட அனுபவமுடையவராவார். ஆளுகை மறுசீரமைப்புகள் மற்றும் உபாய அபிவிருத்தி முயற்சிகளை வடிவமைப்பதில் அரசாங்கத்தின் அதியுயர் மட்டத்தில் இவர் முக்கிய பங்காற்றியுள்ளார். திரு வீரதுங்க முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தில் வருகைதரு பீட உறுப்பினராக பணியாற்றுவதுடன் பொது நிர்வாகம் மற்றும் தலைமைத்துவம் என்பவற்றில் அவரது அனுபவத்தை பகிர்ந்து கொள்கின்றார்.

**திரு. திரு. கமல் ரோஹித உடுவாவல**

சுற்றாடல் அமைச்சின் செயலாளரான திரு. கமல் ரோஹித உடுவாவல, இலங்கை நிர்வாக சேவையின விசேட தர அலுவலராவார். இவர் ”எளிய டிஜிட்டல் இலத்தரனியல் வாக்கு கருமபீடம்” (1997) இற்கான காப்புரிமையைப் பெற்றுள்ளதுடன் மருந்தாக்கல் இராஜாங்க அமைச்சின் செயலாளர் மற்றும் கல்வி, பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மற்றும் உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சுக்களில் மேலதிக செயலாளர் உட்பட பல முக்கிய நிர்வாகப் பதவிகளில் பணியாற்றியுள்ளார். தராதரஅங்கீகாரம் மற்றும் தர உறுதிப்பாட்டுற்கான நிலையியல் குழுவின் தலைவராகவும் (2018–2019), பொது திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் நாயகமாகவும் பணியாற்றியுள்ளார்.

## கற்கைச் சபை *(Board of Studies)*

நிறுவனத்தின் வியாபார நிர்வாகத்தில் கற்கை சபையும் பொது நிர்வாகத்தில் கற்கை சபையும் இவ் ஆண்டில் கற்பித்தல், பரீட்சைகள் மற்றும் ஆராய்ச்சி தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தி, பின்வரும் உறுப்பினர்கள் இச் சபைகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

கலாநிதி அசங்க ரணசிங்க (தலைவர்)
பணிப்பாளர், முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம்

சிரேஸ்ட பேராசிரியர் அஜந்த தர்மசிறி
ஒருங்கிணைப்பாளர், DBA கற்கை முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம்

கலாநிதி ரவி பர்னாந்து
தலைவர், உலகளாவிய நிறுவன மூலோபாய நிலைபெறுதன்மை

கலாநிதி அனில் ஜாசிங்க செயலாளர், சுற்றாடல் அமைச்சு

கலாநிதி ஏ கே எல் ஜயவர்தன
ஒருங்கிணைப்பாளர், ஆராய்ச்சி, முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம்

பேராசிரியர் துஷான் ஜயவிக்ரம
பீடாதிபதி, முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

கலாநிதி ட்ரெவர் மெண்டிஸ்
ஒருங்கிணைப்பாளர், EMBA கற்கைகள், முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம்

சிரேஸ்ட பேராசிரியர் பத்மலால் மணகே துணைவேந்தர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

கலாநிதி ட்ராவிஸ் பெரேரா
ஒருங்கிணைப்பாளர், *PhD* கற்கைகள், முதுமாணி முகாமைத்துவ நிறுவனம்

பேராசிரியர் ஜயந்த ரத்னசேகர துணைவேந்தர், ICST பல்கலைக்கழகம்

கலாநிதி ஆர் எச் எஸ் சமரதுங்க
சனாதிபதியின் சிரேஸ்ட பொருளாதார ஆலோசகர் தலைவர்

கலாநிதி அருள் சிவகணநாதன்
முன்னாள் தலைமை நிறைவேற்று அலுவலர், ஹேலிஸ் பிசினஸ் சொல்யூஷன்ஸ் இன்டர்நேஷனல் (பிரைவேட்) லிமிடெட்

திரு. லலித் வீரதுங்க
இலங்கை சனாதிபதியின் முன்னாள் செயலாளர்

# Organizational Structure



# நிறுவகத்தின் வலிமை (Strength of the Institute)

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம் அந்தந்த துறைகளில் புகழ்பெற்ற நிபுணர்களைக் கொண்டுள்ளதுடன், அவர்கள் வகுப்பறைக்கு அறிவு மற்றும் அனுபவத்தைக் கொண்டுசேர்க்கின்றனர். வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைக்கு அர்ப்பணிப்புடன், எங்கள் ஆசிரியர்கள் ஒரு ஒத்துழைப்பு கற்றல் சூழலை பேணிவளர்க்கின்றார்கள். இச்சூழலில், கற்றல் பங்காளர்கள் தங்கள் ஆராய்ச்சி மற்றும் கற்றல் முயற்சிகளின் எல்லைகளைத் தாண்டிச் செல்ல ஊக்குவிக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட ஆலோசனை, ஒத்துழைப்புக் கருத்திட்டங்கள் மற்றும் பல்துறை கருத்தரங்குகள் மூலம், எமது ஆசிரியர்கள் மாணவர்களின் கல்விப் பயணத்தை வடிவமைப்பதில் முக்கிய பங்குவகித்து, அவர்கள் விரும்பும் அந்தந்த துறைகளில் தலைவர்களாக உருவெடுப்பதை உறுதிசெய்கிறார்கள்.

தற்போது, முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம் வழங்கும் கற்கைநெறிகள் பின்வருமாறு:

- கலாநிதிப் பட்டம் (PhD)
- வியாபார நிர்வாகத்தில் கலாநிதிப் பட்டம (DBA)
- வியாபார நிர்வாகத்தில் முதுமாணி பட்டம் (MBA)*
- பொது நிர்வாகத்தில் முதுமாணி (MPA)
- சுங்கம் மற்றும் சர்வதேச வணிகம் தொடர்பான வியாபார நிருவாக முதுமாணி பட்டம் (MBA-CIT)
- கல்வி முகாமைத்துவம் தொடர்பாக பொது நிர்வாகத்தில் முதுமாணி பட்டம் (MPA-EM)**
- வரிவிதிப்பில் வியாபார நிர்வாகத்தில் முதுமாணி பட்டம் (MBA-T)
- வணிக நிர்வாகம் தொடர்பான நிறைவேற்று முதுமாணி பட்டம் (EMBA)***
- முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின்படிப்பு டிப்ளோமா (PDM)

* வியாபார நிர்வாகம் தொடர்பான முதுமாணிப் பட்டப்படிப்பு (MBA) இலங்கை *மட்டுமின்றி* ஐக்கிய அரபு இராச்சியம், கட்டார், குவைட், ஓமான் மற்றும் பஹரேன் ஆகிய நாடுகளில் வழங்கப்படுகிறது.

** 2024 தொடக்கம் கல்வி முகாமைத்துவம் தொடர்பாக பொது நிர்வாகத்தில் முதுமாணி பட்டம் இலங்கை *மட்டுமின்றி சீன* மாணவர்களுக்காக தொடங்கப்பட்டது.

*** 2023 தொடக்கம் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம் சீன மாணவர்களுக்கு வணிக நிருவாகம் தொடர்பான நிறைவேற்றுப் முதுமாணிப் பட்டம் (EMBA) வழங்குவதற்கு தொடங்கியுள்ளது.

# நிறுவகத்தின் நிறுவக ஆளுகை

1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள தன்னாட்சி அதிகாரத்துடன் கூடிய முகாமைத்தவ பட்டப்படிப்பு நிறுவகம், ஒரு அரச நிறுவகம் என்ற வகையில் உயர் ஆளுகை தரநியமங்களை பேணுகின்றது. முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் ஆளுகை கட்டமைப்பு, கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் பல்கலைக்கழக ஆளுகை கட்டமைப்பிற்கு ஏற்ப கட்டாய மற்றும் தன்னார்வ கட்டமைப்புகளுக்கு இணங்க உருவாக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் “வியாபாரப் பாடசாலையாக செயல்படும் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட நிறுவகத்திற்கு வழிகாட்டுவதற்காக நியமிக்கப்பட்ட முகாமைத்துவ சபையின் உறுப்பினர்களால் நிர்வகிக்கப்படுகிறது. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மூன்று பீடங்களின் பீடாதிபதிகள், திறைசேரியின் அலுவலர் மற்றும் கல்வி அமைச்சின் அலுவலர் ஆகியோரைக் கொண்ட முகாமைத்துவ சபையின் உறுப்பினர்கள் நிறுவக உலகைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். அனைத்து கல்வி கற்கைநெறிகளுக்கும் பணிப்புரை வழங்கி நுண்நோக்கினை வழங்கும் பொருட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் கல்விசார் சபை உறுப்பினர்கள் நியமிக்கப்படுகின்றார்கள். கல்விசார் சபையின் உறுப்பினர்களில் பல்கலைக்கழக பேராசிரியர்கள், நிறுவக உலகைச் சேர்ந்த கல்விமான்கள் மற்றும் பல்வேறு கல்விசார் கற்கைநெறிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் சிரேஷ்ட பீடாதிபதிகள் உட்பட பலர் உள்ளனர்.

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவக சட்டத்தின்படி, அனைத்து நிதி முகாமைத்துவ செயற்பாடுகள் திறைசேரி சுற்றறிக்கைகளின் அடிப்படையில் அரசு கணக்காய்வின் கடுமையான ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. மேலும், முகாமைத்துவ சபையின் துணைக்குழுக்களான நிதிக்குழு மற்றும் கணக்காய்வு குழு என்பன முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் நிதி முகாமைத்துவத்தை உண்ணிப்பாக அவதானித்து ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக முகாமைத்துவத்திடம் அறிக்கையிடுகின்றன. முகாமைத்துவ பட்டப்படிப்பு நிறுவகத்தின் சுமுகமான செயற்பாடுகளை சான்றுப்படுத்துவதற்காக, முன்னரே தீர்மானிக்கப்பட்ட நிகழ்ச்சிநிரலின்படி முகாமைத்துவம் கிரமமாகக் கூடுகிறது. கல்வி சபையும் தேவைப்படும்போது கூடுவதுடன், கல்வி விடயங்களை கலந்துரையாடுவதற்காக ஆண்டுக்கு குறைந்தது நான்கு முறை கூட்டங்களை நடாத்துவதுடன், அத்தகைய கூட்டங்களின் கூட்டக்குறிப்புகள் தேவையான அனுமதிக்காக முகாமைத்துவ சபையிடம் அனுப்பப்படுகின்றன.

வேறு கண்ணோட்டத்தில் பார்த்தால், முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகமானது, உலகளாவிய மாற்றங்களுக்கு இணையாக மூலோபாயங்களை திட்டமிடல், சந்தை தகவல்களை சேகரித்தல் மற்றும் கற்பித்தல் முறைகளை மேம்படுத்துதல் ஆகியவற்றின் போது, முன்னாள் மாணவர்கள், நிறுவகத் துறை மற்றும் வேறு பங்காளர்கள் அத்துடன் திறைசேரி, கல்வி அமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உட்பட அனைத்து முக்கிய பங்குதாரர்களுடனும் ஆலோசனைகளை மேற்கொள்கின்றது. எனவே, முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தில் அதன் ஆளுகை கட்டமைப்பு, ஒழுங்குமுறை கட்டமைப்பு மற்றும் பங்குதாரர்களின் முகாமைத்துவ என்பன நன்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

# இடர் முகாமைத்துவம்

நவீன முகாமைத்துவப் பாடசாலையொன்றாக கல்வியை வினைத்திறனாக வழங்குவதற்கு இடர் மதிப்பீடு மற்றும் தணித்தல் மிகவும் முக்கியமானது என்று முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம் நம்புகின்றது. எனவே, முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம் சந்தை தகவல்கள், அதன் தற்போதைய திட்டங்கள் மற்றும் நிதி இடர், முகாமைத்துவ இடர், சந்தை இடர், நற்பெயர் இடர், நாடு தொடர்பான இடர்கள், நாணய மாற்று விகித இடர் மற்றும் உலகளாவிய இடர்கள் போன்ற பல்வேறு இடர்களை தவறாமல் மதிப்பிடுகிறது.

வெளிநாட்டுச் சந்தையில் முகாமைத்துவ நிர்வாகம் தொடர்பான பட்டபின்படிப்பு பட்டத்தை வழங்குதல் மற்றும் இத்தகைய சந்தைகளிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் கட்டணங்களைப் பெறுதல் காரணமாக, வெளிநாட்டு நாணய ஏற்ற இறக்கங்களின் நிலையற்ற தன்மை, பேரினப் பொருளாதார பின்னடைவுகள் மற்றும் நிலையற்ற தன்மையின் அளவு காரணமாக, ரூபா பணப்புழக்கத்திற்கு மட்டுமல்லாமல், கட்டண நுழைவாயில்கள் மூலம் வெளிநாட்டு நாணய வரவுகளுக்கான இடர் மதிப்பீடு நெருக்கமாக கண்காணிக்கப்படுகிறது. பிரதி நிதி அதிகாரி மற்றும் இயக்குனர் நிதி இடரை நெருக்கமாக அவதானிக்கப்படுகிறது. பிரதி நிதியாளர் மற்றும் பணிப்பாளர் நிதி இடர்களை அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கின்றனர். புதிதாக நியமிக்கப்பட்ட பணிப்பாளர் அவர்களின் பயனுள்ள நடவடிக்கையின் காரணமாக, நிறுவகம் அனுபவித்த செயற்பாட்டு இழப்புகள் தற்போது குறைந்துள்ளன, மேலும் இடர் மதிப்பீட்டிற்கான சாதகமான அணுகுமுறை மட்டுமல்லாமல், அடையாளம் காணப்பட்ட நிதி இடர்களை உடனடி நடவடிக்கைகளுடன் எவ்வாறு குறைப்பது என்பதையும் போதுமான அளவு சுட்டிக்காட்டுகின்றது.

மே 8 ஆம் திகதி புதிய பணிப்பாளரை நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தில் சுமூகமான தலைமைத்துவ மாற்றம் ஏற்பட்டது. இது அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு நிலையான நிர்வாகத்தை உறுதி செய்கிறது. இருப்பினும், முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் எதிர்கால முன்னேற்றத்திற்கு பல வெளிப்புற காரணிகள் சவால்களை ஏற்படுத்துகின்றன. இவற்றில் நாட்டின் தற்போதைய நிச்சயமற்றதன்மை, வரவிருக்கும் தேர்தல்கள், அறிவுபடைத்தோர் வெளியேற்றம், நிதி நிலையற்ற தன்மை மற்றும் குறைவான கொள்வனவு சக்தி ஆகியவை அடங்கும்.

இக்காரணிகள் புதிய கற்கைநெறிகளின் வெற்றி, வருவாய் உருவாக்கம் மற்றும் ஒட்டுமொத்த பொருளாதார நிலைபெறுதன்மை ஆகியவற்றை பாதிக்கலாம். 38 ஆண்டுகால பெருமைமிக்க வரலாற்றைக் கொண்ட முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம் தற்போது பல சவால்களை எதிர்கொள்கிறது. கல்வித்துறையின் கட்டுப்பாடற்ற தன்மை மற்றும் பல்வேறு பட்டப்பின் படிப்பு கற்கைநெறிகளை வழங்கும் அங்கீகாரம் இல்லாத மற்றும் தற்காலிக நிறுவகங்களின் விரைவான அதிகரிப்பு ஆகியவை அவற்றில் அடங்கும். இந்த வளர்ச்சிகள் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் தொடர்ச்சியான வெற்றிக்கு அதிக சந்தை இடர் மற்றும் கடுமையான போட்டியை உருவாக்குகின்றன. அதற்கு மேலதிகமாக, முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம், அதன் பெரும்பாலான வியாபார நிர்வாக பட்டப்பின் படிப்பு கற்கைநெறிகள் தற்போது வழங்கும் பிராந்தியமான மத்திய கிழக்கில் போர் மூழும் சாத்தியக்கூறு காரணமாக சாத்தியமான உலகளாவிய இடரையும் எதிர்பாரக்கின்றது.

## பங்குதாரர்களுக்கு நாம் எவ்வாறு பெறுமதி உருவாக்குகின்றோம்? நிறுவகத்தின் மூலோபாய எதிர்காலப் பணிப்புரை: முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் சிறப்பின் அடிப்படை




| | |
|---|---|
| **பெறுமதி ஊக்கி 1 – புத்தாக்கமிக்க கற்பித்தல் மற்றும் கற்றல்** | அனைத்து கல்விசார் கற்கைநெறிகளிலும் உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட கற்பித்தல் மற்றும் கற்றல் அனுபவத்தை வழங்குதல் |
| **பெறுமதிஊக்கி 2 - நுண்நோக்கு மிக்க மற்றும் பொருத்தமான ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள்** | தொழிற்துறை தேவைகளுடன் பொருத்தமான, ஏற்புடைய மற்றும் காலோசிதமான வகையில் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவக ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகளில் விடயவெல்லையை மேம்படுத்தல |
| **பெறுமதி ஊக்கி 3–ஒத்துழைப்புகள் மற்றும் பங்குடமைகளை வளப்படுத்தல்** | தொழிற்துறை, உயர்கல்வி நிறுவகங்கள் மற்றும் தொழில்சார் சங்கங்களுடன் ஒத்துழைப்பு பங்குடைமயை விருத்திசெய்தல் |
| **பெறுமதி ஊக்கி 4 – எதிர்கால திறன் அபிவிருத்தி மற்றும் தலைமைத்துவ விருத்தி** | தனியார் மற்றும் அரசு துறை நிறுவகங்களுக்காக திறன் அபிவிருத்தி மற்றும் தலைமைத்துவ விருத்திக்காக முன்னணி வகித்தல் |

# பெறுமதி ஊக்கி 1 – புத்தாக்கமிக்க கற்பித்தல் மற்றும் கற்றல்

கொள்கை என்பது முடிவுகளை வழிநடாத்துவதற்கும் தர்க்கரீதியான விளைவுகளை அடைவதற்கும் வேண்டுமென்றே உருவாக்கப்பட்ட வழிகாட்டுதல் அமைப்பாகும். கொள்கை என்பது ஒரு நோக்கத்தின் வெளியீடு ஆவதுடன், இது ஒரு செயல்முறை அல்லது நெறிமுறையாக, குறிப்பாக ஒரு அமைப்பிற்குள் ஒரு ஆளும் அமைப்பால் நடைமுறைப்படுத்தப்படுகிறது. பல்கலைக்கழகங்களும் நிறுவகங்களும் இதற்கு விதிவிலக்கல்ல. கொள்கைகள் அகநிலை மற்றும் விடயத்துடன் தொடர்புடைய முடிவுகளை எடுப்பதில் உதவக்கூடும்.

இவ் எண்ணக்கருவிலிருந்து தொடங்கி முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம், பின்வரும் நோக்கங்களுடன் கற்பித்தல், கற்றல் மற்றும் மதிப்பீட்டு கொள்கையை முழுமையாக உருவாக்கி செயல்படுத்தியுள்ளது.

- முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் கற்பித்தல், கற்றல் மற்றும் மதிப்பீட்டு செயல்முறைக்கான வழிகாட்டுதல்களை நோக்குமிக்க மற்றும் விரிவான முறையில் வழங்குதல்.
- அனைத்து மாணவர்களுக்கும் அறிவு மற்றும் அவர்களின் அபிலாஷைகளை மேம்படுத்துவதற்கான தரநிலைகளைத் தொடர்ந்து உயர்த்துதல்.
- பல்வேறு கற்பித்தல், கற்றல் மற்றும் மதிப்பீட்டு உத்திகளை செயல்படுத்த பீடத்தை ஊக்குவித்தல்.
- நிறுவகத்தின் கற்பித்தல் அதன் மாணவர்கள் மீது சாதகமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதை உறுதிப்படுத்துதல், “சிறப்பான“ கற்றல் அனுபவங்களின் சதவீதத்தை தொடர்ந்து அதிகரிப்பதை உறுதிப்படுத்துதல்.
- உலகளாவிய அளவில், மூலோபாய ரீதியாக திட்டமிடப்பட்டு, மாணவர்கள் எதிர்பார்க்கப்படும் கற்றல் விளைவுகளை அடைவதற்காக, வடிவமைக்கப்பட்ட கற்பித்தல் மற்றும் கற்றலுடன் மதிப்பீடுகள் ஒத்துப்போகின்றன என்பதை உறுதிப்படுத்துதல்.
- உளநாட்டு உணர்வுடன் உலகளாவிய தலைவர்களை உருவாக்குவதற்கு பங்களித்தல்.

முக்கியமான கொள்கை கோட்பாடுகளில் ஒன்றாக, முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம் கல்வி அறிவை வழங்குதல், அறிவைப் பயன்படுத்துதல், திறன்களை மேம்படுத்துதல் மற்றும் அறிவைப் தக்கவைத்தல் ஆகியவற்றை உறுதிசெய்கின்றது. இந்த கொள்கை பல துறைகளை உள்ளடக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. பதின்மூன்று பக்க ஆவணத்தின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

**பாடத்திட்ட உருவரை**

பாடத்திட்ட உருவாக்கம் மற்றும் மதிப்பாய்வுக் கொள்கையுடன் ஒருங்கிணைந்து, கற்பித்தல், கற்றல் மற்றும் மதிப்பீட்டுத் திட்டம், பாடத்திட்ட உருவரையுடன் தொடங்குவதுடன், இது கற்கைநெறி கற்றல் நோக்கங்களை விபரிக்கப்படுவதுடன், இந்நோக்கங்கள் ஒவ்வொரு பாடநெறிக்கான கற்றல் விளைவுகளுக்குள் எவ்வாறு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன என்பதை விளக்குகின்றது. இந்த செயன்முறை முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் பணிக்கூற்றுடன் ஒத்துப்போகின்றது.

பாடத்திட்ட உருவரையில் வழங்கும் முறை, அமர்வு எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்ட கல்வித் துறை மற்றும் மாணவர்களுக்கான எதிர்பார்ப்புகள் போன்ற தகவல்களை உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த எதிர்பார்ப்புகளுக்கு தெளிவான அளவுருக்கள், மதிப்பீட்டு கட்டமைப்பு, அடிப்படை பாடநூல் மற்றும் தேவையான மேலதிக வாசிப்பு, அத்துடன் பாடநெறிக்காக பரிந்துரைக்கப்பட்ட சாத்தியமான ஆராய்ச்சி பகுதிகள் ஆகியவை துணைபுரிகின்றன. அத்துடன் பாத்திட்டத்திற்கான சாத்தியமான ஆராய்ச்சி பகுதிகள் அதற்கு பொதுவாக மற்றும் அதிகமாக ஏற்புடைதாகும் கட்டுரைகள், காப்பியத் திருட்டு ஆகிய நிலைமைகளை குறைப்பதற்கான நடைமுறைகள் மற்றும் முறையான கல்வி நடத்தைக்கான எதிர்பார்ப்புகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**வடிவமைப்பு மற்றும் சுருக்க மதிப்பீடுகள்**

கற்பித்தல் என்பது அறிவைப் போஷித்து வழங்குதல், திறன்களை வளர்த்தல் மற்றும் சரியான மனப்பான்மையை உருவாக்குதல் என்பனவாகும். பொதுவாக, ஒப்படை திறன் மேம்பாட்டில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், அதே நேரத்தில் தேர்வு பட்டப்பின் படிப்பு மட்டத்தில் அறிவு மற்றும் அறிவு வழங்கப்பட்ட சூழ்நிலைக்கு ஏற்புடையதாக்கி கொள்ளும் வகையில் மதிப்பிடுவதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. களப்பணி, தொழில்துறை சுற்றுலாக்கள், பகுப்பாய்வு, விளக்கக்காட்சிகள் மற்றும் நேர்காணல்கள் ஆகியவை நிபுணர்களை பொதுவானவர்களாக மாற்றுவதற்கும் நிறுவகங்களில் குறுக்கு-செயல்பாட்டு அறிவைப் பெறுவதற்கும் ஒப்படைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள சில பகுதிகள் ஆகும்.

முக்கியமான பகுதிகளைக் கருத்தில் கொண்டு பல்வேறு மதிப்பீடுகளுக்கான தலைப்புரைகள் உருவாக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, கட்டுரை வகையில் இறுதித் தேர்வுக்காக தயாரிக்கப்பட்ட தலைப்புரை, மதிப்பீட்டின் நோக்கம் மாறுபடுவதால், ஒரு தனிப்பட்ட எழுத்து வடிவிலான ஒப்படையில் வேறுபடுன்கிறது. விளக்கக்காட்சிகளுக்கான தலைப்புரை மற்ற தலைப்பு உரைகளுடன் ஒப்பிடும்போது வேறுபடுகிறது. இருப்பினும், ஒவ்வொரு தலைப்புரையும் அறிவு பயன்பாடு, கருத்துகள் மற்றும் நிறுவப்பட்ட கோட்பாடுகளுக்கு சவால் விடுதல் மற்றும் அவர்களின் அனுபவங்களைப் பகிர்வது ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. எதிர்பார்க்கப்படும் கல்வித் தரநிலைகள், காப்பியத் திருட்டுத் தரநிலைகள், ஒப்படைகளை தாமதமாக சமர்ப்பித்தல் ஆகியவை கொள்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

தேர்வுத்தாள் ஏழாவது வாரத்திற்குள் ஒவ்வொரு கேள்விக்கும் மாதிரி பதில்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன், மேலும் ஒவ்வொரு பகுதிக்கும் துணைப்பகுதிக்கும் குறிப்பாக ஒதுக்கப்பட்ட மதிப்பெண்கள் வழங்கப்படுதல் வேண்டும். இது தரநிலைகளை பராமரிப்பதற்கு மட்டுமல்ல, இரண்டாவது மதிப்பீட்டு செயல்முறையை எளிதாக்குவதற்கும் ஆகும். முடிவுறுத்தப்பட்ட பின்னர் அனைத்து மதிப்பெண்களும் மாணவர்களுக்கு வெளியிடுவதற்கு முன்னர் தேர்வு சபையால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். தோல்விகளை எவ்வாறு கையாள்வது, மறுதேர்வு மற்றும் மறு ஒப்படைப்புகளுக்காக பின்பற்ற வேண்டிய நடைமுறை மற்றும் இறுதி தரவரிசையை தீர்மானிப்பதற்காக இத்தகைய மதிப்பெண்கள் எவ்வாறு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன என்பதும் கொள்கையில் அடங்கும்.

பட்டப்பின் படிப்புகளுக்கான முதன்மையான நிறுவகம் என்ற வகையில், கற்பித்தல், கற்றல் மற்றும் மதிப்பீட்டுத் திட்டம் இலங்கை தகைமைக் கட்டமைப்பு (SLQF) என்பவற்றுக்கு ஏற்ப இறுதி ஆய்வில் கவனம் செலுத்தப்படுவதுடன், மேலும் இறுதி ஆய்வுக்கு 15 நன்மதிப்புகள் (credits) ஒதுக்கப்படுகின்றன. பின்னர் ஆய்வுகளைத்

தொடரந்து குறித்து கேள்விகளை முன்வைப்பதற்காக முறையான வாய்மொழித் தேர்வு நடத்தப்படுகின்றது. பெரும்பாலான கற்றல் பங்காளிகள் நிறுவகத் துறையைச் சேர்ந்தவர்கள் என்பதால், கற்பித்தல், கற்றல் மற்றும் மதிப்பீட்டுத் திட்டத்தை கூர்தாய்வுசெய்வதில் இருந்து, பட்டப்பட்டப்படிப்பு நிறுவகம் பாரம்பரிய ஆய்வறிக்கைக்கு பதிலாக ஏழு வகையான ஆராய்ச்சி திட்டங்களை வழங்குகின்றது என்பது தெரியவருகிறது. எனவே, பல விருப்பங்களை வழங்குவதன் மூலம் இந்த தேவையை கொள்கை பூர்த்திசெய்கிறது.

இறுதியாக, கற்பித்தல், கற்றல் மற்றும் மதிப்பீட்டுத் திட்டமானது மேற்பார்வை செயல்முறை மற்றும் மதிப்பீட்டு செயல்முறை ஆகியவற்றில் கவனம் செலுத்துகின்றது, மேலும்
இந்நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு யார் பொறுப்பு என்பதை தெளிவாக அடையாளம் காணுதல் மற்றும் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் கற்பித்தல், கற்றல் மற்றும் மதிப்பீட்டுத் திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்துவதை மேற்பார்வையிடப்படுகிறது.

# பெறுமதி ஊக்கி 2 – நுண்நோக்குமிக்க ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள்

செயற்பணிக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, தாக்கத்தை ஏற்படுத்தும் ஆராய்ச்சியை மேற்கொள்வது முகாமைத்துவப் பட்டப்படிப்பு நிறுவகத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். முகாமைத்துவப் பட்டப்பின் முகாமைத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தினது, சிறப்புகளின் கட்டமைப்பில் ஆராய்ச்சியும் ஒரு முக்கிய தூணாக விளங்குகிறது. முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகம் உயர்தர ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கு உறுதிபூண்டுள்ளதுடன், மேலும் அனைத்து பீட உறுப்பினர்கள் மற்றும் மாணவர்கள் திட்டமிடல் முதல் கண்டுபிடிப்புகளை பிரயோகித்தல் வரையிலான ஆராய்ச்சியின் அனைத்து அம்சங்களிலும் நேர்மை மற்றும் வெளிப்படைத்தன்மையை பராமரித்து, கோட்பாடுகள் மற்றும் சிறந்த நடைமுறைகளை கடைபிடிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முகாமைத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் அறிவுசார் கண்டுபிடிப்புகள் அடங்கிய ஆராய்ச்சித் தொகுப்பில் ஆசிரியர்கள் மற்றும் கற்றல் பங்காளர்களின் பங்களிப்புகள் உள்ளன.

இவ்அறிவுசார் பங்களிப்புகளின் தொகுப்பு நிறுவகத்தின் செயற்பணி, வெளியீடுகள், விளைவுகள் மற்றும் உத்திகள் ஆகியவற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ள முகாமைத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் ஆராய்ச்சி முன்னுரிமைகளை பிரதிபலிக்கிறது. இந்தத் தொகுப்பில் உள்ள பெரும்பாலான பங்களிப்புகள் சக மீளாய்வு செய்யப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள், விடய ஆய்வுகள் மற்றும் இறுதியாண்டு ஆராய்ச்சி அடிப்படையிலான திட்டங்களை அடிப்படையாகக் கொண்ட தொழில்துறை ஆய்வுகள் ஆகும். ஆராய்ச்சி மாநாடுகள், கலாநிதி பட்ட கருத்தரங்குகள் மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் இணைந்து பணியாற்றுதல் மூலம் அறிவைப் பகிர்வதன் மூலம் வணிகம் மற்றும் சமூகத்திற்கான அறிவுசார் பங்களிப்புகளின் தாக்கம் மேலும் மேம்படுத்தப்படுகிறது.

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தில் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி கருத்திட்டங்கள், பயன்பாட்டு ஆராய்ச்சி மற்றும் சமூக ஆராய்ச்சி என்ற வகையில் இரண்டிலும் கவனம் செலுத்தப்படுகிறது. பயன்பாட்டு ஆராய்ச்சி திட்டங்கள் நிறுவகங்களின்

பிரச்சினைகளை தீர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன. சமூக ஆராய்ச்சி திட்டங்கள் அறிவை உருவாக்குவதில் கவனம் செலுத்துகின்றன, மேலும் இந்த அறிவு கல்வி வெளியீடுகள் மூலம் பகிரப்படுகிறது.

ஆராய்ச்சியை நடைமுறைக்குமாற்றப்படுத் தன்மையும் அறிவைப் பகிர்வதும் ஆராய்ச்சியின் முக்கியமான அம்சமாகும். முகாமைத்துவ பட்டப்படிப்பு நிறுவகத்தின் ஆராய்ச்சி கண்டுபிடிப்புகள் முக்கியமாக தரப்படுத்தப்பட்ட மற்றும் சக மதிப்பாய்வு செய்யப்பட்ட சஞ்சிகைகளில் வெளியிடப்படுவதன் மூலம் புதிய அறிவை உருவாக்கப் பயன்படுத்தப்படுகிறது. முகாமைத்துவ பட்டப்பி பின்படிப்பு நிறுவகம் மற்றும் கற்றல் பங்காளர்களால் நடாத்தப்படும் ஆராய்ச்சி பெரும்பாலும் மற்றவர்களால் மேற்கோள் காட்டப்படுவதுடன், இதன் மூலம் உருவாக்கப்படும் அறிவின் பரிமாற்ற திறன் மற்றும் மதிப்பு மேலும் உறுதிப்படுத்தப்படுகிறது. அறிவு உருவாக்கத்திற்கான பீடத்தின் பங்களிப்பு பின்வரும் அட்டவணை மூலம் காட்டப்படுகின்றது. அதன்படி, 2024 ஆம் ஆண்டின் வெளியீடுகள் மற்றும் மேற்கோள்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரித்துள்ளது.

| நிறைவுசெய்த ஆண்டு | ஆய்விதழ் கட்டுரைகள் | கருத்தரங்கு பணிகள் | புத்தக அத்தியாயங்கள் | விடய ஆய்வு | மேற் கோள்கள் |
|---|---|---|---|---|---|
| 2024 | 14 | 01 | - | - | 82 |
| 2023 | 15 | - | 01 | - | 87 |
| 2022 | 12 | 06 | 01 | 01 | 42 |

வியாபார நிர்வாக முதுமாணி மாணவர்கள் ஐந்து தெரிவுகளில் இருந்து அதாவது முகாமைத்துவ ஆராய்ச்சி கருத்திட்டம், முகாமைத்துவ திறன் ஆராய்ச்சி கருத்திட்டம், முகாமைத்துவ விடய ஆய்வு ஆராய்ச்சி கருத்திட்டம், தொழில்முனைவோர் திறன் ஆராய்ச்சி கருத்திட்டம் மற்றும் முகாமைத்துவ கள ஆராய்ச்சி கருத்திட்டம் என்பனற்றிலிருந்து ஒரு ஆராய்ச்சி கருத்திட்டத்தை தேர்வு செய்ய வேண்டும். இவற்றில், முகாமைத்துவ ஆராய்ச்சி கருத்திட்டம் முகாமைத்துவ விடய ஆய்வு ஆராய்ச்சி கருத்திட்டம் ஆகியவை சமூக ஆராய்ச்சியில் கவனம் செலுத்துகின்றன, மற்றவை பிரயோக ஆராய்ச்சியில் கவனம் செலுத்துகின்றன. இந்த ஆராய்ச்சிக்கான முன்னுரிமைகள் கற்றல் பங்காளர்கள் மத்தியில் உள்ளதேவையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் தொழில்துறையில் அவற்றின் தாக்கத்தை அடிப்படையாகக் கொண்டே ஆகும். பெரும்பாலான மாணவர்கள் தொழில்துறையின் பிரச்சினைகளை நேரடியாக தீர்க்கும் முகாமைத்துவ கள ஆராய்ச்சி திட்டங்களை தெரிவுசெய்கின்றனர்.

அதற்கமைய, வியாபார நிர்வாக முதுமாணி கற்கைநெறியின் கடந்த நான்கு ஆண்டுகளுக்கான ஆராய்ச்சி கருத்திட்டங்கள் பின்வருமாறு:

| நிறைவுசெய்த ஆண்டு | முகாமைத்துவ ஆராய்ச்சி | முகாமைத்துவ திறன் ஆராய்ச்சி | முகாமைத்துவ விடய ஆய்வு ஆராய்ச்சி | தொழில் முனைவோர் திறன் ஆராய்ச்சி | முகாமைத்துவக் கள ஆராய்ச்சி | நிறைவுசெய்யப்பட்ட வியாபார நிர்வாக முதுமாணிக் கருத்திட்டங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 2024 | 295 | 1 | 6 | 15 | 13 | 330 |
| 2023 | 254 | 3 | 8 | 14 | 11 | 290 |
| 2022 | 222 | 1 | 3 | 28 | 16 | 270 |
| 2021 | 247 | 3 | 6 | 8 | 14 | 278 |

மேலே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளபடி, வணிக நிர்வாகத்தில் பட்டபின்படிப்பு கற்றல் பங்காளர்களின் நிறைவு செய்யப்பட்ட ஆராய்ச்சிக் கருத்திட்டங்கள் ஆண்டுதோறும் அதிகரித்து வருகின்றன. மேலும் 2024 இல் நிறைவு செய்யப்பட்ட ஆராய்ச்சி திட்டங்களில் 13மூ இக்கும் அதிகமான அதிகரிப்பு காணப்படுகிறது. மேற்படி ஆராய்ச்சிக் கருததிட்டங்கள் மேலும் மாநாட்டு கட்டுரைகள் மற்றும் சஞ்சிகை கட்டுரைகளாக மாற்றப்பட்டுள்ளன. இதன் மூலம் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகத்தால் உருவாக்கப்படும் ஆராய்ச்சியின் தரம் மேலும் எடுத்துக்காட்டப்படுகிறது. மாணவ ஆராய்ச்சி நோக்கங்களுக்காக காப்பியத் திருட்டுத் பரிசொதனைகளை உதிசெய்வதற்கு ரூ.4.4 மில்லியன் செலவில் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகம் டேர்னிட்டின் மென்பொருளைக் கொள்வனவு செய்துள்ளது.

ஆராய்ச்சி திறன்களை வளர்ப்பதற்கு ஆதரவு நியூ சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகம் அளித்துள்ளதுடன், மேலும் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகத்தின் முகாமைத்துவ நிர்வாகம் தொடர்பான பட்டபின்படிப்பு பட்டம் உரித்தாக்கப்பட்டுள்ள ஆராய்ச்சி நடவடிக்கைகளில் சிறந்த செயல்திறனை வெளிப்படுத்தும் பட்டதாரிகளுக்கு கலாநிதி பட்டப்படிப்புக்கான இடங்களும் வழங்கப்பட்டுள்ளது. தற்போது, முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகத்தின் ஏழு பட்டதாரிகள் கென்பெராவில் உள்ள நியூ சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டப்படிப்பு ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக புலமைப் பரிசில்கள் பெற்றுள்ளனர். ஒவ்வொரு புலமைப் பரிசில்களும் மூன்று வருட கற்கை காலத்தை உள்ளடக்குகின்றது.

முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகத்தின் ஆராய்ச்சி நிலையமானது ஆராய்ச்சி கருத்திட்டங்கள், விடய ஆய்வுகள், தொழில்துறை ஆய்வுகள் போன்றவற்றை நடாத்தவதையும் சஞ்சிகை கட்டுரைகள் மற்றும் மாநாட்டு கட்டுரைகள் மூலம் அவற்றில் கண்டறியப்பட்டவைகளை பகிர்வதையும் நிரவகிக்கின்றது. ஆராய்ச்சியின் மூலம் விருத்தி செய்யப்பட்ட கண்டுபிடிப்புகள் மற்றும் விடய ஆய்வுகள் கற்பித்தலிலும் பயன்படுத்தப்படுகின்றன. பதவியணி உறுப்பினர்களுக்கு கௌரவ விருதுகள் மூலம் ஆராய்ச்சிகளின் பொருட்டு அவர்களின் பங்களிப்புக்கு அங்கீகாரம் மற்றும் வெகுமதி அளிக்கப்படுகிறது.

முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகம் அதன் தாய்ப் பல்கலைக்கழகமான ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி விருதுகள் வைபவத்தில் கூட்டுமுயற்சிப் பங்காளராக பணியாற்றி ரூ. 2.4 மில்லியன் தொகையைப் பங்களிப்புச் செய்தது. இப்பங்குடமையானது கல்விசார் சிறப்பினை பேணிவளர்ப்பதற்கும் தாய்ப் பல்கலைக்கழகத்துடனான அதன் உன்னதமான உறவை வலுப்படுத்துவதற்குமான முகாமைத்துவப் பட்டப் பின்படிப்பு நிறுவகத்தின் அர்பணிப்பை எடுத்துக்காட்டுகின்றது.

**கலாநிதி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்**

கலாநிதி பட்டப்படிப்பு திட்டங்கள் நிறுவப்பட்டதிலிருந்து, முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம் அதற்கே உரியதான கலாநிதி பட்டப் படிப்பு கற்கைநெறியை நடாத்தி வருவதுடன், அதை செயல்படுத்துவதில் மிக உயர்ந்த தரநிலைகளை பேணியும் வருகின்றது. பல்கலைக்கழகத்தின் குறிக்கோளான ”தோன்றுபவை அனைத்திலும், அறிவே மிக உயர்ந்தது” என்பதைப் பிரதிபலிக்கும் வகையில், கலாநிதி பட்டப்படிப்பு அபேட்சகர்கள் அதிக பொருத்தமும் முன்னுரிமையும் உள்ள துறைகளில் புதிய அறிவை உருவாக்குவதில் மிகுந்த ஆர்வம் காட்ட வேண்டும் என்று முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம் நம்புகின்றது. இதற்குமேலதிகமாக, நிறுவக பின்னணியில் ஆராய்ச்சியைப் பயன்படுத்துவதன் மூலம் விண்ணப்பதாரர்கள் வணிகம் மற்றும் தொழில்துறைகளில் முக்கியமான பிரச்சினைகளைத் தீர்க்க உதவுவதை நோக்கமாகக் கொண்ட வியாபார நிர்வாகத்தில்

கலாநிதி கற்கைநெறியையும் முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம் வழங்குகின்றது.

| நிறைவுசெய்த ஆண்டு | நிறைவுசெய்த கலாநிதி பட்டப்படிப்புகளின் எண்ணிக்கை |
|---|---|
| 2024 | 03 |
| 2023 | 04 |
| 2022 | 01 |
| 2021 | 01 |

**முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவக வருடாந்த ஆராய்ச்சி மாநாடு (PIMARC)**

அனைத்து வியாபார நிர்வாகம் முதுமாணி பட்டப் பின்படிப்பு கற்றல் பங்காளர்கள் அனைவரும் தங்கள் இறுதி ஆண்டில் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதுடன், தெரிவு செய்யப்பட்ட சிறந்த கற்றல் பங்காளர்கள் இவ்வாய்ப்பின் மூலம் ஆராய்ச்சி சமூகத்துடன் தங்கள் ஆராய்ச்சி கருத்திட்டங்களிலிருந்து பெற்றுக்கொண்ட புதிய அறிவைப் பகிர்ந்து கொள்கின்றார்கள். கற்றல் பங்காளர்கள் ஆராய்ச்சியை காட்சிப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட மாணவர் ஆராய்ச்சி தினம் 2016 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. 2017 இல் வருடாந்த கலாநிதி பட்டப்படிப்பு கருத்தரங்கு தொடங்கப்பட்டது. 2019 இல் இந்த இரண்டு நிகழ்வுகளும் ஒன்றிணைக்கப்பட்டு முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகத்தின் வருடாந்த ஆராய்ச்சி மாநாடு (PIMARC) நிறுவப்பட்டது. 2021 இல் தொழில்துறை கலந்துரையாடல் PIMARC நிகழ்வில் அறிமுகப்படுத்தப்பட்டது.

சமயோசிதமான தலைப்பாக "கொந்தளிப்புமிக்க காலங்களில் வளர்ச்சி" எனும் கருப்பொருளுடன் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகத்தின் வருடாந்த ஆராய்ச்சி மாநாடு - 2025 அண்மையில் மிகவும் வெற்றிகரமாக நிறைவுபெற்றது. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் மற்றும் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகம் இடையிலான பலனளிக்கும் ஆராய்ச்சி ஒத்திசைவுகளைப் பெறுவதற்காக "தொழில்நுட்ப முக்கியத்துவமும் கொந்தளிப்பும்: நிலைபெறத்தக்க வியாபார மாறுதலுக்காக பிளவுபடுத்தத்தக்க தொழிநுட்பங்களில் இருந்து அநுகூலமடைதல்" என்ற பொருத்தமான தலைப்புடன் எமது தாய்ப் பல்கலைக்கழகத்தின் வருடாந்த ஆராய்ச்சி மாநாடான "International Conference of Business Management (ICBM) 2025" உடன் இவ்வாண்டின் வருடாந்த ஆராய்ச்சி மாநாடு நெருக்கமாக அணிசேர்ந்திருந்தது. "பணி நோக்குடன்" செயல்படும் நிறுவகம் என்ற வகையில், முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகம் அதன் இரண்டாவது தூணான "நுண்நோக்குமிக்க ஆராய்ச்சி" யை வலுப்படுத்துவதோடு மட்டுமின்றி, "புதிய உலகிற்கான வியபாரக் கல்லூரி" எனும் அதன் தொலைநோக்கை நோக்கி நகர்வதற்காகவும் PIMARC 2025 நிகழ்வை ஏற்பாடுசெய்தது.

PIMARC நிகழ்வில் சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சி வெளியீடுகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன, மேலும் கீழே உள்ள அட்டவணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளபடி, பல்வேறு தூய மற்றும் பயன்பாட்டு ஆராய்ச்சிகளைக் எடுத்துக்காட்டுகின்றன.

| ஆண்டு | ஆராய்ச்சிகளைச் சமர்ப்பித்தல | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | கலாநிதி பட்டப்படிப்பு கருத்தரங்கு | முகாமைத்துவ ஆராய்ச்சி | முகாமைத்துவ திறன் ஆராய்ச்சி | முகாமைத்துவ விடய ஆய்வு ஆராய்ச்ச | தொழில்முனைவோர் திறன் மற்றும் முகாமைத்துவ கள ஆராய்ச்சி | சுயாதீன கற்கை கருத்திட்டங்கள் | தொழிற்துறை கலந்துரையாடல்களைச் சமர்ப்பித்தல் |
| 2024 | 10 | 11 | 05 | 04 | 02 | 08 | - |
| 2023 | 05 | 14 | 08 | 02 | - | 04 | 03 |
| 2022 | 06 | 10 | 04 | 02 | - | - | 04 |
| 2021 | 04 | 10 | - | - | - | - | 03 |

**இலங்கை முகாமைத்துவச் சஞ்சிகை (SLJM)**

முகாமைத்துவ துறையில் கல்வி ஆராய்ச்சிக்கான புதிய அறிவைப் பங்களிப்பதற்கும் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகங்களின் பீட உறுப்பினர்களின் புலமைப் பங்களிப்பை மேம்படுத்துவதுவதையும் நோக்கமாக கொண்டு, 1996 இல் முகாமைத்துவப் பட்டப்பின்படிப்பு நிறுவகம் "Sri Lankan Journal of Management" இனை அறிமுகப்படுத்தியது. SLJM என்பது சம தகுதியுடையோர் தனித்தனியாக மீளாய்வுசெய்யும் சஞ்சிகையாகும். முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகம் இச்சஞ்சிகையை 28 ஆண்டுகளாக தொடர்ந்து வெளியிட்டு வருவதுடன்,
இலங்கைக்கு அப்பால் அதன் அணுகலை விரிவுபடுத்தியுள்ளது. இது கல்வியாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களால் பரவலாகப் பயன்படுத்தப்படும் விரிவான இணையவழி ஆராய்ச்சி தரவுத்தளமான நுடீளுஊழுாழளவ தரவுத்தளத்திலும் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

சஞ்சிகையானது கோட்பாடு அடிப்படையிலான ஆராய்ச்சியை வெளியிடுவதிலும், நிறுவகங்களுக்குள் பல்வேறு பிரச்சினைகளை கையாளுவதிலும் கவனம் செலுத்துகின்றது. இது பண்புசார், அளவுசார் மீளாய்வு மற்றும் எண்ணக்கருசார் அணுகுமுறைகள் உட்பட பரந்தளவிலான முறைகளைப் பயன்படுத்தி உயர்தர ஆராய்ச்சியை வரவேற்கிறது. ளுடுதுஆ கல்வி மற்றும் தொழில்துறை சார்ந்த ஆராய்ச்சியாளர்களுக்கு தமது ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளைப் பகிர்ந்து கொள்ளவும் வெளியிடவும் வாய்ப்புகளை வழங்குகின்றது.

1996 முதல் SLJM சஞ்சிகை தொடர்ச்சியான வெளியீட்டு வரலாற்றைக் கொண்டுள்ளதுடன், ஒவ்வொரு ஆண்டும் இரண்டு சஞ்சிகைகள் வெளியிடப்படுகின்றன. தற்போது, ஒரு சஞ்சிகையில் ஐந்து கட்டுரைகள் வெளியிடப்படுவதுடன், ஆண்டுக்கு மொத்தம் பத்து கட்டுரைகள் வெளியிடப்படுகின்றன. பல புகழ்பெற்ற ஆசிரியர்கள் பல ஆண்டுகளாக ளுடுதுஆ சஞ்சிகையில் பணியாற்றியுள்ளனர், முக்கியமாக மனித வளங்கள் மற்றும் நிறுவகசார் நடத்தை மற்றும் நெறிமுறைகளை தொடர்பான துறைகளில் கவனம் செலுத்தி வெளியீடுகளின் தரத்தை பேணி வருகின்றனர். எனினும், 2022 முதல், சஞ்சிகையின் நோக்கம் சந்தைப்படுத்தல், நிலைபெறுதன்மை, ஆளுகை, மூலோபாய முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவம் போன்ற விடயங்களை உள்ளடக்குவதற்காக “முகாமைத்துவ வகைப்படுத்தல்” என்பதன் கீழ் விரிவுபடுத்தப்பட்டது.

**முன்னேற்றகரமான ஆராய்ச்சி நிகழ்ச்சிதிட்டங்கள்**

முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகம், இரண்டு முக்கிய நோக்கங்களை அடைவதற்காக முன்னேற்றகரமான ஆராய்ச்சி முறைகள் குறித்து சான்றிதழை

வழங்குகின்றது: அதாவது (i) விண்ணப்பதாரர்களாக வரக்கூடியவர்களுக்கு கலாநிதி பட்டப்படிப்பு கற்கைநெறியில் இடம்பெற உதவுதல் மற்றும் (ii) இலங்கை ஆராய்ச்சியாளர்களால் வெளியிடப்பட்ட ஆராய்ச்சி கட்டுரைகளின் தரத்தை மேம்படுத்துதல். அதற்கமைய, இப்பாடநெறி சஞ்சிகைக்காக உயர்தர கோட்பாட்டு அல்லது எண்ணக்கருசார் கட்டுரைகளை மேம்படுத்துவதற்கும், கலாநிதி பட்டப்படிப்பு ஆய்வுகளுக்கான ஆராய்ச்சி முன்மொழிவை தயாரிப்பதற்கும் தேவையான பயிற்சியை வழங்குகின்றது. எனவே, முகாமைத்துவ உயர் ஆராய்ச்சி முறைகள் குறித்த சான்றிதழ், கலாநிதி பட்டப்படிப்பு ஆய்வுகளில் ஈடுபட்டுள்ள மாணவர்களுக்கு ஆராய்ச்சி முறையியலுக்கு உட்படுவதற்கு வாய்ப்பளிக்கிறன்து, இதன் மூலம் அவர்கள் தங்கள் கலாநிதி பட்டப்படிப்பு கற்கைநறெிகளுக்கு அடித்தளமாக இருக்கும் தங்கள் கலாநிதி பட்ட முன்மொழிவுகளை விருத்தி செய்வதற்கான ஆற்றல் கிடைக்கப்பெறுகின்றது.

**முன்மொழியப்பட்ட வியாபார அலகு – முகாமைத்துவ ஆராய்ச்சி ஆலோசனை (MaRC)**

இலங்கையின் முன்னணி முகாமைத்துவ நிறுவகம் என்ற வகையில் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகம் நிறுவப்பட்டதிலிருந்து நிறுவகங்களுடன் வலுவான உறவுகளை உருவாக்கி,
மூலோபாய வழிகாட்டுதலை வழங்கி, நிதி, சந்தைப்படுத்தல், மனித வளங்கள் மற்றும் விநியோகச் சங்கிலி முகாமைத்துவம் போன்ற துறைகளில் செயலாற்றத்தை கணிசமாக மேம்படுத்தியுள்ளது. வளர்ந்து வரும் தேவையை உணர்ந்து, முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகம் வியாபார அலகாக முகாமைத்துவ ஆராய்ச்சி ஆலோசனையை உள்ளடக்குவதற்காக அதன் சேவைகளை விரிவுபடுத்தியுள்ளது.

வியாபார அலகு – முகாமைத்துவ ஆராய்ச்சி ஆலோசனையின் வகிபாகம் இரண்டு வகையாகும். முதலாவதாக, இச்சலுகை ஒப்பீட்டளவில் புதியது என்பதால், மூலோபாயத் திட்டம் மூலம் அதன் சேவைகளைப் பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதே இதன் நோக்கமாகும். வியாபார அலகு – முகாமைத்துவ ஆராய்ச்சி ஆலோசனையின் சேவைகளை எவ்வாறு திறம்பட பயன்படுத்துவது என்பது குறித்து நிறுவக ஊழியர்களுக்கு அறிவூட்டுவது மிகவும்முக்கியமாகும். இரண்டாவதாக, உள்ளக மற்றும் வெளிவாரி நிபுணர்களின் உதவியுடன் மூலோபாய, தொழிற்பாடுசார் மற்றும் செயல்பாட்டு முகாமைத்துவ பிரச்சினைகளை கையாளுவதன் மூலம் இவ்வலகு நிறுவக கோரிக்கைகளுக்கு பதிலளிக்கிறது. செயன்முறை அடிப்படை தேவைகள் மதிப்பீட்டில் தொடங்குவதுடன், பின்னர் ஒரு செயல் திட்டத்தை முன்வைக்கிறது. முன்மொழிவு ஏற்றுக்கொள்ளப்பட்டவுடன், அலகு விரவான ஆராய்ச்சியை மேற்கொள்கின்றது. ஒரு மூலோபாயத்தை உருவாக்க வாடிக்கையாளருடன் இணைந்து செயல்படுகிறது. மேலும் செயல்படுத்தல் அல்லது மாற்றும் செயல்முறைக்கு உதவுகிறது. இக்கட்டம் நிலைபேறான மாற்றத்தை அடைவதில் கவனம் செலுத்துகிறது, செயல்திறன் மற்றும் வாடிக்கையாளர் திருப்தியை உறுதி செய்வதற்காக ஒரு கண்காணிப்பு செயல்முறை செயல்படுத்தப்படுகின்றது.

முகாமைத்துவ ஆராய்ச்சி ஆலோசனை, ஆராய்ச்சி நடவடிக்கைகளில் தளர்வான கொள்கைகளை பின்பற்றுவதுடன், வளர்ந்து வரும் வியாபார தோற்றவமைப்புக்கு இணையாக இருப்பதற்கு முன்னணி ஆராய்ச்சி நிறுவகங்களுடன் மற்றும் தொழில்நுட்ப நிறுவகங்களுடன் இணைந்து செயல்படுகிறது. திட்டங்கள் மற்றும் ஒப்படைகள் மூலம் நவீன முகாமைத்துவ நடைமுறைகளுக்கு வெளிப்படும் கற்றல் பங்காளர்களும் - ஊழியர்கள் அல்லது தொழில்முனைவோர் - இதில் ஈடுபடுகின்றனர். பீட உறுப்பினர்களின் வழிகாட்டுதலின் கீழ் இலங்கை நிறுவகங்களுக்கு ஏற்ற முகாமைத்துவ கருவிகளை உருவாக்க இம்முயற்சிகள் பங்களிக்கின்றன. ஒட்டுமொத்தமாக, முகாமைத்துவ ஆராய்ச்சி ஆலோசனை தீர்மானிக்கும் செயன்முறைகளுக்கு ஆதரவளிக்கவும், எளிதாக்கவும் மற்றும் ஆராயவும் ஒரு தளமாக

செயல்படுவதை நோக்கமாகக் கொண்டுள்ளதுடன் நன்கு அறிவுறுத்தப்பட்ட மற்றும் மூலோபாய வழிகாட்டுதல் மூலம் நிறுவகங்களுக்கு கவர்ச்சிகரமான அறிவுசார் விளைவுகளை வழங்குகிறது.

ஆராய்ச்சி அடிப்படையிலான வியாபாரத் தீர்வுகளை வழங்குவதன் மூலமும் தேசிய அளவிலான முகாமைத்துவ மாறுதலுக்கு ஆதரவளிப்பதற்ன மூலமும் நிறுவகத் துறையுடன் ஈடுபடுவதையும் பங்குடமையாவதையும் நோக்கமாகக் கொண்டு 2024 ஆம் ஆண்டின் கடைசி காலாண்டில் முகாமைத்துவ ஆராய்ச்சி ஆலோசனை அலகு தொடங்கப்பட்டது.

முகாமைத்துவ ஆராய்ச்சி ஆலோசனை அலகு, இற்றை வரை நிறுவக கலாச்சாரம், தொழில்தருநர் வரத்தகநாம அபிவிருத்தி மற்றும் மூலோபாய நுணநோக்கு உருவாக்கம் போன்ற துறைகளில் கவனம் செலுத்தி, பல ஆய்வுகளை நிறைவுசெய்துள்ளது. தற்போது, சேவைப் புத்தாக்கம் மற்றும் சந்தை வளர்ச்சி வாய்ப்புகள் அடங்கலாக எதிர்கால வியாபாரத் தோற்றவமைப்பை ஆராயும் கருத்திட்டங்களில் இது ஈடுபட்டுள்ளது. சமத்துவமான வர்ததகநாமப் பெறுமதியை அடையாளங்காணல் மற்றும் புதிய தயாரிப்புகள் மற்றும் சேவைகளில் உள்ள இடைவெளிகளைக் கண்டறிதல் ஆகியவை வரவிருக்கும் கருத்திட்டங்களில் அடங்குகின்றன.

இம்முயற்சிகள் தொழில்துறையின் வளர்ந்து வரும் தேவைகள் மற்றும் அவற்றை நிவர்த்திசெய்வதில் முகாமைத்துவ ஆராய்ச்சி ஆலோசனை அலகு பெற்றுள்ள சக்தி இரண்டையும் பிரதிபலிக்கின்றன. தேசிய மாறுதலடைதல் பக்கத்தில், பரந்தளவில் முகாமைத்துவ மாற்றத்திற்கு ஆதரவளிப்பதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவகங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும் பணியில் அலகு ஈடுபட்டுள்ளது.

தற்போது மூன்று மேலதிக நிபுணர்களுடன் முகாமைத்துவ ஆராய்ச்சி ஆலோசனை அலகு குழுவும் விரிவடைந்துள்ளது, அவர்களில் இருவர் நடந்துகொண்டிருக்கும் கருத்திட்டங்களுக்கு தீவிரமாக பங்களிக்கின்ற முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகத்தின் பழைய மாணவர்களாவர். மேலும், நுண்நோக்கு உருவாக்கத்தை மேம்படுத்தவும் வியாபார அபிவிருத்திக்கு ஆதரவளிப்பதற்கும் ஆராய்ச்சி நிறுவகங்கள் மற்றும் செயலி உருவாக்குநர்களுடன் மூலோபாய, கருத்திட்ட அடிப்படையிலான பங்குடமைகளை உருவாக்குவதை முகாமைத்துவ ஆராய்ச்சி ஆலோசனை அலகு நோக்கமாகக் கொண்டுள்ளது. முடிவுரையாக, முகாமைத்துவ ஆராய்ச்சி ஆலோசனை அலகின் செயலாற்றம் இற்றைவரை திருப்திகரமாக உள்ளது.

# பெறுமதி ஊக்கி 3 – ஒத்துழைப்புக்கள் மற்றும் பங்குடைமைகளை வளப்படுத்துதல்

முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகமானது இலங்கையின் சமூகம் மற்றும் வணிக சமூகம் ஆகியவற்றின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துவதற்கான அதன் மூலோபாய பங்குடைமைகளைப் பயன்படுத்தி வருகின்றது.இந்த ஒத்துழைப்புகளில் சர்வதேச பல்கலைக்கழகங்கள், உள்ளூர் தொழில்கள் மற்றும் அரசு நிறுவகங்கள் ஈடுபட்டுள்ளதுடன், கல்வித் தரத்தை மேம்படுத்துதல், புத்தாக்கங்களை போஷித்தல் மற்றும் தொழில் முனைவோர் வளர்ச்சியை ஊக்குவித்தல் ஆகியவை அடங்கும்.

**சர்வதேச ஒத்துழைப்புக்கள்**

முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகமானது உலகளாவிய ரீதியில் புகழ்பெற்ற கல்வி

நிறுவகங்களுடனான தொடர்புகளை மேம்படுத்துவதற்கு அதிக முன்னுரிமை அளிக்கிறது. உலகளவில். குறிப்பாக, பட்டப்பின் முகாமைத்துவ நிறுவகமானது ஆசிய-பசிபிக் பிராந்தியம் மற்றும் தெற்காசிய நாடுகளின் பிராந்திய கூட்டமைப்பு (SAARC), இந்திய முகாமைத்துவ நிறுவகங்கள் (IIMs) மற்றும் பல்கலைக்கழகங்களில் சிறந்து விளங்கும் மையங்களுடன் தொடர்புகளைக் கட்டியெழுப்ப எதிர்பார்க்கின்றது.

மாணவர்களுக்கும் நிபுணர்களுக்கும் இடையிலான ஒத்துழைப்பு, ஒன்றுக்கொன்று நிரப்பு முன்னோக்குகள், ஆர்வங்கள், திறன்கள் மற்றும் அறிவுத் தளங்களைக் கொண்டு ஆராய்ச்சியாளர்களை ஒன்றிணைப்பதன் மூலம் புதிய அறிவை உருவாக்க முடியும். சமூகத்திற்கு சேவை செய்வதற்கான ஒரு பொதுவான இலக்குகளின் ஆராய்ச்சி ஆய்வுகளில், குறிப்பாக உயர்கல்வி நிறுவகங்கள் ஒன்றிணைந்து செயல்படுவது இப்போது மதிக்கப்படு வேண்டிய பாரம்பரியமாகிவிட்டது.

2015 ஆம் ஆண்டில் நாட்டின் முகாமைத்துவ ஆலோசகராக முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகமானது அவுஸ்திரேலியாவின் கான்பெராவில் உள்ள நியூ சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகத்துடன் ஆராய்ச்சி ஒத்துழைப்புக்காக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன் மூலம் ஒரு மைல்கல் ஒப்பந்தத்தை எட்டியது. இலங்கையில் ஆய்வுக் கற்கைகள் மற்றும் ஆசிரியர் பரிமாற்றத்துடன் இந்தளவு விரிவான ஒத்துழைப்பு நடைபெறுவது இதுவே முதல் முறையாகும். முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகமானது ஆராய்ச்சி மையத்தின் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேம்படுத்துவதில் UNSW உதவியதுடன், மாணவர்கள் மற்றும் பதவியணியினரின் கல்வி/ஆராய்ச்சி திறன்களை மேம்படுத்துவதற்காக கலாநிதிப் பட்ட படிப்புகள் பீட பரிமாற்றங்கள் மற்றும் கூட்டு ஆராய்ச்சி மூலம் பங்களிப்பை நல்கியது.

நியூ சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகம் (UNSW) என்பது “Group of Eight” இல் ஆரம்ப உறுப்பினராகவும், அவுஸ்திரேலியாவின் முன்னணி ஆராய்ச்சி-தீவிர பல்கலைக்கழகங்களில் ஒன்றாகவும் திகழ்கிறது. இது 2020 QS உலக பல்கலைக்கழக தரவரிசையில் 43வது இடுத்தைப் பிடித்தது. “2012 அவுஸ்திரேலியாவுக்கான ஆராய்ச்சியில் சிறந்து விளங்கும் அறிக்கையில், UNSW அனைத்து பரந்த அளவிலான ஆராய்ச்சி துறைகளிலும், அதன் செயல்திறனுக்காக “உலக தரத்திற்கு சமமாக, அதிகமாக அல்லது மிகவும் அதிகமாக” இருப்பதாக அங்கீகரிக்கப்படுடுது. UNSW பரந்த அளவிலான விடயங்களில் ஆராய்ச்சி துறையில் சக்திகளைக் கொண்டுள்ளது. UNSW மற்றும் PIM பரஸ்பர ஆர்வமுள்ள துறைகளில் கூடுடு கல்வி ஆராய்ச்சி திட்டங்களுக்காக ஒத்துழைப்புடன் பணியாற்றி, பீட உறுப்பினர்களை பரிமாறிக்கொள்வது மற்றும் முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகத்தின் கலாநிதி பட்டப்படிப்பை மேம்படுத்தல் போன்ற நடுவடிக்கைகளில் ஈடுபடுட்டுள்ளது.

**சர்வதேச பல்கலைக்கழகங்களில் கலாநிதி பட்டப்படிப்பை நிலைப்படுத்தல்**

சர்வதேச ரீதியான உயர் பட்டப்படிப்பை (கலாநிதி) பூர்த்தி செய்ய விரும்பும் ஆராய்ச்சி கற்றல் பங்காளர்களுக்கு இட வாய்ப்புகள் உள்ளன. முகாமைத்துவ ஆராய்ச்சி திட்டங்களையும் ஒரு வெளியீட்டையும் பூர்த்தி செய்யும் பட்டதாரிகள் தேவையான ஆராய்ச்சி திறன்கள், விடாமுயற்சி, ஒழுக்கம், மற்றும் அறிவார்ந்த எழுத்து திறமை ஆகியவற்றை வெளிப்படுத்தியுள்ளனர். அவர்கள் போட்டி மிக அதிகமாக இருக்கும் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளில் உயர் தரவரிசைப்படுத்தப்பட்ட பல்கலைக்கழகங்களில் சேர்க்கை அனுமதியைப் பெற்றுள்ளனர்.

முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகத்தின் மதிப்புமிக்க உலகளாவிய பல்கலைக்கழகங்களுடனான பங்குடமைகள் மாணவர் மற்றும் ஆசிரியர் பரிமாற்றங்கள், கூட்டு ஆராய்ச்சி முயற்சிகள் மற்றும் கூட்டு கல்வித் திட்டங்களை செயல்படுத்தியுள்ளன. இந்த
இணைப்புகள் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஒரே மாதிரியான கற்றல் அனுபவத்தை வளப்படுத்தும் வகையிலான பட்டப்பின் முகாமைத்துவ நிறுவகத்தின் பாடத்திட்டத்திற்கு உலகளாவிய கண்ணோட்டத்தைக் கொண்டு வருகின்றன. பல்வேறு கலாச்சாரங்கள் மற்றும் வணிக நடைமுறைகளுக்கு மாணவர்களை வெளிப்படுத்துவதன் மூலம், இந்த சர்வதேச ஒத்துழைப்புகள் உலகளாவிய வணிக இயக்கவியல் பற்றிய பரந்த புரிதலை வளர்க்க உதவுகின்றன. மேலும், பீட உறுப்பினர்கள் அவர்களின் நிபுணத்துவத்தை மேம்படுத்தக் கூடியதும் முகாமைத்துவ நிறுவகத்துக்கு பட்டப்பின் கற்கை நிறுவகத்திற்கு அதிநவீன அறிவை மீண்டும் கொண்டு வரக் கூடியதுமான கூட்டு ஆராய்ச்சி வாய்ப்புகளிலிருந்து பயனடைகிறார்கள்

கல்வியின் சர்வதேசமயமாக்கல் மாணவர்கள், கல்வியாளர்கள், நிறுவகங்கள் மற்றும் சமூகங்களுக்கு நீண்டகால தாக்கங்களை ஏற்படுத்துகிறது. அதிநவீன அறிவு, உலகளாவிய கண்ணோட்டங்கள் மற்றும் மொழித் திறன்கள் மற்றும் கலாச்சாரங்களுக்கு இடையேயான திறன்களைப் பெறுதல் ஆகியவை சர்வதேசமயமாக்கப்பட்ட கல்வியால் மாணவர்கள் பயனடையும் முக்கிய அம்சங்களாகும். இது அவர்களின் எல்லைகளை விரிவுபடுத்தவும், போட்டி நிறைந்த உலகளாவிய வேலைகளைப் பொறுத்தவரை மற்றவர்களை விட ஒரு சிறந்த இடத்தைப் பெறவும் உதவும். கல்வியின் சர்வதேசமயமாக்கலின் காரணமாக தொழில்முறை மேம்பாடு கல்வியாளர்களுக்கு முக்கிய நன்மையாகும். உலகளாவிய ஆராய்ச்சி திட்டங்கள், சர்வதேச மாநாடுகளில் பங்கேற்பது மற்றும் உலகெங்கிலும் உள்ள சக துறையினருடன் பிற வகையான ஒத்துழைப்பு ஆகியவை அவர்களின் கற்பித்தல் நடைமுறையை மேம்படுத்துவதோடு அவர்களின் தொழில்முறை வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கும் பங்களிக்கும்.

"புதிய உலகத்திற்கான வியாபாரப் பாடசாலை யாக" மாறுவதற்கு முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகம் சர்வதேசமயமாக்கல் பாதையைப் பின்பற்றுகிறது. பொதுநலவாய நாடுகளின் புலமைப் பரிசில் மாணவர்களுக்கு மேலதிகமாக சீன மற்றும் இந்திய மாணவர்களும் முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகத்தில் முதுகலை பட்டப்படிப்பு திட்டங்களில் சேர்ந்துள்ளனர். தற்போது, சர்வதேச மாணவர்கள் அமைப்பில் ஐந்து சதவீதம் வரை சேர்க்கின்றனர், மேலும் இந்த எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகம் தற்போது சிட்னி பல்கலைக்கழகம், ஹாங்காங் பல்கலைக்கழகம், காசெட்சார்ட் பல்கலைக்கழகம், யுனிவர்சிட்டாஸ் கட்ஜா மடா, மாஸ்ட்ரிச்ட் முகாமைத்துவப் பாடசாலை, பிராங்பேர்ட் நிதி மற்றும் முகாமைத்துவப் பாடசாலை, ஜப்பான் சர்வதேச பல்கலைக்கழகம் மற்றும் யுனிவர்சிட்டி மலேசியாவின் புத்ரா ஆகியவற்றுடன் இணைந்து சர்வதேச முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்களை வழங்கி வருகிறது. இந்த ஆண்டு, செண்டு பல்கலைக்கழகம், கோவா முகாமைத்துவ நிறுவகம் மற்றும் சிச்சுவான் வியாபாரப் பாடசாலை ஆகியவை இந்த நிறுவகத்துடன் மூலோபாய கூட்டாளர்களாக இணைய திட்டமிடப்பட்டுள்ள. இதன் மூலம் தெற்கு மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளுடனான அதன் உறவுகளை மேலும் வலுப்படுத்துகின்றன.

**தொழில் பங்குடமைகள்**

முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகமானது கல்வித்துறைக்கும் தொழில்துறைக்கும் இடையே அர்த்தமுள்ள தொடர்புகளை வளர்ப்பதில் அர்ப்பணிப்புடன் உள்ளதுடன்

தொழில்துறை தலைவர்கள், தொழில்முனைவோர் மற்றும் புத்தாக்கவியலாளர்கள் ஆகியோருடன் ஈடுபாடு கொள்வதற்காக தனித்துவ வாய்ப்புக்களுடனான கற்றல் பங்குதாரர்களை வழங்குகிறது, உள்ளக தொழிற்றுறையுடன் இணைவதனூடாக, கல்வி கோட்பாடு மற்றும் நிஜ உலக பயன்பாட்டிற்கு இடையிலான இடைவெளியை இணைக்கக் கூடிய பாலமாக இருக்கக் கூடிய நடைமுறைப் பயிற்சிகள், வழிகாட்டற் செயற்றிட்டம் ஆகியவற்றை பட்டப்பின் முகாமைத்துவ நிறுவகமானது வழங்குகின்றது. வலையமைப்பு நிகழ்ச்சி, தொழிற்றுறைப் பங்குடமைகள் மற்றும் இணைந்த ஆராய்ச்சி செயற்றிட்டம் என்பவற்றின் ஊடாக கற்றல் பங்குதாரர்கள் நிஜ உலக சவால்கள் மற்றும் சந்தர்ப்பங்களுக்கருள் ஒரு பெறுமதியான ஆழமான அறிவை அடைந்த கொள்ளும் அதே வேளை தொழில்துறை சார்ந்த முயற்சிகளுக்கு தங்கள் நிபுணத்துவத்தையும் பங்களிக்கிறார்கள். இந்த பங்குடமைகள், கற்றல் பங்காளர்கள் மதிப்புமிக்க நேரடி அனுபவத்தையும் தொழில்துறை நுண்ணறிவுகளையும் பெறுவதை உறுதிசெய்கின்றன, இதனால் அவர்கள் தொழில் சந்தையில் அதிக போட்டித்தன்மை கொண்டவர்களாகிறார்கள். பரஸ்பர நன்மை பயக்கும் உறவுகளை வளர்க்கக் கூடிய முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகத்தின் கற்றல் பங்காளர்கள் மற்றும் பீடத்தால் வழங்கப்படும் புதிய கண்ணோட்டங்கள் மற்றும் புதுமையான தீர்வுகளிலிருந்து தொழிற்றுறைகள் பயனடைகின்றன. இந்த பங்குடமை குறிப்பிட்ட தொழில்துறை தேவைகளைப் பூர்த்தி செய்ய வடிவமைக்கப்பட்ட தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சித் திட்டங்கள் மற்றும் பட்டறைகளை உருவாக்க வழிவகுக்கிறது, விஷேடமாக பணியாளர் திறன்கள் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துகிறது.

அனுபவம் வாய்ந்த நிபுணர்களிடமிருந்து அதிநவீன ஆராய்ச்சி வசதிகள் மற்றும் வழிகாட்டுதலுக்கான அணுகலுடன் முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகமானது இன்றைய போட்டி நிறைந்த சந்தையில் செழிக்கத் தேவையான அறிவு, திறன்கள் மற்றும் தொலைநோக்குப் பார்வையுடன் மாணவர்களுக்கு உதவுகிறது.

இலங்கை முழுவதும் பெண் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்வதற்காக முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகமானது கொமர்ஷல் வங்கியுடன் இணைந்துள்ளது. இதன்
மூலம் அடையாளம் காணப்பட்ட பெண் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முனைவோருக்கு வணிக மாதிரியாக்கம், வரவு செலவுத் திட்டம் தயாரித்தல், வணிக மேம்பாடு, பேச்சுவார்த்தைத் திறன்கள், ஒரு வணிகத்தை முன்னிறுத்துதல், விற்பனை மற்றும் வணிக மேம்பாடு போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**அரசு துறையில் ஒத்துழைப்புகள்**

பட்டப்பின் முகாமைத்துவ நிறுவகமானது அரச துறை முகாமைத்துவப் பயிற்சி, கொள்கை மேம்பாடு மற்றும் திறன் மேம்பாட்டு முயற்சிகள் ஆகியவற்றுக்கு அதரவளிப்பதற்காக பல்வேறு அரசு நிறுவகங்களுடன் நெருக்கமாக இணைந்த பணியாற்றுகின்றது. இந்த முயற்சிகள் ஆளுகை மற்றும் நிர்வாக செயல்திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன, இது நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு பங்களிக்கிறது. பயனுள்ள கொள்கைகளை உருவாக்குவதற்கும் மற்றும் திறமையான நிர்வாக நடைமுறைகளை நடைமறைப்படுத்துவதற்கும் உதவும் பட்டப்பின் முகாமைத்துவ நிறுவகத்தின் நிபுணத்துவத்திலிருந்து அரசு நிறுவகங்கள் பயனடைகின்றன, இந்த ஒத்துழைப்பில் சமகால நிர்வாக சவால்களை எதிர்கொள்வதற்கு அவசியமான தலைமைத்துவ மேம்பாடு மற்றும் மூலோபாய முகாமைத்துவத்தை இலக்காக கொண்ட பொதுத்துறை ஊழியர்களுக்கான வடிவமைக்கப்பட்ட திட்டங்களும் அடங்கும், அரச துறையில் திறன் கட்டமைப்ப தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களை வடிவமைத்து வெளியிடுவதை உறுதி செய்வதற்காக, உள்நாட்ட

இறை வரித் திணைக்களம், சுங்கத் திணைக்களம், கல்வி அமைச்ச மற்றும் பல்வேறு அரச அமைப்பக்களடன் இணைந்த செயற்படுகின்றது.

**வரியியல் தொடர்பான வியாபார முகாமைத்துவ முதுமாணி (MBAT)**

வரிவிதிப்பு தொடர்பான வியாபார முகாமைத்துவ முதுமாணி (MBAT) நிகழ்ச்சித் திட்டமானது மற்றமொரு அரச துறை நிறுவகமான உள்நாட்ட இறைவரித் திணைக்களத்தின் தகைமைகள் மற்றும் திறன் கட்டமைப்பின் ஊடான முகைமைத்துவ பட்டப்பின் நிறுவகத்தின் அர்ப்பணிப்பின் ஒரு விளைவாகும்.இந்த MBAT திட்டத்தின் இலக்கானது உள்நாட்ட இறைவரித் திணைக்களத்தின அதிகாரிகளின் நிர்வாகத் திறன்களை மேம்படுத்துவதும், அதன் மூலம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குள் சிறந்த நிர்வாகம் மற்றும் உயர் அடைவுகளுக்கு பங்களிப்பு வழங்குவதும் ஆகும். மேலும், இந்த தகுதியானது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் கடைமை புரியும் இத்தகைய அலுவலர்களது தொழில் விருத்திக்கான தேவைப்பாடாக கருதப்படும்.

உண்மையில், இது தெற்காசியாவில் வரிவிதிப்பு தொடுர்பான முதல் சிறப்பு வியாபார நிர்வாக பட்டப்பின் கற்கை ஆகும். உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் (IRD) நான்கு குழு அலுவலர்கள் வெற்றிகரமாக பயிற்சியை முடித்துள்ளனர். MBAT கவனமாக வடிவமைத்து, கட்டமைக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. இது எங்கள் கற்றல் கூட்டாளர்கள் ஒரு உலகளாவிய மனநிலையை வளர்க்கவும், அவர்கள் செயல்படும் வணிக விடுயங்கள் தொடர்பான தேர்ச்சி பெறுவதற்கும் ஒரு உள்ளூர் உணர்வை ஏற்படுத்தவும் உதவுகிறது. போட்டியை வெல்வது மட்டுமல்லாமல், போட்டியை பொருத்தமற்றதாக மாற்றுவதற்கும், வாடிக்கையாளர்கள் மற்றும் பிற பங்குதாரர்களுக்கு அதிக மதிப்பை உருவாக்குவதற்கும் அவர்களை பயிற்றுவிக்கப்படுடு மேம்படுத்தப்பட்டுள்ளனர். முகாமைத்துவ பட்டப்படிப்பு நிறுவகத்தின் குழுவானது பரந்த அறிவு மற்றும் அனுபவத்தை வழங்கும் கல்வி மற்றும் தொழில் தலைவர்களின் சிறந்த கலவையாகும்.

இதன் விளைவாக, மற்றவர்களை விட உயர்ந்து நிற்கும் அதே நேரத்தில், வித்தியாசமாக விடுயங்களைச் செய்யும் அல்லது அவர்கள் பெற்ற நிபுணத்துவம் மூலம் வித்தியாசமான விடயங்களைச் செய்யும் தொழில்முறை முகாமையாளர்கள் குழுவை உருவாக்குவது ஆகும்.

முகாமைத்துவ பட்டப்பின கற்கை நிறுவகத்தின் வரியியலில் வியாபார முகாமைத்துவ முதுமாணி (MBAT) நிகழ்ச்சித் திட்ட இளமானிப் பட்டத்தின் கற்றல் இலக்குகளாக பின்வருவன அமையும்.

அ. பிரதான அறிவு, திறன்கள் மற்றும் மனப்பான்மைகளை உள்ளூர் மற்றும் உலகளாவிய நிலைகளில் அங்கீகரிக்கவும் , மற்றும் நிதி பரப்பில் தற்போதைய பிரச்சினைகள் குறித்த அவசியமான விழிப்புணர்வை வெளிப்படுத்துதல்

ஆ. நாட்டில் உள்ள நிதிப் பிரச்சினைகளைத் தீர்க்க, விமர்சன மற்றும் தர்க்கரீதியான சிந்தனை மற்றும் ஆழமான பகுப்பாய்வு மூலம் பொருத்தமான நுட்பங்களைப் பயன்படுத்தி, சரியான தீர்ப்புகளுடன் பிரச்சினை இனங்காண்பைப் பிரதிபலிக்கவும்.

இ. வலையமைப்பு மூலம் தொடர்புடைய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பொது மற்றும் தனியார் நிறுவகங்களை சென்றடையவும், மற்றும் தொடர்புடைய சிறப்பு மற்றும் சிறப்பு அல்லாத குழுக்களுக்கு முடிவுகளைத் தெளிவாக அறிவிக்கவும்.

ஈ. பொருளாதார, சமூக மற்றும் அரசியல் தொடர்பான முக்கியத்துவத்தையும், வணிக மற்றும் நிதி நடவடிக்கைகளின் மனிதாபிமான அம்சங்களையும் இனங்கண்டு, சிந்தனைத்

தலைவர்களாக பிரச்சினைகளைக் கண்டறிந்து தீர்ப்பதில் சுய-திசை மற்றும் உண்மைத் தன்மையுடன் செயற்படுதல்

உ. நிதிச் சூழலில் முடிவுகள் எடுக்கப்படும்போது பெறுமானங்கள் குறித்து விழிப்புடன் இருப்பதன்

மூலம் தொழில்வாண்மை, நேர்மை மற்றும் நெறிமுறைகளை வலுப்படுத்துதல்

**சுங்கம் மற்றும் சர்வதேச வியாபாரம் - வணிக நிருவாக பட்டப்பின்படிப்பு பட்டம் (MBAC)**

சுங்கத் தொழிலின் பல்வேறு அம்சங்கள் மிகவும் சிக்கலான பிரச்சினைகளை முன்வைக்கின்றன. இருப்பினும், இந்த பிரச்சினைகளைத் தீர்க்கப் பயன்படுத்தப்படும் சரியான அணுகுமுறையுடனான மனப்பான்மை உண்மையான மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகத்தின் சுங்கம் மற்றும் சர்வதேச வணிகம் தொடர்பான வியாபார நிர்வாக பட்டப்பின் கற்கை (MBA-CIT) பாடுநெறி எங்கள் சுங்க அலுவலர்களுக்கு தேவையான திறனையும் நம்பிக்கையையும் வழங்கும் வகையில் சிறப்பாக வடிவமைக்கப்படுடுள்ளது. சுருக்கமாக, MBA-CIT இந்த குறிப்பிடுடு துறையில் உண்மையான நிபுணத்துவத்தை வழங்குகிறது. மேலும், தொழில்துறையின் இயல்பின்படி, நவீன சுங்க நடைமுறைகள் முற்றிலும் தனிமைப்படுத்தப்பட்ட சூழலில் செயல்பட முடியாது என்பதால், முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகத்தின் MBA-CIT பாடநெறி எங்கள் சுங்க அலுவலர்களுக்கு ஒரு உலகளாவிய மனநிலையை வளர்க்க உதவுகிறது.

மேலும், இலங்கை சுங்கம் (SLC) மற்றும் வெளிநாட்டு நிறுவகங்களிலிருந்து சர்வதேச அளவில் புகழ்பெற்ற சுங்க நிபுணர்களை அதன் பீடத்தில் இணைத்துக்கொள்வதில முகாமைத்துவ பட்டப்பின் நிறுவகம் இதுவரை வெற்றிகரமாக உள்ளது. இது அதன் உண்மையான அர்த்தத்தில் விலைமதிப்பற்ற அனுபவக் கற்றல் ஆகும்.

கற்றல் இலக்குகளாக,

அ. உள்ளூர் மற்றும் உலகளாவிய மட்டத்தில் முக்கிய அறிவு, திறன்கள் மற்றும் மனப்பாங்குகளை அங்கீகரித்தல் மற்றும், சுங்க நடவடிக்கைகளில் தற்போதைய பிரச்சினைகள் குறித்த முக்கியமான விழிப்புணர்வை வெளிப்படுத்துதல்

அ. நாட்டில் சுங்க நடவடிக்கைகளில் உச்ச மட்டத்தில் உள்ள சிக்கல்களைத் தீர்க்க, நியாயமான தீர்ப்புக்களுடன் பொருத்தமான நுட்பங்களைப் பயன்படுத்தி விமர்சன மற்றும் தர்க்கரீதியான சிந்தனை மற்றும் ஆழமான பகுப்பாய்வு மூலம் சிக்கல் அடையாளத்தை பிரதிபலிக்கவும்.

இ. வலையமைப்பு மூலம் உள்ளூர் மற்றும் உலகளாவிய அளவில் தொடர்புடைய பொது மற்றும் தனியார் நிறுவகங்களை அணுகி, தொடர்புடைய விஷேடமான மற்றும் விஷேடத்துவம் அல்லாத குழுக்களுக்கு முடிவுகளை தெளிவாகத் அறிவித்தல்

ஈ. பொருளாதார மற்றும் சுற்றாடல் தொடர்பான மற்றும் மனிதாபிமான அம்சங்கள் ஆகியவற்றை உணர்ந்து, ஒரு சிந்தனைத் தலைவராக சிக்கல்களைத் தீர்ப்பதிலும் தீர்ப்பதிலும் சுய-திசை மற்றும் உண்மைத் தன்மையை தன்மையை வெளிக்கொணர்தல்

உ சுங்கத் துறையில் முடிவுகள் எடுக்கப்படும்போது பெறுமானங்கள் குறித்து விழிப்புடன் இருப்பதில் தொழில்வாண்மை, நேர்மை மற்றும் கோட்பாடுகளை வலுப்படுத்துதல்

**கல்வி நிர்வாகம் தொடர்பான பொது நிர்வாக பட்டப்பின் படிப்பு பட்டம் (MPA-EM)**

கல்வியாளர்களின் பரிமாற்றத்திற்காக வடிவமைக்கப்பட்ட கல்வி முகாமைத்துவத்தில் பொது நிர்வாக (MPA-EM) முதுமாணி திட்டத்தை முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகம் வழங்குகிறது. இலங்கையில் முதுகலை கல்வியின் முன்னோடிகளாக இருக்கும் பட்டப்பின் முகாமைத்துவ நிறுவகமானது இலங்கையில் கல்வி அமைச்சினால் (MOE) அங்கீகரிக்கப்பட்ட மிகவும் கவனமாக வடிவமைக்கப்பட்ட MPA-EM திட்டங்களில் ஒன்றை வழங்குகிறது. இது கல்வியில் சிறந்து விளங்குவதற்கான சாதனமாக திகழ்கின்றது.. கோட்பாடு மற்றும் நடைமுறை பிரயோகத்தின் பல்திறன் வாய்ந்த கலப்பின் மூலம், விமர்சன சிந்தனை திறன்கள், தலைமைத்துவ திறன் மற்றும் மூலோபாய மனநிலை ஆகியவற்றுடன் அதற்கு மேலதிகமாக கல்வித் துறையில் வெற்றி பெறுவதற்கான தொழில்நுட்ப திறன்களையும் இந்தத் திட்டம் பங்கேற்பாளர்களுக்கு வளர்க்கிறது. நிஜ உலக சவால்கள் மற்றும் அனுபவக் கற்றல் மீதான முக்கியத்துவமானது , சிரேஷ்ட ஆசிரியர்கள், பாடசாலை அதிபர்கள் மற்றும் சிரேஷ்ட கல்வி நிர்வாகிகள் உள்ளிட்ட சிரேஷ்ட கல்வியாளர்கள் தங்கள் தொழிலிலும் அதற்கு அப்பாலும் உடனடி தாக்கத்தை ஏற்படுத்தத் தயாராக பட்டம் பெறுவதை உறுதி செய்கிறது.

அவர்களின் மூலோபாய சிந்தனையை மேம்படுத்துவது முதல் திறம்பட முடிவெடுக்கும் கலையில் தேர்ச்சி பெறுவது வரை, பட்டப்பின் முகாமைத்துவ நிறுவகத்தின் பாடத்திட்டமானது, கல்வியாளர்களாக தங்கள் பங்கில் வெற்றிபெறத் தேவையான திறன்கள் மற்றும் நுண்ணறிவுகளுடன் பங்கேற்பாளர்களை மேம்படுத்துகிறது.

**தொழில்முனைவோர் சுற்றாடல் கட்டமைவுகளின் ஆதரவு**

பதிய வணிகங்கள் மற்றும் சிறு வணிகங்களை வளப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட அதன் திட்டங்கள் மூலம் பட்டப்பின் முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகத்தின் தொழில்முனைவோர் மீதான கவனம் சான்றாகும். வழிகாட்டுதல், வளங்கள் மற்றும் வலையமைப்பு வாய்ப்புகளை வழங்குவதன் மூலம், முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகம் வளரும் தொழில்முனைவோருக்கு புதுமையான யோசனைகளை வெற்றிகரமான முயற்சிகளாக மாற்ற உதவுகிறது. தொழில்முனைவோர் அனுபவம் வாய்ந்த வழிகாட்டிகளிடமிருந்து சிறந்த அறிவுச் செல்வத்தைப் பெறுகிறார்கள், அத்துடன் தங்கள் வணிகங்களைத் தொடங்கவும் விருத்தி செய்யவும் நிதி மற்றும் தளபாட ஆதரவைப் பெறுகிறார்கள். இந்தத் திட்டங்கள் தனிப்பட்ட தொழில்முனைவோர் வெற்றியை வளர்ப்பது மட்டுமல்லாமல், வேலைவாய்ப்புகளை உருவாக்குவதன் மூலமும் புதுமைகளை இயக்குவதன் மூலமும் பரந்த பொருளாதார நிலப்பரப்பிற்கு பங்களிக்கின்றன.

மக்கள் மற்றும் நிறுவகங்களில் மதிப்பை உருவாக்குவதற்கான பட்டப்பின் முகாமைத்துவ நிறுவகத்தின் நோக்கத்திற்கு இணங்க, அதன் incubator “Genesis ஒரு தவிர்க்க முடியாத மற்றும் முக்கிய பங்கை வகிக்கிறது. கல்வி மற்றும் தொழில்துறை திறன்களைக் கொண்ட அதன் நிபுணர்களின் குழுவுடன் கூடிய “Genesis” சமூகத்தில் அடையாளம் காணப்பட்ட துறைகளில் தொழில்முனைவோரின் அதிகரித்த பெருக்கத்தை விரும்புகிறது. இறுதித் திட்டமாக தொழில்முனைவோர் திறன் ஆராய்ச்சி திட்டங்களைத் தேர்ந்தெடுக்கும் ஆடீயு கற்றல் பங்காளர்களை வழிநடத்துவதே ஆரம்ப நோக்கமாக இருந்தபோதிலும், தற்போது “Genesis” முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகத்தின் இயற்பியல் எல்லைகளுக்கு அப்பால், நாட்டில் தொடக்கநிலை தொழில்முனைவோரின் திறன்களை மேம்படுத்துவதில் ஒரு வினை ஊக்கியாக அதன் சேவைகளை விரிவுபடுத்துகிறது.

தொழில்முனைவோர் மேம்பாட்டிற்கான இந்த நோக்கத்துடன், “Genesis”எமது கற்றல் பங்காளர்கள் முன்மொழிந்த வணிக யோசனைகளை திட்ட முன்மொழிவுகளாக வெளியிடுதல், திட்டங்களை மாற்றுவதில் உதவுதல், யோசனைகளை சாத்தியமான முயற்சிகளாக மாற்றுவதற்கான பயிற்சி, பலவீனமான தொடக்கங்களை மேம்படுத்துவது, ஆரம்ப தடைகளை சமாளித்து தொழில்முனைவோர் பயணத்தில் சீராக முன்னேற வழிகாட்டுதல் உள்ளிட்ட பல செயல்பாடுகளை முன்னிலைப்படுத்துகின்றது. “Genesis” எங்கள் கற்றல் பங்காளர்கள் தங்கள் பட்டப்பின் கற்கைகளில் வணிக நிர்வாகத்தில் பெற்ற திறன்கள் மற்றும் அறிவை திறம்பட பிரயோகிப்பதன் மூலம் எதிர்பார்க்கப்படும் முடிவுகளை அடைவதை உறுதி செய்கிறது.

முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகத்தின் கற்றல் பங்காளர்களைத் தாண்டி, தாம் செயல்படும் வணிகச் சூழலின் சிக்கல்களைத் தீர்க்கத் தேவையான திறன்கள் மற்றும் மனநிலையுடன் கூடிய புத்துயிர் பெறும் தொழில்முனைவோரை வளப்படுத்துவதற்கான உந்துதலாக மாறுவதே “Genesis” இன் நோக்கமாகும். இந்தச் செயற்பாட்டில் முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகத்தின் வலுவான பழைய மாணவர்கள் மூலம் வழங்குனர் வலையமைப்புடனான தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய வணிக நிறுவகங்கள், கொள்வனவாளர்கள், பிற கல்வி நிறுவகங்கள், வர்த்தக சங்கங்கள், ஒழுங்குமுறை அதிகாரிகள் மற்றும் சேவை வழங்குநர்களை இணைக்கும் ஒரு சக்தி வாய்ந்த அமைப்பாக ஜெனிசிஸ் செயல்படுகிறது. இதுபோன்ற ஈடுபாடுகளுடன், இறுதியில் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு பங்களிக்கும் வழிகாட்டுதல் அமர்வுகள், தனிப்பட்ட ஆலோசனைகள், பயிற்சித் திட்டங்கள் மற்றும் வழக்கு விளக்கக்காட்சிகள் போன்றவை உள்ளிட்ட தனிப்பயனாக்கத்திட்ட நிகழ்ச்சிகள் ஆகியவையும் அடங்கும்.

முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகத்தின் சொந்த “Genesis” செயல்பாட்டுக்கு வந்து பொதுமக்களுக்குக் கிடைக்கும் அதே வேளையில், தொழில்முனைவோருக்கான வணிகக் கல்வியை மேம்படுத்துவதற்காக COYLE போன்ற தொழில்முனைவோர் குழுக்கள் முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகம் இணைந்து செயல்படுகிறது. மேலும முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகத்தின் மூலம் குழுக்கள் அவர்களுக்கு ஆதரவளிப்பதற்கான வழிகளைக் கண்டறிய ஒத்துழைப்புகள் மூலம் PIM குழுக்களுடன் நெருக்கமாகப் பணியாற்றுகிறது.

**ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கம்**

வணிகம் மற்றும் சமூகத்தில் உள்ள சமகால சவால்களை எதிர்கொள்ளும் ஆராய்ச்சியை முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகம் வலியுறுத்துகிறது. தொழில்துறை பங்காளர்கள் மற்றும் கல்வி நிறுவகங்களுடனான கூட்டு ஆராய்ச்சி திட்டங்கள் ஆகியவை பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றத்திற்கு பங்களிக்கும் புதுமையான தீர்வுகளில் முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகம் முன்னணியில் இருப்பதை உறுதி செய்கின்றன. இந்த ஆராய்ச்சி முயற்சிகள் நிலைபெறுதன்மை, டிஜிடல் மாற்றம் மற்றும் நிறுவக நடத்தை போன்ற முக்கியமான தலைப்புகளில் கவனம் செலுத்துகின்றன. அவை கல்வி நிபுணர்கள் மற்றும் வணிகத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு பயனுள்ள நுண்ணறிவுகளை வழங்குகின்றன. விசாரணை மற்றும் புதுமை கலாச்சாரத்தை பின்பற்றுவதன் மூலம், சமூக முன்னேற்றத்தை இயக்கும் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை வடிவமைக்க பட்டப்பின் முகாமைத்துவ நிறுவகம் உதவுகிறது. FITIS ( இலங்கை தகவல் தொழில்நுட்ப தொழில் கூட்டமைப்பு) போன்ற தொழில் அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றுவது அறிவுப் பகிர்வு மற்றும் ஊடாடும் அமர்வுகளை ஏற்பாடு செய்வதற்கான வாய்ப்புகளையும் உருவாக்குகிறது.

**சமூக ஈடுபாடு**

பட்டப்பின் முகாமைத்துவ நிறுவகம் உள்ளூர் பிரச்சினைகளை நிவர்த்தி செய்து நிலையான வளர்ச்சியை ஊக்குவிக்கும் சமூக ஈடுபாட்டுத் திட்டங்கள் மூலம் சமூகப் பொறுப்புணர்வுக்காக உறுதிபூண்டுள்ளது. இந்த முயற்சிகள் கல்வித் துறைக்கு அப்பால் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதற்கான முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகத்தின் அர்ப்பணிப்பை வெளிக்கொணர்கின்றன. சமூகத் திட்டங்கள் பெரும்பாலும் கல்வித் தொடர்பு, சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் சமூக தொழில்முனைவு போன்ற முயற்சிகளில் மாணவர்களும் ஆசிரியர்களும் இணைந்து பணியாற்றுவதில் ஈடுபடுகின்றன. இந்த முயற்சிகள் உள்ளூர் சமூகங்களுக்கு பயனளிப்பது மட்டுமல்லாமல், பட்டப்பின் முகாமைத்துவ நிறுவகத்தின் மாணவர்களிடையே குடியியல் பொறுப்பு மற்றும் நெறிமுறைத் தலைமைத்துவ உணர்வை வளர்த்து, அவர்களின் எதிர்கால வாழ்க்கையில் மனசாட்சியுள்ள தலைவர்களாக இருக்க அவர்களைத் தயார்படுத்துகின்றன. பல்வேறு துறைகள் மற்றும் பிரிவுகள் முழுவதும் வலையமைப்பு மற்றும் அறிவுப் பகிர்வுக்காக நடாத்தப்படும் வணிகப் பேச்சுக்கள் மற்றும் வணிக நிகழ்வுகளுக்கு வணிக சமூகம் மற்றும் நிபுணத்துவ சமூகத்தின் உறுப்பினர்கள் அழைக்கப்படுகிறார்கள். வணிகத் தலைவர்களின் மாலை நேரங்கள், வணிக வினா அவற்றில் சிலவாகும்.

கிராமப்புற ஆரம்பப் பள்ளிகளில் சமூக மேம்பாட்டுச் செயற் திட்டங்கள் மற்றும் உற்பத்தித்திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் கடந்த 12 ஆண்டுகளாக முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகத்தின் CSR முயற்சிகளின் ஒரு பகுதியாகும். ஆடீயு இறுதியாண்டு மாணவர்கள், தங்கள் முதுகலை பட்டப்படிப்புத் தேவையின் ஒரு பகுதியைப் பூர்த்தி செய்வதற்காக இந்தத் திட்டங்களில் ஈடுபடுகின்றனர். இலங்கை தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் பிரமாணத்தின்படி, உற்பத்தித்திறன் மேம்பாட்டுத் திட்டங்களில், மாணவர்கள் கிராமப்புற ஆரம்பப் பாடசாலையுடன் இணைந்து பணியாற்றுவதுடன், கல்வித் துறையில் தேசிய உற்பத்தித்திறன் விருதுக்கான அளவுகோல்களை பூர்த்தி செய்ய பாடசாலையின் தரத்தை மேம்படுத்துகின்றனர், இலங்கை தற்போது நிலையான அபிவிருத்தி இலக்குகள் (SDG) மற்றும் அடுத்த பதினைந்து ஆண்டுகளில் பூமியைப் பாதுகாக்கும் அதே வேளையில் வாழ்க்கையை எவ்வாறு மேம்படுத்தும் என்பதில் கவனம் செலுத்தி வருகிறது. நிலையான வளர்ச்சிக் கொள்கைகளை உருவாக்குவதன் மூலம், உள்ளூர் அரசாங்கங்கள் சமூகத்துடன் இணைந்து, குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், உலகளாவிய சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் பங்களிக்கவும் முடியும். பட்டப்பின் முகாமைத்துவ நிறுவகமானது நிலையான அபிவிருத்தி இலக்குகளை ஆதரிக்கும் திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்துவதில் ஈடுபட்டுள்ளது.

**நிலையான அபிவிருத்தி இலக்குகள் (SDG) இலக்கு 3: சிறந்த ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு**

இலக்கு 3 இல் கவனம் செலுத்துதல்: அனைத்து வயதினருக்கும் ஆரோக்கியமான வாழ்க்கையை உறுதி செய்தல் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துதல் கிராமப்புற பாடசாலைகளில் சிறந்த ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை வளர்க்க உதவும் உற்பத்தித்திறன் மேம்பாட்டில் முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகம் கவனம் செலுத்தியுள்ளது.

தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் (NPS) அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பாடசாலையின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதே இந்த திட்டத்தின் நோக்கமாகும். இதற்கு தகுதி பெறுவதற்காக, பாடசாலையானது, 40% க்கும் அதிகமானோர் சமுர்த்தி

பயனாளிகளாகவும், கல்வி அமைச்சினால் கஷ்டப் பிரதேசமாக வகைப்படுத்தப்பட்டவர்களாகவும் இருக்கும் ஒரு கிராமத்தில் அமைந்திருக்க வேண்டும். ஒரு பாடசாலையின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதும், தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலையில் உள்ள சிறுவர்களின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கு ஆதரவளிப்பதும் முக்கிய நோக்கமாகும்.

பாடசாலை சூழலை மேம்படுத்துதல்: பாதைகள் வகுப்பறைகள் மற்றும் குழந்தைகளில் 5S மனநிலையை உருவாக்குதல் தலைமைத்துவத்தை மேம்படுத்துதல்: குழந்தைகளில் தூர நோக்கு, குறிக்கோள்கள், இலக்குகள், மாணவர்களில் தலைமைத்துவத்தை அங்கீகரித்தல்:

படைப்பாற்றல் மற்றும் பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன், மாணவர்களை QC மேம்பாட்டுத் திட்டங்களில் ஈடுபட வைப்பது 5S மாதிரி வகுப்பறைகளை உருவாக்குதல் சுகாதாரம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துதல் சிரேஷ்ட மாணவர்களுக்கான ஆளுமை அபிவிருத்தி மற்றும் மென் திறன் பயிற்சிப் பட்டறை: மாணவர்களுக்கான புலமைப் பரிசில்: பாடசாலைக் கல்விக்குப் பின்னரான அதரவு: படைப்பாற்றலை மேம்படுத்த போட்டிகளை ஏற்பாடு செய்தல்: பசுமை கருத்துக்களை ஊக்குவித்தல் வீட்டுத் தோட்டங்கள்: மற்றும் பாடசாலை சமூக நலனை ஊக்குவித்தல்.

**சமூக அபிவிருத்தி கருத்திட்டங்கள்**

**நிலையான அபிவிருத்தி இலக்குகள் (SDG) இலக்கு 1 : வறுமையை இல்லாதொழித்தல்**

இலக்கு 1 இல் கவனம் செலுத்துகையில், முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகமானது பாடசாலை, கோயில் மற்றும் சமூகத்தை ஒருங்கிணைப்பதன் மூலம் சமூக மேம்பாட்டை ஆரம்பித்துள்ளது. செயற்திட்ட தளம் பரெய்கம தெரிவு செய்யப்பட்டுள்ளது. அதன்போது, மேமா/மத்/பரெய்கம மகா வித்தியாலயத்துடன் இணைந்து செயற்படுகின்றது. பரெய்கம மக்களில் 70% க்கும் அதிகமானோர் சமூர்த்தி உதவி பெறுபவர்களாகவும், அவர்களில் பெரும்பாலானோர் தமது அன்றாட வாழ்வாதாரத்திற்காக தினசரி வருமானத்தை நம்பியிருப்பவர்களாகவும் உள்ளனர்.

**திட்ட இலக்குகள்**

அ. பரெய்கம மகா வித்தியாலயத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் குடும்பங்களுக்கு ஒரு சிறு வணிகம்/வீட்டு நிறுவகத்தை உருவாக்க உதவுதன் மூலம் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதன் ஊடாக அவர்களின் வறுமையை ஒழிப்பதற்கு
ஆ. வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு: நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு மற்றும் சமூகத்தின் எதிர்கால தொழில் வாய்ப்புகள் மேம்படுத்துதல்.
இ. மதம், சமூகம், கலாச்சார நடவடிக்கைகள் மற்றும் விவசாய உற்பத்தி மூலம் கோயில் மற்றும் பாடசாலையுடன் சமூகத்தை ஒருங்கிணைப்பதன் மூலம் சமூக ஈடுபாட்டை வலுப்படுத்துவதற்கு
3 வருட கால ஆய்வானது பாடசாலை இணைக்கப்பட்ட சமூகத்தையும் கோவிலுடனும்
இணைக்கப்பட்ட மாதிரியை அடிப்படையாகக் கொண்டது. அதிபர் தலைமையிலான பாடசாலை முக்கிய பங்கு வகித்தது, பெற்றோர் மற்றும் ஆசிரியர் சங்கங்கள் ஈடுபாட்டிற்கான தளமாகப் பயன்படுத்தப்பட்டன. வாழ்வாதார மேம்பாடு முக்கியமானது, அதே நேரத்தில் கோவிலை மையமாகக் கொண்டு சமூகத்தின் சமூக வளர்ச்சி தொடங்கப்பட்டது. கோவிலுடன்

சமூகத்தின் ஒருங்கிணைப்பு, 5S மூலம் உற்பத்தித்திறனை ஊக்குவித்தல், போதைப்பொருள் குறித்து சமூகத்திற்கு தெளிவுபடுத்துதல், நிலையான சுகாதாரம் மற்றும் பாலியல் ஆரோக்கியம் குறித்த பயிற்சி பட்டறைகள் மற்றும் கல்வி நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் சுகாதார நாப்கின்களை நன்கொடையாக வழங்குதல் (உயர்தர மாணவர்களுக்கான அன்பளிப்பாளர்களால் அனுசரணை வழங்கப்பட்ட பாடசாலைக்குப் பின்னரான கற்பித்தல்).

**முன்னாள் மாணவர்களின் பங்குடமை**

முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகமானது தற்போதைய மற்றும் எதிர்கால பங்குதாரர்களிடையே அதன் இருப்பை மேம்படுத்துவதற்கான வலுவான வெளிப்புற வலையமைப்புக்களை பராமரிப்பதற்கு முன்னுரிமை அளிக்கிறது. அத்தகைய ஒரு முக்கிய வலையமைப்பில் ஒன்று அதன் முன்னாள் மாணவர் சங்கமான, 1983 இல் உருவாக்கப்பட்ட முகாமைத்துவ முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகத்தின் முன்னாள் மாணவர்கள் சங்கம (PIMA) ஆகும். தற்போது PIMA-வில் ஒவ்வொரு வருடாந்த பொதுக் கூட்டத்திலும் தேர்ந்தெடுக்கப்படும் அதன் தலைவர் மற்றும் நிர்வாகக் குழுவால் ஏற்பாடு செய்யப்படும் பல்வேறுபட்ட நிகழ்வுகளில் பங்குபற்றும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட செயற்படு நிலையில் உள்ள உறுப்பினர்கள் உள்ளனர். PIMA-வால் முன்னெடுக்கப்படும் பல்வேறு செயல்பாடுகளில், பொருளாதாரம், சமூகவியல், முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான துறைகளில் சமகால பிரச்சினைகள் குறித்த பொது மன்றங்கள், பேச்சாளர்கள், நடுவர் குழு உறுப்பினர்கள் மற்றும் மதிப்பீட்டாளர்களாக பங்கேற்கும் நிரூபிக்கப்பட்ட திறமை வாய்ந்த பிரபலங்களால் பகிர்ந்து கொள்ளப்படும் நுண்ணறிவுகளின் காரணமாக, அனைத்து பங்குதாரர்களாலும் பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது நான்கு இதுபோன்ற நிகழ்வுகள் மிகுந்த நேர்மறையான கருத்துக்களுடன் நடத்தப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக, PIMA பொது மற்றும் தனியார் நிறுவகங்களில் செல்வாக்கு மிக்க பதவிகளை வகிக்கும் உறுப்பினர்களின் இருப்பைப் பயன்படுத்தி, அவ்வப்போது நடத்தப்படும் ஒன்றுகூடல்கள் மற்றும் இலக்கு குழு நிகழ்வுகள் மூலம் அவர்களின் வணிகம் தொடர்பான தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவுகிறது. அதே போன்று நிறுவகத்தின் தூரநோக்கு மற்றும் பணிநோக்கு என்பவற்றிற்கு செல்கையில் PIMA நிறுவகமும் முகாமைத்துவக் கல்விக்கான முறையான அணுகல் இல்லாத அடையாளம் காணப்பட்ட குழுக்களுக்கு பல்வேறு முகாமைத்துவ மேம்பாட்டுத் திட்டங்களை நடத்துகிறது, இதில் முன்னாள் மாணவர்கள் வளவாளர்களாக செயல்படுகின்றனர். PIMA நிறுவகத்திடமிருந்து நிறுவகம் பெறும் பரஸ்பர நன்மைகளில், வணிகத் தலைவர்கள், பொது நிர்வாகிகள் மற்றும் தொழில்முனைவோருக்கு தரமான கல்வியை வழங்குபவராக நற்பெயரை மேம்படுத்துவதை முன்னிலைப்படுத்தலாம், ஏனெனில் அவர்களில் பெரும்பாலோர் முன்னாள் மாணவர் உறுப்பினர்களாக உள்ளனர்.

முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகத்தின் விரிவான பங்குடமை வலையமைப்பு, இலங்கையின் கல்வி மற்றும் சமூக-பொருளாதார அபிவிருத்திக்காக அதன் முக்கியமான பங்கை எடுத்துக்காட்டுகின்றது. பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை ஊக்குவிப்பதன் மூலம், முகாமைத்துவ கல்வி, தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் சமூகத்தின் முன்னேற்றம் ஆகியவற்றுக்கு முகாமைத்துவ முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகம் தொடர்ந்து ஆதரவளிக்கின்றது. இந்த பங்குடமைகளின் அறிவு, புத்தாக்கம் மற்றும் நடைமுறை தீர்வுகள் வளர்ச்சியடையக் கூடிய ஒரு ஆற்றல்மிக்க சூழலை உருவாக்க உதவுகின்றன. இதன் மூலம் முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகம் நாட்டின் அபிவிருத்திக்கும் வெற்றிக்கும் ஒரு முக்கிய பங்களிப்பாளராகத் திகழ்வது உறுதி செய்யப்படுகிறது.

# பெறுமதி ஊக்கி 4 - எதிர்கால திறன் மேம்பாடு மற்றும் தலைமைத்துவ அபிவிருத்தி

பண்பாடு மற்றும் திறனுடனான சிந்தனைத் தலைவர்களை உருவாக்குவதில் முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகம் முன்னணியில் உள்ளது. கடந்த தசாப்தத்தில் பிரதானமாக வளர்க்கப்பட்டு உருவாக்கப்பட்ட நிறுவகத்தின் திறன் மேம்பாட்டு முயற்சிகள் உயர்ந்த அளவில் மதிப்பாய்வு செய்யப்பட்டதும் உள்ளடக்கம் மற்றும் நடத்தையில் ஒப்பிட முடியாததவையுமாகும். அவை தற்போதைய தொழில்துறை தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் குறிப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளன. அவை தனியார்/பொது சமூகத்தை அடைவதில் விரும்பிய முக்கிய இணைப்பை வழங்குகின்றன. இவை பட்டப்பின் முகாமைத்துவ நிறுவகத்தின் சிறப்பான அறிவியல் கட்டமைப்பின் முக்கியமான தூண்களில் ஒன்றான எதிர்கால திறன் மேம்பாடு மற்றும் தலைமைத்துவ அபிவிருத்தி ஆகியவற்றை வலுப்படுத்துகின்றன. திறன் கட்டமைப்பின் நோக்கமானது நிறுவக படிநிலையில் வெவ்வேறு மட்டங்களில் செயல்படும் பல்வேறு துறைகளின் நிர்வாகிகளுக்கு பொருத்தமான பயிற்சி மற்றும் அபிவிருத்தியை வழங்குவதன் மூலம் நிறுவக முகாமைத்துவ பிரயோகங்கள் முறைமைகள் மற்றும் நடைமுறைகளை மேம்படுத்த உதவுவதாகும். இது பௌதீக மற்றும் மெய்நிகர் முறைகளில் வழங்கப்படுகிறது.

முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகததின் திறன் மேம்பாட்டின் நோக்கமானது நிறுவகப் படிநிலையில் வெவ்வேறு நிலைகளில் செயல்படும் பல்வேறு துறைகளின் நிர்வாகிகளுக்கு பொருத்தமான பயிற்சி மற்றும் மேம்பாட்டை வழங்குவதன் மூலம் நிறுவக முகாமைத்துவ அமைப்புகள் மற்றும் நடைமுறைகளை மேம்படுத்த உதவுவதாகும். பங்கேற்பாளர்கள் பல்வேறு முகாமைத்துவ பிரிவுகளில் உள்ள சமீபத்திய கருவிகள், நுட்பங்கள் மற்றும் திறன்களைக் கொண்டுள்ளனர். எங்கள் வியாபார மாதிரிகள் மற்றும் வழிகாட்டுதல் ஆகியவை வெற்றிகரமான வணிக முடிவுகளை சாத்தியமாக்குகின்றன.

கற்றல்-இலக்கை நோக்கிய அணுகுமுறையில் முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகம் பொறுப்புணர்வு மிக்க முடிவுகளை உருவாக்குகிறது. பங்காண்மை மற்றும் அபிவிருத்தி நிறுவகங்களுக்காக முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகத்தினால் நிறுவப்பட்ட நடைமுறை திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துவதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் அதிகரித்து வரும் தேவை உள்ளது. பயிற்சி தொடர்பான வெற்றி என்பது நிறுவகங்களுக்கு தனித்தன்மையான பெறுமானத்தை உருவாக்கும் முதலீடுகளாக நேர்மறையான முடிவுகளை உருவாக்குகிறது என்பதை இது காட்டுகிறது. திறன் மேம்பாட்டில் தொடர்ச்சியான கற்றல் ஈடுபாட்டு தளம், பங்கேற்பாளர்களை நிறுவகம் சார்ந்த சவால்கள், அறிவு மற்றும் பல்வேறு பணி இலக்குகள் ∴செயற் திட்டங்களுக்கு வெளிப்படுத்துவதன் மூலம் கற்றல் செயல்திறனுடனான நேர்மறையான உறவை பிரதிபலிக்கிறது. கற்றல் மற்றும் மேம்பாடு ஆகியவை நிச்சயமாக, புறநிலை மையமாகவும், முடிவு சார்ந்ததாகவும் இருக்க வேண்டும். எனவே, நிறுவகங்கள் பணியாளர்களுக்கு வழங்கப்படும் திறன் கட்டமைப்புத் திட்டங்களை பொறுப்புக்கூறச் செய்வதற்கு திறன்களைப் பெறுதல் மற்றும் பிரயோகிப்பதில் பங்கேற்பாளர்களுக்கு ஒரு கற்றல் பாதை அமைப்பை கிடைக்கப் பெறுவதை உறுதி செய்ய வேண்டும். இதன் விளைவாக, புதிய முயற்சிகள் மற்றும் செயல்பாட்டில் உள்ள திறன் மேம்பாட்டுத் திடுடுங்கள் முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகத்தின் (ஜஆ) முன்னேற்றத்தை நிரூபிக்கின்றன. அதன் அனுபவமிக்க கற்றல் முறைகள் மற்றும் வலுவான முகாமைத்துவ அறிவு மூலம், முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகம் அதன் கற்றல்-இலக்கு-சார்ந்த அணுகுமுறையின் கீழ் பொறுப்பான முடிவுகளைத் தொடுர்ந்து வழங்கி

வருகின்றது.

**கற்றல் படிவம்**

பணியிடத்திற்கும் வேலைக்குமான தொடர்புடையது மட்டுமல்லாமல், பங்கேற்பாளர்களின் குறிப்பிட்ட அறிவு மற்றும் அனுபவ மட்டங்களுக்குப் பொருத்தமான கற்றல் உள்ளடக்கத்தை வழங்குதல். நடைமுறையைப் பொறுத்தவரை, முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகத்தின் கலப்பு கற்றலானது பதிலை வழங்குகிறது. நிறுவகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிகழ்ச்சி வெளியீடு என்புத கூறுதல், காட்டுதல், கேட்டல் மற்றும் செய்தல் ஆகியவற்றின் சிறந்த கலவையாகும். இந்த முறை பயிற்சி முழுவதும் பங்கேற்பாளர்களின் கவனம், ஆர்வம் மற்றும் ஊக்கத்தை பராமரிக்க தேவையான பன்முகத்தன்மையை சேர்க்கிறது. இதனுடன், நிகழ்வு ஆய்வுகள் (Case studies) பயன்பாடு பங்கேற்பாளர்களுக்கு மதிப்புமிக்க அனுபவப்பூர்வமான கற்றலை வழங்குகின்றது.

**முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் அறிவு அணுகுமுறை**

முகாமைத்துவம், தலைமைத்துவம், மூலோபாயங்கள், தொழில்முனைவு, சந்தைப்படுத்தல், வாடிக்கையாளர் உறவு முகாமைத்துவம் , தீர்மானமெடுத்தல், நிதி, தகவல் அமைப்புகள், விநியோகச் சங்கிலி முகாமைத்துவம் மற்றும் ஏனைய பாடங்களின் முழு உள்ளடக்கம் ஆகியவற்றின் செல்வாக்கு மிக்க தலைவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளும் அதே நேரத்தில் எங்கள் அனுபவம் வாய்ந்த மற்றும் தொழில் சார்ந்த ஆசிரியர்களுடன் ஒரு சவாலான, ஆனால் அச்சுறுத்தல் இல்லாத சூழலில் அர்த்தமுள்ள, திறமையாக வழங்கப்பட்ட கலந்துரையாடல்களில் ஈடுபடுதல். மேலும், நீங்கள் அதிநவீன ஆராய்ச்சி மற்றும் முதல் தர ஆசிரியர்களின் பன்முகத்தன்மை கொண்ட ஒரு முன்னணி ஆராய்ச்சி பல்கலைக்கழகத்தின் சக்தியைப் பயன்படுத்துகிறீர்கள்.

**முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகத்தின் வாடிக்கையாளர்கள்**

கடந்த 10 ஆண் முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகம் அந்தந்த சிறப்புத் துறைகளில் முன்னணி பதவிகளை வகிக்கும் வலுவான முகவர்களுடன் சிறப்பு தொடர்புகளை உருவாக்கியுள்ளது. அவற்றில் பின்வருவன அடங்கும்:

- இலங்கை வங்கி
- ஹட்டன் நெஷனல் வங்கி
- டொயிஸ் வங்கிவங்கி
- பீபல்ஸ் லீசிங் என்ட் பினான்ஸ் பீ.எல்.சீ
- சீ.டி.பீ. (சிடிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் லிமிடெட்
- ஹேமாஸ் ஹோல்டிங்ஸ
- இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம
- சிபெற்கோ (இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
- ஹேலீஸ் பீ.எல்.சீ
- ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பீ.எல்.சீ
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
- மிலேனியம் ஐ.ரி
- ஸ்லாஸ்கொம் (மென்பொருள் மற்றும் சேவை நிறுவகங்களின் சங்கம்)
- இலங்கை போக்குவரத்து ஆணைக்குழு

- உயர் கல்வி அமைச்சு
- பொதுச் சேவை ஆணைக்குழு
- சுகாதார அமைச்சு
- இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை
- கிராமிய அபிவிருத்தி அதிகார சபை
- பட்டப்பின் மருத்துவ நிறுவகம
- யூனியன் அசூரன்ஸ் பீ.எல்.சீ
- சென்ட்றல் பினான்ஸ் கம்பனி
- இலங்கை பொதுச் சேவை ஆணைக்குழு
- ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிடெட்
- ஹோல்சிம் (லங்கா) லிமிடெட்
- தேசிய சேமிப்பு வங்கி
- கார்கில்ஸ் (சிலோன்) லிமிடெட்
- ஜெட்விங் ட்றவல்ஸ்
- ஸ்ரீலங்கா டெலிகொம் ப்றைவட் லிமிடெட்
- அமேசன் டிரேடிங் (பிரைவேட்) நிறுவகம்.

இலங்கை முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகத்தின் திறன் மெம்பாட்டுத் திட்டங்கள், பல்வேறு செயல்பாட்டுத் துறைகளில் உள்ள சமீபத்திய கருத்துக்கள், யோசனைகள், கருவிகள் மற்றும் நுட்பங்கள் குறித்து புதுப்பித்த நிலையில் மற்றும் ஊக்கத்துடன் இருப்பதற்கு பின்வரும் வகையில், இலங்கையின் சேவை மற்றும் உற்பத்தி துறைகள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல், நகர அபிவிருத்தி, வங்கி, நிதித் துறைகள், உயர் கல்வி மற்றும் அரசுத் துறைகள் மற்றும் முகாமைத்துவ பட்டப் பின் கற்கை நிறுவகத்தின் நிறைவேற்று அலுவலர்களுக்காக கருதப்படுகிறது.

- சந்தைப்படுத்துதல்
- வாடிக்கையாளர் உறவு முகாமைத்துவம்
- பொது முகாமைத்துவம்
- நிதியியல் மற்றும் செலவீடு
- மனித வளங்கள்
- குழு இயக்கவியல்
- படைப்பாற்றல் - புத்தாக்கம் மற்றும் மாற்றங்களின் முகாமைத்துவம்
- உற்பத்தி திறன்
- பேச்சுவார்த்தை
- தகவல் தொடர்பு
- செயற்பாட்டு முகாமைத்துவம்
- மூலோபாய முகாமைத்துவம்
- நிறுவக திட்டமிடல்
- தனிப்பட்ட சிறப்பை அடைதல்
- சிறந்த முகாமைத்துவ பயிற்சிகள் மற்றும்
- தலைமைத்துவம்

## நிறுவகங்களின் சிரேஷ்ட முகாமைத்துவம் ஊழியர்களுக்கான Glo-Bus Simulation திட்டத்தின் மூலம் மூலோபாயமுகாமைத்துவம் தொடர்பான உயர் கற்கைநெறி (ACSM).

மூலோபாய முகாமைத்துவத்தில் உயர் கற்கை (ACSM) என்பது EDP களின் மேம்பட்ட பதிப்பாகும். தொடர்ச்சியான திறன் மேம்பாட்டு முயற்சிகள் மூலம் மிகவும் முக்கியமான வணிக சமூகத்திற்கு சேவை செய்யும் அதே வேளையில், முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகமானது 2018 இல் நிர்வாகக் கல்வியின் மேம்பட்ட பதிப்பை அறிமுகப்படுத்த வழிவகுத்தது. சிரேஷ்ட முகாமையாளர்களுக்கான Glo-Bus Simulation மூலம் ACSM மும்முனை text-case-simulation பாட மாதிரியை வழங்குகிறது, இது முகாமையாளர்களுக்கு மூலோபாய முகாமைத்துவத்தின் அடிப்படைக் கருத்துகளைப் பயன்படுத்துவது குறித்து கணிசமாக அதிக கற்றலை வழங்குகிறது. ஒரு நிறுவகத்தில் மூலோபாயங்களை நிறைவேற்றுவதிலும், செயல்படுத்துவதிலும் பங்கேற்பாளர்கள் பல்வேறு சவால்களை எதிர்கொள்வார்கள். சுருக்கமாக, இது கிட்டத்தட்ட சரியான மெய்நிகர் அமைப்பில் மூலோபாயத்தை நிறைவேற்றுவதும் செயல்படுத்துவதும் ஆகும்.

இந்தப் பாடத்திட்டத்தின் ஒரு முக்கிய அம்சமானது பங்கேற்பாளர்கள் டிஜிட்டல் கேமரா துறையில் பங்கேற்பதன் மூலம் ஒரு நிறுவகத்தை நடத்துவது போன்ற ஒரு உருவகப்படுத்துதலாகும். முகாமையாளர்கள் ஆண்டுதோறும் 8 -10% வளர்ச்சியுடன் ஒரு துறையில் நிறுவகத்தை நடத்த வேண்டும். நிறுவகத்தின் ஒரு பங்குக்கான வருமானம் (EPS) மற்றும் பங்கு விலையை ஆண்டுதோறும் குறைந்தது 8% அதிகரிக்கும் பணி அவர்களுக்கு இருக்கும்: ஆண்டுதோறும் 15% அல்லது அதற்கு மேற்பட்ட பங்கு முதலீட்டின் மீதான வருமானத்தை (ROE) பராமரித்தல் மேலும், B+ அல்லது அதற்கு மேற்பட்ட கடன் மதிப்பீட்டைப் பராமரித்தல் மற்றும் 70 அல்லது அதற்கு மேற்பட்ட ”பட மதிப்பீட்டை” அடைதல்.

இந்த நிகழ்சித் திட்டத்தின் முக்கிய அம்சங்கள் (அ) பாடநெறிக்காலம் 3-4 மாதங்களுக்கு வரையறுக்கப்பட்டிருத்தல் (ஆ) 14 ஆண்டுகள் வரை நீட்டிக்கப்பட்ட முடிவுச் சுற்றுகள் (இ) முகாமைத்துவ பட்டப்பின கற்கை நிறுவகத்தில் 5-7 முழு நாட்கள் பயிற்சிப் பட்டறைகள் (ஈ) நிகழ்வுகளைப் பகுப்பாய்வு செய்வதில் முகாமையாளர்களின் அதிக ஈடுபாட்டுடன் மேலதிக நிகழ் நிலை விநியோகம், பிரஜ்னா (மூடில்) தளம் மூலம் நிகழ் நிலை வினாடி வினாக்கள் (இ)நிகழ் நிலையில் 3 வார முன் தயாரிப்பு. இந்த திட்டம் வழக்கமான விரிவுரைகள், வகுப்பு விவாதம் (30மூ) நிகழ்வுகள் தொடர்பானவை (10மூ) மற்றும் 12-14 வாரங்களில் பரவிய உருவகப்படுத்துதல் (60மூ) மூலம் நடத்தப்படுகின்றது.. நிறுவக இணை முகாமையாளர்கள் தங்கள் தயாரிப்புகளுக்கு அவர்கள் குறிப்பிடும் வடிவமைப்புகள் மற்றும் கூறுகள், பணியாளர் இழப்பீடு மற்றும் பயிற்சி, வழங்கப்படும் உத்தரவாதங்களின் காலம், நிறுவகத்தின் தயாரிப்புகளை வாங்குபவர்களுக்கு வழங்கப்படும் தொழில்நுட்ப ஆதரவிற்காக செலவிடப்பட்ட தொகை மற்றும் அவர்களுடைய ஒன்றுபடுத்தல் செயல்முறை முகாமைத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் உற்பத்தி செலவுகள் மீது கட்டுப்பாடுகளை விதிக்கின்றனர். நிறுவக இணை முகாமையாளர்கள் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு கூறுகள் மற்றும் தயாரிப்பு செயல்திறன் (10 முடிவுகள்) முதல் உற்பத்தி செயல்பாடுகள் வரை மற்றும் தொழிலாளர் இழப்பீடு (15 முடிவுகள்) முதல் விலை நிர்ணயம் வரை மற்றும் சந்தைப்படுத்தல் (15 முடிவுகள்) முதல் நிறுவக செயல்பாடுகளுக்கு நிதியளித்தல் (4 முடிவுகள்) வரை 44 வகையான முடிவுகளை எடுக்கிறார்கள்.

இந்த புதிய முயற்சி முக்கிய நோக்கங்களை எய்து கொள்வதற்கு வழி வகுக்கின்றது.

அ) பல்வேறு தொழில்கள் மற்றும் போட்டிச் சூழ்நிலைகளில் மூலோபாய பகுப்பாய்வு செய்யத் தேவையான அறிவு மற்றும் திறன்களை விருத்தி செய்தல், குறிப்பாக, உலகளாவிய சந்தை சூழலில் உள்ள போட்டி சவால்கள் பற்றிய வலுவான புரிதலை வழங்குதல்.

ஆ) வணிக உத்திகளை உருவாக்குதல், மூலோபாய மாற்றுவிருப்பங்களை கவனமாக விவாதித்தல், செயற்பாட்டு விருப்பங்களை மதிப்பிடுவதற்கு ''ராயவ-கை'' பகுப்பாய்வைப் பயன்படுத்துதல் மற்றும் சிறந்த மூலோபாய முடிவுகளை எடுப்பது பற்றிய நடைமுறை அனுபவத்தைப் பெறுதல்.

இ) ஒரு நிறுவகம், அதன் தற்போதைய வணிக நிலை, அதன் நீண்டகால திசை, அதன் வளங்கள் மற்றும் போட்டி திறன்கள், அதன் மூலோபாயத்தின் தரம் மற்றும் நிலையான போட்டி நன்மைகளைப் பெறுவதற்கான வாய்ப்புகள் குறித்து மூலோபாய ரீதியாக சிந்திக்க முகாமையாளர்களின் திறனை மேம்படுத்துதல்.

ஈ) நிறுவக உத்திகளை செயல்படுத்துதல் மற்றும் நிறைவேற்றுதல் தொடர்பான முகாமைத்துவ இலக்குகள் குறித்து அறிவுறுத்துதல், திறமையான மூலோபாய செயலாக்கத்தை ஊக்குவிப்பதற்கு முகாமையாளர்கள் எடுக்கக்கூடிய நடுவடிக்கைகள் குறித்த வரம்பில் ஒரு பங்கேற்பாளரை பயிற்றுவித்தல் மற்றும் நிறுவகத்தின் மூலோபாய செயலாக்கக் குழுவின் ஒரு பகுதியாக திறம்பட செயல்பட முடியும் என்ற நம்பிக்கையை பங்கேற்பாளருக்கு வழங்குதல்.

# இயக்குவிக்கும் காரணி 01 : உலகத் தரம்

ஒரு நிறுவனம், தரம் என்பதை அதன் உள்ளக கட்டமைப்பில் ஆழமாக பதித்து, நிர்வாகப் படிநிலையின் மேல் இருந்து கீழ் வரை தான் மேற்கொள்ளும் அனைத்து செயற்பாடுகளிலும் பிரதிபலிக்கும்போது உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரமான கலாச்சாரத்தைக் கொண்டுள்ள நிறுவனமாகக் கருதப்படும். 1986 இல் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் கீழ் ஒரு சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட இலங்கை முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் (ஜஆ) தனது 2024-2026 மூலோபாயத் திட்டத்தில் ''தெற்காசியாவில் முகாமைத்துவ மூன்றாம் நிலைக் கல்விக்கான சிறப்பு நிலையமாக மாறுதல்'' என்ற இலக்கை அடைய ''தரம்'' என்பதை ஒரு இயக்குவிக்கும் காரணியாக உள்ளடக்கியுள்ளது.

**கடந்த காலம்**

1986-இல் உருவாக்கப்பட்ட இலங்கை முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம், கிட்டத்தட்ட ஒரு ஏகபோக நிலையை அனுபவித்தது. இதன் காரணமாக, ஒழுக்கம், வருகை, நேரந்தவறாமை ஆகியவற்றில் மட்டுமல்லாமல், 2000 ஆம் ஆண்டுகளின் முற்பகுதி வரை அறிவைப் புகட்டுவதிலும் கல்வியிலும் ஒரு இறுக்கமான போக்குக் காணப்பட்டது. பொருளாதாரம் தாராளமயமாக்கப்பட்டதாலும், பல போட்டியாளர்கள் இந்தத் துறைக்குள் நுழைந்த போதிலும், தரத்தில் எந்த சமரசமும் செய்துகொள்ளாமல், மாறிவரும் உலகத்துடன் தங்களை மாற்றியமைத்துக்கொள்ளும் சுறுசுறுப்பான உத்தியை முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் பின்பற்றியது. உதாரணமாக, புதிய கற்கைநெறிகளை (புதிய பாடப்பிரிவுகளை) அறிமுகப்படுத்தியமை, புதிய திட்டங்களைத் தொடங்கியமை, அறிவுசார் பங்களிப்பை மேம்படுத்துவதற்காக 1996-இல் இலங்கை முகாமைத்துவ சஞ்சிகையை(SLJM) கல்விசார் இதழாக அறிமுகப்படுத்தியமை, 2004-இல் ஏற்பட்ட சுனாமி பேரழிவின்போது ஒரு சமூகப் பொறுப்பாக இலங்கையின் மீனவ மக்களுக்குத் தலைமைப்பங்கை வகித்து பங்களித்தமை ஆகியவை சில எடுத்துக்காட்டுகளாகும். முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு

நிறுவனம் தனது முதன்மைத் தயாரிப்பான வணிக நிர்வாகத்தில் முதுநிலை (MBA), பொது நிர்வாகத்தில் முதுநிலை (MPA) மற்றும் கலாநிதி (Ph.D.) கற்கைநெறி ஆகியவற்றின் மூலம் பல உயர் மட்டப் பதவிகளுக்கு பல முன்னாள் மாணவர்களைத் தொடர்ந்து உருவாக்கி வருகின்றது. 2015இல், முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் தனது தரத்தை மேலும் மேம்படுத்துவதற்கும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் மற்றும் வியாபாரப் பாடசாலை களுக ்கு இணையாக இருப்பதற்கும், கல்லூரி வியாபாரப் பாடசாலை சங்கத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக சவாலான செயல்முறையைத் தொடங்கியது.

இந்தக் காலகட்டத்தில், முகாமைத்துவ பட்டப் பின்ப டிப்பு நிறுவனம் பல கல்வித் திட்டங்களான வரிவிதிப்பு வணிக நிர்வாகத்தில் முதுநிலை (MBA), சுங்கம் மற்றும் சர்வதேச வர்த்தகத்தில் வணிக நிர்வாகத்தில் முதுநிலை (MBA), 2016-இல் நிறைவேற்று வணிக நிர்வாகத்தில் முதுநிலை (EMBA) மற்றும் 2022-இல் வணிக நிர்வாகத்தில் கலாநிதி (DBA) ஆகியவற்றை அறிமுகப்படுத்தியது. இலங்கையின் போட்டி மிகுந்த மற்றும் கட்டுப்பாடற்ற மூன்றாம் நிலைக் கல்விச் சந்தையில் உள்ள ”இடைவெளிகளை” கண்டறிந்த பின்னர் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தியது. AACSB அங்கீகாரத்தை அடைவதற்காக, முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் ஐந்து தூண்களான கற்பித்தல், ஆராய்ச்சி, கூட்டாண்மை, நிலைபெறுதன்மை மற்றும் முன்மாதிரியான ஆளுகை ஆகியவற்றில் கவனம் செலுத்தி ஒரு ”குறிக்கோளால் இயக்கப்படும்” நிறுவனமாக மாற்றப்பட்டது. மதிப்பீடுகளின் அனைத்து வடிவங்களுக்கும் நன்கு வரையறுக்கப்பட்ட மதிப்பீட்டு வழிகாட்டிகள் (rubrics), விரிவான பாடத்திட்டக் கட்டமைப்பு, பரீட்சை வினாத்தாள் மதிப்பாய்வு மற்றும் இரண்டாம் மதிப்பீட்டு செயல்முறையை நெறிப்படுத்துதல், ஆசிரியர்களுக்கான எதிர்பார்ப்புத் தரநிலைகள் (SOEs), எழுத்துப்பூர்வ ஒப்படைப்புகளுக்கான முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவன வழிகாட்டுதல்கள் (7-வது பதிப்பு), கட்டுரைத் திருடுவதைத் தடுக்கும் கொள்கை, சூழ்நிலைகளைத் தணிக்கும் கொள்கை, மற்றும் இணையதளத்தின் விரிவாக்கத்துடன் எழுத்துப்பூர்வ ஒப்படைப்புகளுக்கு மென்பிரதிகளை அறிமுகப்படுத்தியது போன்றவை ஏனைய அறிமுகங்களாகும்.

முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் தனது வணிக நிர்வாகத்தில் முதுநிலை (MBA) படிப்பை ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பஹ்ரைன், கத்தார், ஓமன், குவைத் மற்றும் பங்களாதேஷ் போன்ற மத்திய கிழக்கு நாடுகளிலும் விரிவுபடுத்தியது. முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவளனம் இந்த நாடுகளில் விரிவுரைகளை நடாத்தி, வெளிநாடுகளில் உள்ள மாணவர்களுக்கு கொழும்பில் உள்ளதைப் போன்ற கற்றல் அனுபவத்தை உறுதி செய்தது இது முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் பொருளாதார நிலைபெறுதன்மையை வலுப்படுத்தவும் உதவியது. கூடுதலாக, கற்பித்தல், கற்றல் மற்றும் மதிப்பீட்டுக் கொள்கை, பாலின சமத்துவம் மற்றும் சமத்துவக் கொள்கை, பாடத்திட்ட மேம்பாடு மற்றும் மறுஆய்வுக் கொள்கை போன்ற இருபத்தி ஒன்பது கொள்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இவை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) அங்கீகார செயல்முறை மற்றும் இலங்கை தகுதி கட்டமைப்பு (SLQF) தரநிலைகளைப் பூர்த்தி செய்வதற்காக 2021-இல் நிறுவப்பட்ட தர உத்தரவாத நிலையம்(CQA) மூலம் மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவாக, முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் AACSB தரநிலைகள் இரண்டையும் பின்பற்றியது.

**தற்காலம்**

தற்போது, முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் ஆனது SLQF தரநிலைகளின்படி நிலை 8 முதல் நிலை 12 வரையிலான அனைத்து பட்டப் பின்படிப்பு திட்டங்களையும் வழங்குகிறது. குறிப்பாக கொவிட் பெருந்தொற்றுக்குப் பின்னர் கல்வித் துறையில்

ஏற்படும் விரைவான மாற்றங்களைச் சரியாகக் கண்டறிந்து, முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் தனது புதிய பணிப்பாளர் கலாநிதி திரு அசங்க ரணசிங்க அவர்களின் தலைமையில் புதுமையான கற்றல், நுண்நோக்குமிக்க ஆராய்ச்சி, வளமான கூட்டாண்மை மற்றும் எதிர்கால மேம்பாடு ஆகிய நான்கு தூண்களைக் கொண்டுள்ளது. 2024-2026 காலத்திற்கான ஒரு புதிய மூலோபாயத் திட்டத்தைத் தொடங்கியது. இத்திட்டம், உறுதிசெய்யப்பட்ட தரம், முன்மாதிரியான ஆளுகை மற்றும் நிலைபெறுதன்மையை தூண்டுவித்தல் ஆகியவற்றால் இயக்கப்படுகிறது. முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் இன் புதிய மையக்கருத்து “புதிய உலகிற்கான வியாபாரப் பாடசாலை கல்லூரி” (The Business School of the Nation) என மாற்றப்பட்டுள்ளது. ஏற்கனவே நிறுவப்பட்ட தரத்தின் வேகத்தைத் தொடரும் அதே வேளையில், முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் தற்போது ஒரு சர்வதேச தர உத்தரவாதத் நிகழ்ச்சித்திட்டமான தெற்காசிய தரநிலைகள் (SAQS)-ஐ பின்பற்றி வருகிறது.

முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம், கல்வித் திட்டங்களுக்காக கல்விக் குழுவின் (Board of Study) வழிகாட்டுதலையும், நிர்வாகத்திற்காக முகாமைத்துவ சபையின் (Board of Management) வழிகாட்டுதலையும் பெறுகிறது. இந்த சபைகளின் புகழ்பெற்ற உறுப்பினர்களாக முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனபழைய மாணவர்கள், அரச பிரதிநிதிகள், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர்கள், மற்றும் முன்னணி பெருநிறுவனங்களில் உயர் பதவிகளை வகிக்கும் பெருநிறுவனத் தலைவர்கள் போன்றோர் அங்கம் வகிக்கின்றனர். இது இந்த முதன்மை நிறுவனத்திற்கு ஒரு முழுமையான அணுகுமுறையை உறுதி செய்கிறது. அனைத்து மூலோபாய மற்றும் கட்டமைப்பு மாற்றங்களும் இந்த சபைகளால் அங்கீகரிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும். ஏறத்தாழ மூன்று தசாப்தங்களாக ஒரு சுயநிதியளிக்கப்படும் நிறுவனமாக இருப்பதால், முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் பொருளாதார நிலைபெறுதன்மையை உறுதி செய்வதிலும் கவனம் செலுத்துகிறது. தனியார் மற்றும் பொதுத் துறைகளுக்கான நிறைவேற்று மேம்பாட்டுத் திட்டங்கள் (EDP) மற்றும் முகாமைத்துவ மேம்பாட்டுத் திட்டங்கள் (MDP) ஆகியவை ஆசிரியர்களின் தனித்துவமான திறன்கள் காரணமாக ஒரு வருமான ஆதாரங்களாக விருத்தியடைந்து வருகின்றன. இந்த திட்டங்கள் பீடத்தின் தனித்துவமான நிபுணத்துவத்திலிருந்து பயனடைகின்றன நுனீ∴ஆனீ உடனான முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் உறவு ஒன்றையொன்று ஒருங்கிணக்கமானது என்பதனால், நிறுவனத்தின் நிதி ஸ்திரத்தன்மைக்கு மேலும் பங்களிக்கின்றது

**எதிர்காலம்**

எதிர்காலத்தில் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் இலட்சியங்கள் என்ன? ”புதிய உலகிற்கான வியாபாரப் பாடசாலை யாக’’ முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தை தொடர்ந்து நிலைநிறுத்தும் அதே வேளையில், சமீபத்தில் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் நடத்திய சந்தை ஆய்வுவின்படி, மாணவர்களின் தேவைகள் வேகமாக மாறி வருகின்றன, உலகம் வளர்ச்சியடைந்து வருகிறது, மற்றும் கட்டுப்பாடற்ற சந்தையில் போட்டி கடுமையாகவும் மூர்க்கமாகவும் மாறி வருகிறது என்பது தெரியவந்துள்ளது. இதன் விளைவாக, அனைத்து பங்குதாரர்களும் அழைக்கப்பட்டு, முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் முன்னோக்கிய பயணத்தை உறுதி செய்வதற்காகவும், அதை ”புதிய உலகிற்கான வியாபாரப் பாடசாலை” ஆக மாற்றும் நோக்கத்துடனும் ஒரு ”கருத்துருவாக்க” அமர்வு வதிவிடத் திட்டமாக நடத்தப்பட்டது. “ஏனையவற்றை விட உயரந்து நில்’’ என்ற கழுகின் குறிக்கோளிலிருந்து உத்வேகம் பெற்று, நிலவரங்களைக் கூர்ந்து கவனித்து, முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் மிகுந்த நம்பிக்கையுடன் மாற்றத்தைத் தழுவி ஒரு புதிய திசையில் பயணிக்கின்றது.

இந்த முயற்சியில், முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் இலங்கையில் முதன்முதலாக தெற்காசிய தரநிலைகள் (SAQS) அங்கீகாரத்தைப் பெற்று, அதன் திட்டங்களுக்கு உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. பாரம்பரிய பாடங்களிலிருந்து விலகி, மாறிவரும் உலகத்துடன் இசைந்து போகும் வகையில் செயற்கை நுண்ணறிவு (AI) டிஜிட்டல் மாற்றம், புவிசார் அரசியல், பெருநிறுவன நிலைபெறுதன்மை போன்ற புதிய பாடப்பிரிவுகளை அறிமுகப்படுத்த முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் விரும்புகிறது. முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் புதிய பிரிவு, உயர் பெருநிறுவனங்கள் பங்கேற்கும் நிறைவேற்று மேம்பாட்டுத் திட்டங்கள் (EDP) மற்றும் நிறைவேற்று வணிக நிர்வாகத்தில் முதுநிலை (EMBA) திட்டங்களுக்கு இடமளிக்கும் வகையில், 360 பாகை அதிநவீன உள்கட்டமைப்பு வசதிகளுடன் மாற்றியமைக்கப்பட்டு வருகிறது. இது முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தை ஹார்வர்ட் அல்லது எம்ஐடி பாணியிலான வசதிகள் மற்றும் தரமான திட்டங்கள் மற்றும் சமூகத்தின் பல்வேறுபட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யும் குறுகிய காலப் படிப்புகளுக்கு இணையாகக் கொண்டு செல்லும். முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களுடன் புதிய கூட்டாண்மைகளை ஏற்படுத்தி, அவர்களின் பட்டப் பின்படிப்பு திட்டங்களை இலங்கையில் வழங்கவும் முயன்று வருகிறது. இது கற்றல் பங்காளர்களுக்கு பரந்த தெரிவுகளை வழங்கும். இலங்கை முகாமைத்துவ சஞ்சிகை (SLJM), ஸ்கோபஸ் (Scopus) இன் கீழ் ஒரு “தரவரிசைப்படுத்தப்பட்ட” இதழாக மேம்படுத்தப்படும், அதற்கான செயல்முறைகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன. முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம், பயன்பாட்டு ஆராய்ச்சி, ஆய்வுகள் மற்றும் நிகழ்வு ஆய்வுகளுக்காக தொழில்துறையுடன் ஈடுபடவும் விரும்புகிறது.

இந்த முயற்சிகளின் மூலம், முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் கல்வித் துறையில் மட்டுமல்லாமல் ”புதிய உலகிற்கான வியாபாரப் பாடசாலை” ஆகவும் பெரும் சாதனைகளை அடைய முனைகின்றது.

# இயக்குவிக்கும் காரணி 02: முன்மாதிரியான ஆளுகை

நான்காவது தசாப்தத்தில் இருக்கும் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம், நல்லாட்சிக்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ்கின்றது. முதுகலைக் கல்வியில் முன்னணி நிறுவனமாக, அதன் விழுமியங்களை வலுப்படுத்தும் காரணியாகவே ஆளுகையை பின்வருமாறு கருதுகின்றது:

- நம்பிக்கை
  வெளிப்படைத்தன்மைக்காக தொடர்ச்சியான அர்ப்பணிப்புடன் சமூக எதிர்பார்ப்புகளைத் தொடர்ந்து பூர்த்தி செய்யும் ஆளுகை நடைமுறைகளுக்கான தெளிவாக வரையறுக்கப்பட்ட எதிர்பார்ப்புகள்.

- நோக்கம் பற்றிய பகிரப்பட்ட உணர்வு:
  குழுக்கள் ஊடாக உறவுகளை வளர்க்கும் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவன நடைமுறைகளில் எதிர்காலத்திற்காக பகிரப்பட்ட தொலைநோக்கு.

- எழுந்துள்ள பிரச்சினைகளைப் புரிந்துகொள்ளுதல்: ‘
  பரந்த அளவிலான பங்கேற்பை அனுமதிக்கும் வகையில் பல்வேறு கண்ணோட்டங்களிலிருந்து முன்வைக்கப்பட்ட கருத்துகளுக்கு உரிய கவனம் செலுத்தல்.

- தகவமைத்துக் கொள்ளும் திறன்:
  நெகிழ்வுத்தன்மைக்கான வாய்ப்புகளுடன் கூடிய தலைமைத்துவம் மற்றும் ஆளுகைக்கான மேம்பபட்ட அணுகுமுறைகள்.

- உற்பத்தித்திறன்:
  சமத்துவம் மற்றும் விளைவுகள் மூலம் ஒருங்கிணைந்த பொறுப்புடன் முடிவுகளில் கவனம் செலுத்திய ஆளுகை நடைமுறைகள்.

- நல்லாட்சியைப் பின்பற்றுவதில், முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் பின்வரும் செயல் திட்டங்களை தீவிரமாக செயல்படுத்தியுள்ளது.

- முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் பல்வேறு சமூகங்களை மீண்டும் அறிந்துகொள்ளுதல், இது தற்போதைய நிலையின் செயல்திறன் குறித்த உரையாடல்களைத் தொடங்குவதன் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

- ஆளுகைக்கான எதிர்பார்ப்புகளை தெளிவுபடுத்துவதன் மூலம் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் எதிர்காலத்திற்காக பகிரப்பட்ட நோக்குகையை விருத்தி செய்தல்

- திறந்த மனப்பான்மையுடன் தொடர்புகொள்வதன் மூலம் வெளிப்படைத்தன்மையை பின்பற்றுதல் மற்றும் நல்லாட்சியின் முக்கிய தூணாக கருதப்படும் பொறுப்புக்கூறலை கடைப்பிடித்தல்.

- பன்முகபட்ட கண்ணோட்டங்களுக்கு மதிப்பளித்தலும் தொடர்ந்து வெளிப்படைத்தன்மையை வெளிப்படுத்துதலும்

- கல்வி மேம்பாட்டில் முதலீடு செய்வதன் மூலம் மனித மூலதனத்தை உருவாக்குதல். முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் உறவு வலைப்பின்னல் மேலும் செறிவூட்டப்பட்டுள்ளது. இது ஆளுகை தொடர்பான பிரச்சினைகள் குறித்து அனைவரையும் உள்ளடக்கிய உரையாடலை எளிதாக்கியது.

- ஆளுகைக்கான நிகழ்ச்சிநிரல் திட்டமிடப்பட்டதுடன் அசாதாரணமாக முடிவெடுக்கும் சூழ்நிலைகளுக்கு நெகிழ்வான அணுகுமுறை விவாதிக்கப்பட்டது. இது ஆளுகையின் சாதனைகளை கொண்டாடவும் அதன் பெருமையைப் பகிர்ந்து கொள்ளவும் வழிவகுத்தது.

# இயக்குவிக்கும் காரணி 03: நிலைபெறுதன்மையை தூண்டுவித்தல்

**நிலைத்தன்மை**

நாட்டின் முதன்மையான முகாமைத்துவ கல்வி நிறுவனம் என்ற வகையில், முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் ஒட்டுமொத்த நாட்டிற்கான தனது அர்ப்பணிப்புகள் மற்றும் கடமைகள் குறித்து எப்போதும் அறிந்திருக்கின்றது. எனவே, முகாமைத்துவ பிரச்சினைகளுக்கான அதன் அணுகுமுறையில் எதிர்கால நோக்குடன் செயற்பட்டு வருகிறது. தனது செயற்பாடுகளை சமூகத்துடன் இணைக்கும் ஓர் ஒருங்கிணைந்த அங்கமாக பெருநிறுவன சமூகப் பொறுப்பை (corporate social responsibility) ஊக்குவிக்கும் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம், தனது மூலோபாய வணிகத் திட்டத்தில்

“நிலைத்தன்மையை தூண்டுவித்தல்” என்பதை உள்ளடக்கியதன் மூலம், நிலைத்தன்மை நோக்கிய அர்ப்பணிப்புடனான முயற்சிகளை உறுதியாக நிலைநிறுத்தியுள்ளது.

### நிலைத்தன்மைக்கான உயர் முகாமைத்துவத்தின் அர்ப்பணிப்பு

முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் செயற்பாடுகளின் ஒரு பகுதியாக, நிலைத்தன்மை முயற்சிகளுக்கான அசைக்க முடியாத மற்றும் உறுதியான அர்ப்பணிப்பு, 2024 ஆம் ஆண்டில் சுற்றுச்சூழல நிலைத்தன்மைக் குழுவொன்று (Environmental Sustainability Team) நியமிக்கப்பட்டதன் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையில் அதன் தாக்கத்தை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகளைத் திட்டமிட்டுச் செயல்படுத்துவதே இக்குழுவின் நோக்கமாகும். இக்குழுவின் தலைவராக நிறுவனத்தின் பணிப்பாளரே செயற்படுவது, நிலைத்தன்மைக்கான உயர் முகாமைத்துவத்தின் அர்ப்பணிப்பைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. இக்குழு பீடத்தின் கல்வி மற்றும் கல்விசாரா உறுப்பினர்களை உள்ளடக்கியுள்ளது. நிறுவனத்தின் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை நோக்கத்தின்கீழ் அடையாளம் காணப்பட்ட குறிப்பிட்ட மூலோபாய நடவடிக்கைகளில் நீர் மற்றும் மின்சார விரயத்தைக் குறைத்தல், காகிதப் பாவனையைக் குறைத்தல், முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவன வளாகத்திற்குள் பிளாஸ்டிக் பாவனையை முற்றாக ஒழித்தல் ஆகியவை அடங்கும்.

2022 இல் உருவாக்கப்பட்ட 5 ஆண்டு மூலோபாயத் திட்டத்தில், ”பொருளாதாரம், சமூகம் மற்றும் சூழலியல் ஆகிய துறைகளில் நிலைத்தன்மையை ஊக்குவிப்பதை உறுதிசெய்தல்” என்பதை ஒரு இலக்காகச் சேர்த்ததன் மூலம் நிலைத்தன்மை மீதான கவனம் மேலும் உறுதிப்படுத்தப்பட்டது. தற்போது நடைமுறையில் உள்ள மேம்படுத்தப்பட்ட மூலோபாயத் திட்டத்தில் இது மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளது. பணிப்பாளரால் எதிர்பார்க்கப்பட்ட “புதிய உலகிற்கு” (THE New World) ஏற்ற முகாமைத்துவச் சிறப்பு நிலையமாக முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தை மாற்றுவதற்கான பயணத்தில், பெறுமதி இயக்கிகளை (value drivers) செயற்படுத்துவதற்கான ஒரு முக்கிய காரணியாக நிலைத்தன்மை அடையாளம் காணப்பட்டுள்ளது. பெறுமதி இயக்கிகளான புதுமையான கற்றல் மற்றும் கற்பித்தல், ஆழ்ந்த மற்றும் பொருத்தமான ஆய்வுகள் மற்றும் வெளியீடுகள், செழுமைப்படுத்தும் ஒத்துழைப்புகள் மற்றும் பங்குடமைகள், எதிர்கால நோக்குடனான திறன் விருத்தி மற்றும் தலைமைத்துவ மேம்பாடு ஆகியவற்றின் மூலம் மக்களுக்கும் நிறுவனங்களுக்கும் பெறுமதியை உருவாக்குவதே இதன் நோக்கமாகும். உலகத் தரம், முன்மாதிரியான ஆளுகை, நிலைத்தன்மையை தூண்டுவித்தல் மற்றும் சிந்தனையை வழிநடத்தும் டிஜிட்டல் சிறப்பு ஆகியவை இந்தப் பெறுமதி இயக்கிகளைச் சாத்தியமாக்குகின்றன

முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் சிறப்புமிகு கட்டமைப்பில் உள்ள நிலைத்தன்மைத் தூணானது 5 மூலோபாயங்கள் மூலம் செயற்படுத்தப்படுகிறது.

*மூலோபாயம் 01 :*

வலுசக்தி சேமிப்பு, கழிவுகளைக் குறைத்தல் மற்றும் நீர் முகாமைத்துவம் அடங்கலாக பல்கலைக்கழக செயற்பாடுகள் முழுவதிலும் நிலைத்தன்மை வாய்ந்த நடைமுறைகளை உருவாக்கிச் செயற்படுத்துதல்.

முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் செயற்பாடுகளில் பெரும்பாலான நிலைத்தன்மை வாய்ந்த நடைமுறைகள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

(i) பல்கலைக்கழக செயற்பாடுகளில் 5S ஐ செயற்படுத்துதல்.






(ii) இலங்கை தர நிர்ணய நிறுவனத்திடமிருந்து ISO 9001:2018 மற்றும் ISO 9001:2015 சான்றிதழைப் பெற்றுக்கொள்ளுதல் இதன் மூலம் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் அனைத்து



செயற்பாடுகளிலும் உயர்ந்த தரநிலைகள் பராமரிக்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது.

வலுசக்தி/நீர் சேமிப்பு, கழிவுகளைக் குறைத்தல்

முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் வளங்களைப் பாதுகாப்பதற்கும் கழிவுகளைக் குறைப்பதற்கும் பல நடைமுறைகளை வெற்றிகரமாகச் செயற்படுத்தியுள்ளது.

வலுசக்தி மற்றும் நீர் குறித்த அடிப்படை கணக்காய்வுகள் திட்டமிடப்பட்டு, ஆண்டுதோறும் ஒரு சதுர மீட்டருக்கு 5% ஆன வலுசக்தி மற்றும் நீர் பயன்பாட்டைக் குறைப்பதற்கான திணைக்கள

இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.
அனைத்து செயற்பாடுகள், கூட்ட அறிக்கைகள் மற்றும் கலந்துரையாடல்களுக்கு மின்னணு தகவல்தொடர்புகளைப் பயன்படுத்துவதன் மூலம் காகித பயன்பாடு கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளது.
மாணவர்களின் அனைத்து சமர்ப்பிப்புகளும் (தனிப்பட்ட ஒப்படைப்புகள், குழு ஒப்படைப்புகள், வீட்டிலிருந்து செய்யும் தேர்வுகள்) நிகழ்நிலையில் செய்யப்படுவதால், காகிதப் பயன்பாட்டைக் குறைப்பதில் இது ஒரு பெரிய பங்களிப்பைச் செய்கிறது
ஒவ்வொரு பீட உறுப்பினருக்கும் வழங்கப்பட்டுள்ள அச்சுப்பொறிகள் அகற்றப்பட்டு, 5 இடங்களில் மையப்படுத்தப்பட்ட அச்சுப்பொறிகள் நிறுவப்படும் என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
இது காகிதம், வலுசக்தி மற்றும் அச்சு மை போன்றவற்றின் பயன்பாட்டை கணிசமாகக் குறைக்கும். ஒவ்வொரு பீட அறையிலும் தனித்தனி குளிர்சாதன அலகுகளுக்குப் பதிலாக மையப்படுத்தப்பட்ட குளிர்சாதன வசதியைப் பயன்படுத்துவது குறித்த ஆய்வு நடைபெற்று வருகிறது.

(iii) பிளாஸ்டிக் பயன்பாட்டை ஒழித்தல்
பிளாஸ்டிக் ஒழிப்புக்கான நடவடிக்கைகள் ஏற்கனவே வெற்றிகரமாக பின்பற்றப்பட்டுள்ளன. கட்டிடத்தின் ஒவ்வொரு தளத்திலும் மற்றும் சிற்றுண்டிச்சாலையிலும் உள்ள நீர் வழங்கும் இயந்திரங்களிலிருந்து (water dispensers) நீரை நிரப்பிக்கொள்ளும் வகையில் ஒவ்வொரு பதவியணியினருக்கும் மறு நிரப்பு போத்தல் வழங்கப்பட்டுள்ளது.இது மாணவர்களையும் தங்கள் சொந்த மறு நிரப்பு போத்தல்களைக் கொண்டு வந்து நீர் வழங்கும் இயந்திரங்களிலிருந்து தண்ணீரை நிரப்பத் தூண்டியுள்ளது. இது ஒருமுறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் தண்ணீர் போத்தல்களின் பயன்பாட்டைக் கணிசமாகக் குறைத்துள்ளது. முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின நுழைவாயிலில் பயன்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் பொதிகளை மறுசுழற்சியாளர்கள் சேகரிப்பதற்காக பிளாஸ்டிக் பொதி சேகரிப்பு இடங்களை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

*மூலோபாயம் 2:*
சுற்றாடல் பொறுப்புணர்வு மற்றும் சமூகப் பொறுப்பு குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக பாடத்திட்டங்களில் நிலைபெறுதன்மை குறித்த கோட்பாடுகளை ஒருங்கிணைத்தல்.

முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் தனது பாடத்திட்டத்தில் நிலைபெறுதன்மைக்கு முக்கியத்துவம் அளிக்கும் கற்கைநெறிகளைச் சேர்த்துள்ளது. உதாரணமாக, MBA 621 - மூலோபாய நிறுவன நிலைபெறுதன்மை – கற்கைநெறி மூலம் வரையறுக்கப்பட்ட இயற்கை வளங்களின் பயன்பாடு மீது அதிகமாக தாக்கங்களை ஏற்படுத்தும் முறை மற்றும் காலநிலை மாற்றங்கள் அத்துடன் தீவிர வானிலை நிகழ்வுகள், விநியோகச் சங்கிலிகள் என்பன வணிக மூலோபாயங்கள் மீது எவ்வாறு பாதிக்கின்றன என்பதை ஆராய்கின்றது. இந்த கற்கைநெறி எதிர்கால வணிகத் தலைவர்களுக்கு நிலையான வளர்ச்சியின் உலகளாவிய நிகழ்ச்சி நிரலைப் புரிந்துகொள்ளவும் பதிலளிக்கவும் உதவுகின்றது. நுகர்வோர் மற்றும் வணிகத் தேவைகள் இரண்டையும் பொறுப்புடனும் மூலோபாய ரீதியாகவும் பூர்த்தி செய்யும் புதிய நிலையான சந்தை வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் வணிகங்கள் தங்கள் நிறுவன உத்திகளில் நிலைபெறுதன்மையை எவ்வாறு ஒருங்கிணைக்க முடியும் என்பதையும் இது காட்டுகிறது

*மூலோபாயம் 3:*
சுற்றாடல் சவால்களை எதிர்கொள்வதற்கும் நிலையான அபிவிருத்தி முயற்சிகளை ஊக்குவிப்பதற்கும் பிரதேச சமூகங்கள் மற்றும் அமைப்புக்களுடன் கூட்டாண்மைகளை

உருவாக்குதல்.

*மூலோபாயம் 4:*
சுற்றாடல் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கும் நிலையான தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதற்கும் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள 3 ஆவது மற்றும் 4 ஆவது மூலோபாயங்களின் பங்களிப்பு நிலையானதும் அர்த்தமுள்ளதுமாகும். ஆண்டுதோறும் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் சமூகப் பொறுப்புத் திட்டங்கள் இரண்டுக்கு ஆதரவளிக்கிறது: கிராமப்புற ஆரம்ப பாடசாலையின் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் மற்றும் ஒரு சமூக அபிவிருத்தி திட்டம்.

இவை MBA மாணவர்களால் இறுதி ஆண்டுத் திட்டங்களாக மேற்கொள்ளப்படுகின்றன. நிலையான அபிவிருத்தி இலக்கு 3 (SDGs) – நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு - ஆகியவற்றை ஆதரிக்கும் வகையில் இரண்டு திட்டங்களும் வடிவமைக்கப்பட்டு செயற்படுத்தப்படுகின்றன.

நிலையான வளர்ச்சி இலக்கு 3 - நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு ஆகியவற்றை ஆதரிக்கும் திட்டங்களை திட்டமிட்டு செயல்படுத்துவதை .முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் தொடங்கியுள்ளது. இது நிலையான அபிவிருத்தி இலக்குகள் குறித்த தேசிய முன்னுரிமையுடன் ஒத்துப்போவதோடு, சுற்றுச்சூழலை பாதுகாத்தவாறு மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் விதத்தையும் பிரதிபலிக்கிறது. நிலையான வளர்ச்சி கொள்கைகளை உருவாக்குவதன் மூலம், சமூகங்களுடன் இணைந்து செயற்படும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், உலகளாவிய சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அனைத்து வயதினருக்கும் ஆரோக்கியமான வாழ்க்கை மற்றும் நல்வாழ்வை ஊக்குவிக்கும் இலக்கு 3 இல் கவனம் செலுத்தி, .முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் குழந்தைகளின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்கு உதவும் வகையில் கிராமப்புற பாடசாலைகளில் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை அளித்துள்ளது. பெருநிறுவன சமூகப் பொறுப்பு (CSR) திட்டங்கள் தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் (NPS) அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலையின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. தகுதிபெற, அந்தப் பாடசாலை 40% இற்கும் அதிகமானோர் சமுர்த்தி பயனாளிகளாக உள்ள ஒரு கிராமத்தில் அமைந்திருக்க வேண்டும், மேலும் கல்விக் கழகத்தால் கடினமான பகுதி என வகைப்படுத்தப்பட்டால் அது விரும்பத்தக்கது. பாடசாலையின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதும், தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலையில் உள்ள மாணவர்களின் ஆரோக்கியத்தையும் நல்வாழ்வையும் மேம்படுத்த உதவுவதும் முக்கிய குறிக்கோளாகும்.

இந்தத் திட்டங்களின் விளைவுகளில் பாடசாலைச் சூழலை மேம்படுத்துதல், பாதைகள் வகுப்பறைகள் மற்றும் குழந்தைகளிடையே 5S மனநிலையை உருவாக்குதல். தலைமைத்துவத்தை வளர்த்தல், தொலைநோக்கு, குறிக்கோள், நோக்கங்கள், குழந்தைகளிடையே தலைமைத்துவத்தை அங்கீகரித்தல், படைப்பாற்றல் மற்றும் சிக்கல் தீர்க்கும் திறன், மாணவர்களை தரக்கட்டுப்பாட்டு (QC) மேம்பாட்டுத் திட்டங்களில் ஈடுபடுத்துதல் மாதிரி வகுப்பறைகளை உருவாக்குதல் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துதல் சிரேஸ்ட மாணவர்களுக்கான தனிப்பட்ட மேம்பாடு மற்றும் மென்திறன் பட்டறை, மாணவர்களுக்கான புலமைப்பரிசில்கள், பாடசாலைக்குப் பிந்தைய கல்விக்கு ஆதரவளித்தல், படைப்பாற்றலை மேம்படுத்த போட்டிகளை ஏற்பாடு செய்தல், பசுமைக் கருத்துக்களை ஊக்குவித்தல், வீட்டுத் தோட்டங்கள் மற்றும் பாடசாலை சமூகத்தின் நலனை மேம்படுத்துதல் ஆகியவை அடங்கும். 2013-இல் தொடங்கப்பட்ட பாடசாலை உற்பத்தித்திறன்

மேம்பாட்டுத் திட்டம், இன்றுவரை 11 திட்டங்களை நிறைவு செய்துள்ளது.

## நிலையான அபிவிருத்தி இலக்குகள் (SDG) இலக்கு 1: வறுமையை ஒழித்தல்

வறுமையை ஒழிப்பதற்கான முதல் இலக்கை ஆதரிக்கும் வகையில் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம், பாடசாலை, கோயில் மற்றும் பிராந்திய சமூகத்தை ஒருங்கிணைத்து ஒரு சமூக மேம்பாட்டுத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. பரேய்கம, மேமா/மத்/பரெய்கம மகா வித்தியாலயத்தைச் சுற்றியுள்ள சமூகத்தில் இத்தகைய திட்டம் செயற்படுத்தப்படுகிறது. இப்பகுதியில் உள்ள மக்கள் தொகையில் 70% க்கும் அதிகமானோர் சமூர்த்தி பயனாளிகள், மேலும் பல குடும்பங்கள் தினசரி வருமானத்தை நம்பி வாழ்கின்றனர்.

திட்டத்தின் இலக்குகள்:
அ. பரேய்கம மகா வித்தியாலயத்தில் உள்ள மாணவர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதன் மூலம் வறுமையை ஒழிப்பது, அவர்களுக்கு ஒரு சிறிய வணிகம் அல்லது வீட்டுத் தொழிலை உருவாக்குவதற்கு உதவுதல்

ஆ. வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு மற்றும் சமூகத்தின் எதிர்கால தொழில் வாய்ப்புகளை மேம்படுத்துதல்.

இ. சமயம், சமூகம், கலாச்சார நடவடிக்கைகள் மற்றும் விவசாய உற்பத்தி மூலம் சமூகத்தை கோயில் மற்றும் பாடசாலையுடன் ஒருங்கிணைத்து சமூக ஈடுபாட்டை வலுப்படுத்துதல்.

3 ஆண்டுகள் நீடித்த இந்த ஆய்வு, பாடசாலை சமூகத்தையும் கோயிலையும் இணைக்கும் மாதிரியை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அதிபரின் தலைமையில் பாடசாலை முக்கியப் பங்கு வகித்தது அத்துடன் பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள் ஈடுபாட்டிற்கான தளமாகப் பயன்படுத்தப்பட்டன. கோயிலை மையமாகக் கொண்டு சமூகத்தின் சமூக மேம்பாடு தொடங்கப்பட்டது. இதில் சமூகத்தை கோயிலுடன் ஒருங்கிணைத்தல், 5S மூலம் உற்பத்தித்திறனை ஊக்குவித்தல், போதைப்பொருள் குறித்து சமூகத்திற்குக் கல்வி கற்பித்தல், நிலையான சுகாதாரம் மற்றும் பாலியல் ஆரோக்கியம் குறித்த பட்டறைகள் மற்றும் கல்வி நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் வகையில் மாதவிடாய் அணையாடைகளை (sanitary napkins) நன்கொடையாக வழங்குதல் ஆகியவை அடங்குகின்றன.

*மூலோபாயம் 5:*
பல்கலைக்கழக சமூகத்தை ஈடுபடுத்தவும், நிலைபெறுதன்மை வாய்ந்த நடத்தைகளை ஊக்குவிக்கவும் விழிப்புணர்வு பிரச்சாரங்கள், பட்டறைகள் மற்றும் நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல்.முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் நிலைபெறுதன்மை முயற்சிகள் குறித்து ஊழியர்களைப் புதுப்பித்த நிலையில் வைத்திருக்க, மாணவர் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் அவ்வப்போது விழிப்புணர்வு அமர்வுகள் நடத்தப்படுகின்றன. நிலைபெறுதன்மை செயற்பாடுகளை முன்னிலைப்படுத்தி செய்திமடல்கள் விநியோகிக்கப்படுகின்றன. மாணவர் படிக்கும் பகுதி அல்லது சிற்றுண்டிச்சாலையில் உள்ள ஒரு பிரத்தியேக அறிவிப்புப் பலகை 5S மற்றும் நிலைபெறுதன்மை முயற்சிகளை முன்னிலைப்படுத்துகிறது.




# இயக்குவிக்கும் காரணி 04: சிந்தனைக்கு வழிகாட்டும் டிஜிற்றல் சிறப்பு

தொடர்ந்து மாறிவரும் எப்போதும் கல்வித் துறையில் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் தனது சிறப்பை மறுவரையறை செய்ய டிஜற்றல் மாற்றத்தை (digital transformation) தழுவியுள்ளது. முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் புத்தாக்கம் மற்றும் தகவமைப்பிற்கான அர்ப்பணிப்பு, கற்றல் அனுபவத்தை மேம்படுத்தவும், நிர்வாகச் செயல்முறைகளை நெறிப்படுத்தவும், கற்றல் பங்காளர்கள் மற்றும் பதவியணியினரை வலுவூட்டவும் முன்னோடியான மற்றும் புதிய முயற்சிகளை முன்னெடுக்கவும் வழிவகுத்துள்ளது. ”சிந்தனைக்கு வழிகாட்டும் டிஜிற்றல் சிறப்பு” என்ற தலைப்பின் கீழ், நிறுவனத்தின் மாற்றம் தொடர்பான ஒரு கண்ணோட்டம் கீழே வழங்கப்பட்டுள்ளது.

### நிகழ்நிலை சேர்க்கை

எங்களின் காகிதமற்ற, நிகழ்நிலை மாணவர் சேர்க்கை அமைப்பு, வருங்கால கற்றல் பங்காளர்களுக்கான பதிவுச் செயல்முறையை எளிதாக்குகிறது. ஒரு பயனர்-நட்பு இடைமுகம் (user-friendly interface) மூலம், விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவும், அவர்களின் சேர்க்கை நிலையை அவதானிக்கவும் மற்றும் சரியான நேரத்தில் அறிவிப்புகளைப் பெறவும் முடியும். இந்தத் தடையற்ற அனுபவம், பல்வேறு பின்னணிகளைக் கொண்ட திறமையான நபர்கள் எங்களின் பட்டப் பின்படிப்பு கற்கைநெறிகளை எளிதாக அணுகுவதை உறுதி செய்கிறது..

### கற்றல் முகாமைத்துவ அமைப்பு (பிரக்ஞா)

எங்களின் LMS-பிரக்ஞா (prajna.pim.sjp.ac.lk) எங்கள் கற்றல் பங்காளர்களுக்கான அறிவுப் பரவலுக்கான ஒரு இடத்தில் அனைத்தையும் உள்ளடக்கிய தளமாக செயல்படுகிறது. டிஜிற்றல்முறைச் சிறப்பைப் பொறுத்தவரை முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின்

இந்தத் தளம் மிக முக்கியமானதொன்றாகும். பீட உறுப்பினர்கள் பாடப் பொருட்கள், ஒப்படைகள் மற்றும் ஊடாடும் உள்ளடக்கத்தைப் பதிவேற்றுவதன் மூலம், ஈடுபாடுள்ள கற்றல் சூழலை வளர்க்கின்றனர். கற்றல் பங்காளர்கள் எப்போது வேண்டுமானாலும் வளங்களை அணுகலாம், சக மாணவர்களுடன் ஒத்துழைக்கலாம் மற்றும் கலந்துரையாடல்களில் பங்கேற்கலாம். கட்டுரைத் திருட்டைக் கண்காணிப்பதற்கான Turnitin போன்ற தொழிற்துறையின் முன்னணிப் பயன்பாடுகளுடன் மிக உயர்ந்த ஒருங்கிணைப்புகளைப் பயன்படுத்தி பிரக்ஞா செழுமைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த LMS, வகுப்பறைக்கு அப்பால் வாழ்நாள் முழுவதும் கற்றலைச் சாத்தியமாக்கி, பௌதீக எல்லைகளைக் கடந்து செல்கிறது. முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் நூலகத்தில் உள்ள மின்னணு வாசிப்புப் பொருட்கள் மற்றும் அச்சிடப்பட்ட புத்தகங்களுக்கான அட்டவணை ஆகிய இரண்டுமே, கற்றல் பங்காளர்கள் எளிதான மற்றும் சரியான நேரத்தில் குறிப்புக்காக பிரக்ஞாவில் பட்டியலிடப்பட்டுள்ளன.பிரக்ஞா வழியாக நிகழ்நிலைக் கற்பித்தல் மற்றும் கற்றல் முறைகளுக்குத் தயாராக இருந்ததன் காரணமாக, முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனமானது பெருந்தொற்றுக் காலத்தில் எந்தவிதமான சவால்களையும் சந்திக்கவில்லை. மேலும், நிறுவனம் வழக்கமான நேரந்தவறாமையைக் கடைப்பிடித்து எங்கள் கற்றல் பங்காளர்களுக்குச் சேவை செய்ய முடிந்தது என்பதில் பெருமிதம் கொள்கின்றது.

.

## நிகழ்நிலை மற்றும் கலப்பின கற்பித்தல்

முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் தரத்தை பராமரிக்கும் அதே வேளையில், கல்வியில் நெகிழ்வுத்தன்மையின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கிறது. முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய விரிவுரைகளை வழங்குவதற்காகத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, நிகழ்நிலை மற்றும் கலப்பினக் கற்பித்தல் முறைகளுக்கு இடையில் தடையின்றி மாறுகிறார்கள். கற்றல் பங்காளர்கள் நேரில் கலந்துகொண்டாலும் அல்லது தொலைவிலிருந்து இணைந்தாலும், பல்லூடக விளக்கக்காட்சிகள், நிஜ-உலக நிகழ்வு ஆய்வுகள் மற்றும் ஊடாடும் உருவகப்படுத்துதல்கள் ஆகியவற்றால் செழுமைப்படுத்தப்பட்ட அதே உயர்தரக் கல்வியைப் பெறுகிறார்கள்.

## ஸ்மார்ட் மெய்நிகர் வகுப்பறைகள் (Smart Virtual Classrooms)

முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் ஸ்மார்டு மெய்நிகர் வகுப்பறைகள் அதிநவீன தொழில்நுட்பங்களை ஒருங்கிணைக்கின்றன. ஊடாடும் வெண்பலகைகள், காணொளிக் கலந்துரையாடல் மற்றும் நிகழ்நேரக் கருத்துக் கணிப்புகள் மாணவர்களின் ஈடுபாட்டை மேம்படுத்துகின்றன. மாணவர்கள் புரிந்துகொள்ளும் நிலைகளை உடனடியாகக் கணித்து, அதற்கேற்ப தங்கள் கற்பித்தலை பீடம் மாற்றியமைக்கிறார்கள். இந்த ஆற்றல்மிக்க இடங்கள் ஒத்துழைப்பு, விமர்சன சிந்தனை மற்றும் செயலில் பங்கேற்பை வளர்க்கின்றன.

## மாணவர் முன்னேற்ற முகாமைத்துவம்

தனிப்பயனாக்கப்பட்ட ஆதரவிற்கு மாணவர்களின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பது அவசியம். முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் மாணவர் முன்னேற்ற முகாமைத்துவ அமைப்பு வருகை, தரங்கள் மற்றும் செயல்திறன் குறித்த நிகழ்நேரத் தகவல்களை வழங்குகிறது. ஆலோசகர்கள் இந்தத் தரவுகளைப் பயன்படுத்திப் பின்தங்கியுள்ள கற்றல் பங்காளர்களை அடையாளம் கண்டு, அவர்களுக்கு சரியான ஆதரவை வழங்கவும் மற்றும் அவர்களின் சாதனைகளை அங்கீகரிக்கவும் பயன்படுத்துகின்றனர். தகவலறிந்த முடிவுகள் மாணவர்களின் வெற்றிக்கு வழிவகுக்கும் என்று முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் நம்புகிறது.

### நிகழ்நிலை பரீட்சைகள் மற்றும் பரீட்சை முகாமை

முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் டிஜிற்றல் பரீட்சைத்தளம் நியாயம், பாதுகாப்பு மற்றும் வினைத்திறன் என்பவற்றை உறுதி செய்கிறது. கற்றல் பங்காளர்கள் தொலைதூர இடங்களில் இருந்து வலுவான ஏமாற்றுத் தடுப்பு நடவடிக்கைகளுடன் தங்கள் பரீட்சைகளை எழுதுகிறார்கள். பரீட்சைகள் புறநிலை கேள்விகள் அமைப்பால் தானாகவே மதிப்பிடப்படுகின்றன. இது பீடத்திற்கு எழுத்திலான பதில்களை மதிப்பீடு செய்வதில் கவனம் செலுத்த அனுமதிக்கின்றது. பரீட்சை முகாமைத்துவமானது திட்டமிடல், மேற்பார்வை மற்றும் முடிவு செயலாக்கம் ஆகிய அனைத்தையும் உள்ளடக்குவதுடன் இவை அனைத்தும் தடையின்றி நிகழ்நிலையில் செயற்படுத்தப்படுகின்றன.

### மாணவர் கற்கைநெறி கட்டண முறை

காசாளர் அலுவலகத்தில் நீண்ட வரிசையில் நிற்கும் நாட்கள் மலையேறிவிட்டன. முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் நிகழ்நிலைக் கட்டண செலுத்துகை அமைப்பு, கற்றல் பங்காளர்களை கல்விக் கட்டணம், இதர கட்டணங்கள் மற்றும் பிற செலவுகளை மின்னணு முறையில் செலுத்த அனுமதிக்கிறது. பாதுகாப்பான கட்டண நுழைவாயில்கள் இரகசியத்தன்மையை உறுதி செய்கின்றன, மேலும் தானியங்கி ரசீதுகள் நிதிப் பதிவுகளை எளிதாக்குகின்றன. நிர்வாகப் பணிகள் தொந்தரவில்லாமல் இருப்பதால், கற்றல் பங்காளர்கள் தங்கள் படிப்பில் கவனம் செலுத்துவதற்கு முடியும்.

### பதவியணி பதிவேடு முகாமைத்துவம்.

திறமையான பதவியணி பதிவேடு முகாமைத்துவம் நிறுவனத்தின் செயல்திறனுக்கு இன்றியமையாதது. எங்களின் டிஜிற்றல் அமைப்பு, ஒப்பந்தங்கள், சான்றிதழ்கள் மற்றும் செயல்திறன் மதிப்பீடுகள் உட்பட பதவியணியினரின் தரவுகளை மையப்படுத்துகிறது. லீவு கோரிக்கைகள், பதவி உயர்வுகள் மற்றும் மதிப்பீடுகள் போன்ற மனிதவளச் செயல்முறைகள் நெறிப்படுத்தப்பட்டுள்ளன. பதவியணி உறுப்பினர்கள் தங்கள் பதிவுகளை நிகழ்நிலையில் அணுகுவதன் வெளிப்படைத்தன்மை மற்றும் வசதியைப் பாராட்டுகிறார்கள்.

சிந்தனைக்கு வழிகாட்டும் டிஜிற்றல் சிறப்பு ” என்பது வெறும் சொற்றொடர் மட்டுமல்ல—அது கல்வியின் எதிர்காலத்தை வடிவமைப்பதற்கான எங்களின் அர்ப்பணிப்பாகும். தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொள்வதன் மூலம், முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் தனது பங்குதாரர்களை வலுவூட்டுகிறது, புத்தாக்கத்தை வளர்க்கிறது, மேலும் கற்றலுக்கு எல்லையே இல்லாத ஒரு துடிப்பான சூழலை உருவாக்குகிறது. முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனமானது இந்த மாற்றப் பயணத்தில் தொடரும்போது, டிஜிற்றல் வலுவூட்டல் மூலம் சிறப்பை மறுவரையறை செய்வதில் எங்களுடன் இணையுமாறு ஏனைய தரப்பினரையும் அழைக்கிறது

# வலிமை, பலவீனம், வாய்ப்பு, அச்சுறுத்தல் பற்றிய பகுப்பாய்வு (SWOT Analysis)

**வலிமைகள்**

1. புலமை ரீதியாகவும் வாண்மை ரீதியாகவும் தேர்ச்சிமிக்க பல்துறைகளைக் கொண்டமைந்த பீடம்
2. ஒருங்கிணைந்த கற்றல் முகாமைத்துவ முறைமை, இயங்கியல் தன்மை கொண்ட இணையதள அணுகுதளம், பிரஞ்சா
3. முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம் என்ற நிலையான நாமத்துடனான பலம்வாய்ந்த பழைய மாணவர் சங்கம்
4. கடல்கடந்த சந்தைகளில் பலமுள்ள வகையில் அமைந்துள்ள பிரசன்னம்
5. ISO 9000:2015 வகையான தராதரப்பத்திரங்கள்
6. முழுவீச்சிலான செயன்முறையுடன் கூடிய ஆய்வு மையங்கள்
7. சௌகரியமான அமைவிடம் மற்றும் சிறந்த உட்கட்டமைப்பு / முகாமைத்துவ கல்வி பயில்வதற்கான நூலக வசதி
8. சுய நிதிக்கையாள்கை முறைமை

**பலவீனங்கள்**

1. இதுவரையில் சர்வதேச சான்றுறுதி இன்மை.
2. கற்கை நெறிகள் தொடர்பில் இணையவழிக் கட்டணம் செலுத்துகின்ற வசதியின்மை
3. தொழிற்றுறைசார் அனுபவங்களையும் புலமைசார் தகைமைகளையும் சீராக ஒருங்கிணைத்து வலுப்படுத்துவதற்கு ஏதுவாக கற்கை பீடங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருத்தல்
4. ஊழியர்கள் கல்விசார் / நிருவாகம் சார் ஆதரவு வழங்குவதில் குறைபாடு
5. பொது மக்கள் தளத்தில் நின்று தேசிய ரீதியான சிக்கல்களை உள்வாங்குதல் / கண்காணித்தல் போன்றவற்றில் மட்டுப்பாடு
6. கல்வித் திட்டங்களில் வெளிநாட்டு மாணவர்கள் பங்கேற்பதில் மட்டுப்பாடு
7. முறையாக ஒருங்கமைக்கப்பட்ட முயற்சியாண்மை வளத் திட்டங்கள் இன்மை
8. சந்தையை மையப்படுத்திய கற்கை நெறிகளில் “சந்தையை விரைவாக அணுகுதல்” என்ற நிலைக்குச் செல்வதற்கு ஏதுவற்ற வகையிலான இறுக்கமான கணக்காய்வு முறைமை

**வாய்ப்புகள்**

1. வெளிநாட்டைச் சேர்ந்தவர்களுடனான கூடுதலான ஊடாட்டம்
2. குறுங்கால கற்கைநெறிகள் தொடர்பில் உள்நாட்டு வெளிநாட்டு முன்னணி கல்வி நிறுவனங்களுடன் கொண்டுள்ள அதிக பிணைப்பு
3. மதியுரை நிறுவனங்களுடனான முனைப்பான ஈடுபாடு
4. சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில் முயற்சி துறையினை

மீளெழுச்சிபெறச் செய்வதற்கான பரந்தளவிலான ஆதரவு வழங்கல்

5. தேசிய ரீதியிலான முக்கிய பிரச்சினைகள் தொடர்பில் பிரயோக ரீதியான ஆய்வுகளை மேற்கொள்ளல்
6. புலம்பெயர் நாட்டம் கொண்டவர்களை மையப்படுத்தி வெளிநாட்டு கல்வி நிறுவனங்களுடன் இணைந்து வழங்கும் MBA கற்றை நெறிகள்
7. கல்விசார் அபிவிருத்தித் திட்டங்கள் ஊடாக பெருநிறுவன நிறைவேற்று அதிகாரிகளுக்கு திறன்விருத்தி நிகழ்ச்சிகளை வழங்குதல்

**அச்சுறுத்தல்கள்**

1. புலமையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியதன் காரணமாக / நாட்டின் சூழ்நிலை காரணமாக ஏற்பட்டுள்ள சந்தைத் தளர்வு
2. துரிதமாக மாற்றம் கண்டுவரும் சந்தைச் சூழல் மூலம் ஏற்படும் கடுமையான போட்டித்தன்மை
3. உள்நாட்டு MBA பட்டங்களிலும் பார்க்க சர்வதேச தகைமைகள் மேம்பட்டவையாகக் காணப்படுதல்
4. MBA பட்டங்கள் நிதிசார் தன்னிறைவு மிக்கவையாகக் கருதப்பட்டு அதில் மிகையாகத் தங்கியிருத்தல்
5. நிதிசார் சவால்கள் காரணமாக பட்டப்பின் கற்கைகளுக்கு பெருநிறுவனங்கள் காட்டும் அரிதான ஊக்கப்படுத்தல்
6. புலமையாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதால் சிறந்த தரம்வாய்ந்த புலமையாளர்களை இழத்தல்
7. அனுபவம் வாய்ந்த கல்விசாரா ஊழியர்களை இழத்தல்
8. செலவுக் கட்டமைப்பு மற்றும் வட்டி வருமானம் போன்றவற்றின் அதிகரிப்பு

# தற்சமயச் செயலாற்றுகை (Current Performance)

**மாணவர்களை உட்சேர்த்தல்**

| கற்கைநெறி | சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| வியாபார நிருவாக கலாநிதி (Ph.D.) | 26 |
| வியாபார நிருவாக முதுமாணி (MBA) | 327 |
| வியாபார நிருவாக முதுமாணி (MBA)(ஐக்கிய அரபு இராச்சியம்) | 29 |
| வியாபார நிருவாக முதுமாணி (MBA)(ஓமான்) | 14 |
| வரிவிதிப்புத் துறை வியாபார நிருவாக முதுமாணி (MBAT) | 32 |
| நிறைவேற்றுத்தர வியாபார நிருவாக முதுமாணி (EMBA) | 20 |
| நிறைவேற்றுத்தர வியாபார நிருவாக முதுமாணி (EMBA)(சீனா) | 67 |
| கல்வி முகாமைத்துவத்தில் பொது நிருவாக முதுமாணி (சீனா) | 29 |
| முகாமைத்துவ பட்டப்பின் டிப்ளோமா | 117 |
| **மொத்த ஆட்சேர்ப்பு** | **661** |

**வெளியேறியுள்ள பட்டதாரிகள்**

| | |
|---|---|
| வியாபார நிருவாக கலாநிதி (Ph.D.) | 03 |
| வியாபார நிருவாக முதுமாணி (MBA) | 333 |
| நிறைவேற்றுத்தர வியாபார நிருவாக முதுமாணி (EMBA) | 25 |
| வரிவிதிப்புத் துறை வியாபார நிருவாக முதுமாணி (MBAT) | 51 |
| சுங்கம், சர்வதேச வணிகத் துறைகளில் வியாபார நிருவாக முதுமாணி (MBA-CIT) | 06 |
| கல்வி முகாமைத்துவத்தில் பொது நிருவாக முதுமாணி (MPAEM) | 121 |
| முகாமைத்துவ பட்டப்பின் டிப்ளோமா (PDM) | 40 |
| **பட்டதாரிகளின் மொத்த எண்ணிக்கை** | **579** |

**வெளிநாட்டு மாணவர்கள்**

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் எலிசபெத் மகாராணியார் பொதுநலவாய புலமைப்பரிசில் திட்டத்தினுள் உள்வாங்கப்பட்டுள்ளது. அதன் மூலம் MBA கற்கையைத் தொடர்வதற்குப் புலமைப்பரிசில் வழங்கப்பட்டுள்ள ஆட்களை அக்கற்கையைத் தொடர அனுப்பிவைப்பதற்கான அங்கீகாரத்தை இந்நிறுவனம் கொண்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு முதல் புலமைப்பரிசில் வழங்கப்பட்டுள்ள ஆட்கள் அறுவர் MBA கற்கைநெறியைத் தொடர்ந்துள்ளனர்.

பொதுநலவாய புலமைப்பரிசில் திட்டத்தின் மூலம் ஈட்டிக்கொள்ளப்பட்ட வருமானம்

| | |
|---|---|
| ஏம்.தொங்கா (MBA/23/6900) | 325,000.00 |
| ஒவுசு ஆகியாவ் ஜோய் (MBA/24/7092) | 337,500.00 |
| | **662,500.00** |

2024 ஆம் ஆண்டு முதல் சீன மாணவர்களுக்கு EMBA கற்கை நிகழ்ச்சித்திட்டத்தினை வழங்குவதற்கு முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் ஆரம்பித்துள்ளது. ஐக்கிய அரபு இராச்சியம், கட்டார், குவைத், ஓமான், பஹ்ரைன் நாடுகளிலும் MBA பட்டக் கற்கை வழங்கப்படுகின்றது.

**வெளிநாட்டு நிகழ்ச்சிகள் மூலம் ஈட்டப்பட்ட வருமானம்**

| | |
|---|---|
| MBA ஐக்கிய அரபு இராச்சியம் (2019/2021) | 1,298,475.00 |
| MBA ஐக்கிய அரபு இராச்சியம் (2024/2026) | 9,346,487.76 |
| MBA கட்டார் (2023/2024) | 17,949,895.11 |
| MBA ஓமான் (2024/2026) | 9,619,053.63 |
| MBA ஓமான் (2019/2020) | 651,653.61 |
| EMBA சீனா 2024 II | 11,095,679.05 |
| கல்வி முகாமைத்துவத்தில் MPA - சீனா (2024) | 9,840,373.96 |
| | **104,755,601.79** |

EMBA கற்கைத் திட்டத்தைத தொடரும் மாணவர்களுக்கு வெளிநாட்டு பயிற்சித் திட்டங்கள் மூலம் முகாமைத்துவம் குறித்த சர்வதேச ரீதியான வழிகாட்டல் வழங்கப்படுகிறது. சமீப காலங்களில், இதுபோன்ற ஆய்வு சுற்றுலாக்கள் முறையே கேசட்சாட் பல்கலைக்கழகம் மற்றும் கட்ஜா மாதா பல்கலைக்கழகத்துடன் இணைந்து தாய்லாந்து மற்றும் இந்தோனேசியா நாடுகளில் நடத்தப்பட்டன.

**ஊழியர்கள் பற்றிய விபரங்கள்**

31.12.2024 ஆந் திகதி வரையில் உள்ள நிரந்த ஊழியர்களின் விபரங்கள் - அவர்களது சேவை வகுதி அடிப்படையில்

| சேவை வகுதி | சம்பளக் குறியீடு | அங்கீகரிக் கப்பட்ட பணியாளர் வற்றிடங்கள் | உண்மையான பணியாளர் வெற்றிடங்கள் | நிலவும் பதலி வெற்றிடங்கள் | சேவை வகுதி |
|---|---|---|---|---|---|
| **1. ஆரம்ப நிலை** | | | | | |
| தொழிலுதவியாளர் | U - PL 1 | 02 | - | 02 | 03 |
| சாரதி | U - PL 3 | 03 | 01 | 02 | 01 |
| **2. இரண்டாம் நிலை**<br>முகாமைத்துவ உதவியாளர் | U - MN 1 | 09 | 02 | 07 | 10 |
| முகாமைத்துவ உதவியாளர் (சிறாப்பர்) | U - MN 1 | 01 | 01 | - | - |
| முகாமைத்துவ உதவியாளர் (ஏடு காப்பாளர்) | U - MN 1 | 01 | 01 | - | - |
| தொழினுட்ப உத்தியோகத்தர் (குடியியல் / மின்பொருள் / திருத்தவியல்) | U - MT 1 | 02 | 02 | - | - |
| நூலக தகவல் உதவியாளர் | U - MN 1 | 04 | 03 | 01 | - |
| சிரேட்ட முகாமைத்துவ உதவியாளர் | U - MN 4 | 01 | 01 | - | - |
| **3. மூன்றாம் நிலை**<br>நிகழ்ச்சித் திட்ட வகுப்பாளர் மற்றும் கணித் தொகுதி ஆய்வாளர் | U - AS 2 | 01 | - | 01 | 01 |
| பொதுமக்கள் தொடர்பாடல் உத்தியோகத்தர் | U - EX 1 | 01 | - | 01 | - |
| மாணவர் தொடர்பாடல் உத்தியோகத்தர | - | - | - | - | 01 |
| **4. முதுநிலை மட்டம்** | | | | | |
| பணிப்பாளர் | U – AC 5 | 01 | 01 | - | - |
| பேராசிரியர் | U – AC 5 | 01 | 01 | - | - |
| உதவி நூலகர் | U – AC 3 | 01 | - | 01 | 01 |
| சிரேட்ட முகாமைத்துவ ஆலோசகர் (ஒப்பந்த நிலை)<br>முகாமைத்துவ ஆலோசகர் (ஒப்பந்த நிலை) | U – AC 3 | 12 | 11 | 01 | - |
| சிரேட்ட விரிவுரையாளர் / விரிவுரையாளர் / விரிவுரையாளர் ((தகுதிகாண்) | U – AC 4 | 03 | 03 | - | - |
| சிரேட்ட உதவி நிதியாளர் / பிரதி நிதியாளர் | U – EX 2 | 01 | 01 | - | - |
| சிரேட்ட உதவிப் பதிவாளர் / பிரதிப் பதிவாளர் | U – EX 2 | 01 | 01 | - | - |
| **Summary** | | **45** | **29** | **16** | **18** |

*பணியாளர் வெற்றிடங்கள் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதன் மூலம் நிவர்த்திசெய்யப்படும்.*

# கற்கை நெறிகள்

**கலாநிதிப் பட்டம் (Doctor of Philosophy - PhD)**

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம் (PIM) வழங்கும் கலாநிதிப் பட்டத்திற்கான (PhD) கற்கைநெறி, கல்விப்புலத்தின் முன்னோடியாகத் திகழ்கிறது. கோட்பாட்டிலும் நடைமுறையிலும் சிறந்து விளங்கும் ஆய்வு சார்ந்த அறிஞர்களை உருவாக்கும் நோக்குடன், இந்தக் கற்கைநெறி ஒரு நவீன பாடத்திட்டத்தைக் கொண்டுள்ளது. பல்வேறு துறைகளுக்கிடையிலான ஒத்துழைப்பில் கவனம் செலுத்துவதன் மூலம், கல்விப்புலம் மற்றும் பயிற்சித் துறைக்குள்ளான சிக்கலான சவால்களை எதிர்கொள்ளத் தேவையான கருவிகளையும் அறிவையும் கலாநிதிப் பட்டத்திற்கான கற்கைநெறி மாணவர்களுக்கு வழங்குகிறது. எமது மதிப்பிற்குரிய விரிவுரையாளர்களின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தியும், அதிநவீன வசதிகளைக் கொண்டும், இந்தக் கற்கைநெறி அறிவுசார் வளர்ச்சிக்கும் புத்தாக்கத்திற்கும் உந்துசக்தியாக அமையும் ஒரு ஆழமான கற்றல் அனுபவத்தை வழங்குகிறது.

கலாநிதிப் பட்டக் கற்கைநெறியைப் பின்பற்றுவதற்கான தகைமை உள்ளவர்கள் பின்வரும் திறன்களைக் கொண்டிருக்க வேண்டும்:
அ. முகாமைத்துவத் துறையில் உள்ள நடைமுறைசார், சிக்கலான மற்றும் சர்ச்சைக்குரிய பிரச்சினைகளை அடையாளம் கண்டு, தொழில்முறைப் பிரயோகத்துக்குரிய நுட்பங்களைப் பயன்படுத்தி அவற்றை ஆராய்ந்து பகுப்பாய்வு செய்தல்.
ஆ. புதிய அறிவை உருவாக்குவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளிக்கும் சுயாதீனமான ஆய்வுகளை வடிவமைத்து மேற்கொள்வதோடு, பட்டப்பின்படிப்பு மாணவர்களுக்கு ஆய்வு முறைகள் குறித்துப் பயிற்சி அளித்தல், மற்றும் துறை சார்ந்த நிபுணத்துவம் கொண்ட மற்றவர்களால் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளை மேற்பார்வையிட்டு மதிப்பிடுதல்.
இ. நிபுணத்துவம் கொண்ட மற்றும் நிபுணத்துவம் அல்லாத குழுக்களிடம் தமது கருத்துக்கள், பார்வைகள் மற்றும் முடிவுகளைத் தெளிவான மற்றும் பயனுள்ள முறையில் எடுத்துரைத்துத் தொடர்பாடல் செய்தல்.
ஈ. முகாமைத்துவத் துறையில் உள்ள சிக்கலான விடயங்கள் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளலின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொள்வதோடு, தொழில்முறைச் சூழலில் கணிக்க முடியாத சந்தர்ப்பங்களில் கூடத் தனிப்பட்ட தீர்மானத்தையும் பொறுப்புணர்வையும் கையாளுதல்.
உ. ஆய்வு செய்வதில் நெறிமுறைகளை வலுப்படுத்துவதோடு, புதிய அறிவை ஆய்விதழ்களில் வெளியிடுவதன் மூலம் அறிவைப் பரப்பக்கூடிய திறனைக் கொண்டிருத்தல்.

**வியாபார நிர்வாக கலாநிதிப் பட்டம் (Doctor of Business Administration - DBA)**

ஒரு தேசத்தின் சமூக-பொருளாதார நல்வாழ்வுக்கு, பெருநிறுவன உலகத்தின் அறிவுசார் ஆற்றல் மிகவும் முக்கியமானது. இந்த தேவையை உணர்ந்து, தனித்துவமான பங்களிப்புகளை வழங்கும் தனது நீண்ட பாரம்பரியத்தைத் தொடர்ந்து, PIM நிறுவனம் உள்நாட்டு உண்மை நிலையையும் உலகளாவியத் தொடர்புகளையும் மனதிற் கொண்டு புதிதாக வடிவமைக்கப்பட்ட DBA கற்கைநெறியை வழங்குவதில் பெருமை கொள்கிறது. PIM இன் இந்த பெறுமதிமிக்க DBA கற்கைநெறியானது, தொழில் துறை மற்றும் அரச துறைகளில் உண்மையான பூகோள ரீதியான தீர்மானம் மேற்கொள்ளலுக்கு ஆய்வுசார் முடிவுகளைப் பயன்படுத்தும் நோக்கில், ஆழமான ஆய்வுகளை நடத்துவதற்குத் தேவையான தகைமைகளை கற்கையைத் தொடர்பவர்களுக்கு

வழங்குவதற்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது, இலங்கை முகாமைத்துவ நடைமுறையில் அசலான மற்றும் தாக்கம் மிக்க ஆய்வுகளை வடிவமைத்து உருவாக்க, பிரயோக வர்த்தக முகாமைத்துவ ஆய்வுகளை நோக்கி கற்கையைத் தொடர்பவர்களை இந்நிகழ்ச்சித் திட்டம் வழிநடத்துகிறது. மேலும், கோட்பாடுக்கும் நடைமுறைக்கும் இடையிலான இடைவெளியைக் குறைத்து, உள்நாட்டு ரீதியான, பிராந்திய ரீதியான மற்றும் உலகளாவிய ரீதியான பொருளாதார முன்னேற்றத்துக்குப் பங்களிக்கும் உயர்தரம் மிக்க, துல்லியமான, பொருத்தமான மற்றும் பிரயோக ரீதியான ஆய்வுகளுக்கான சந்தை இடைவெளியையும் இக்கற்கைநெறி பூர்த்தி செய்கிறது.

DBA கற்கைநெறியைப் பின்பற்றுவதற்கான தகைமை உள்ளவர்கள் பின்வரும் திறன்களைக் கொண்டிருக்க வேண்டும்:
அ. முகாமைத்துவத் துறையில் உள்ள நடைமுறைசார், சிக்கலான மற்றும் சர்ச்சைக்குரிய பிரச்சினைகளை அடையாளம் கண்டு, தொழில்முறைப் பிரயோகத்துக்கு ஏற்ற பொருத்தமான நுட்பங்களைப் பயன்படுத்தி அவற்றை ஆராய்ந்து பகுப்பாய்வு செய்தல்.
ஆ. நிறுவன ரீதியான அல்லது தொழில் சார்ந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதில் புதிய அறிவை உருவாக்குவதற்கு, உள்நாட்டு மற்றும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த சுயாதீனமான ஆய்வுகளை வடிவமைத்து மேற்கொள்வதன் மூலம் தமது சிந்தனையை வெளிப்படுத்தல்.
இ. கோட்பாடுக்கும் நடைமுறைக்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்கும் வகையில், தமது கருத்துக்கள், பார்வைகள் மற்றும் தீர்மானங்களை நிபுணத்துவம் வாய்ந்த மற்றும் நிபுணத்துவமற்ற குழுக்களிடம் இணைந்து தெளிவான மற்றும் பயனுள்ள முறையில் தொடர்பாடல்களை மேற்கொள்ளல்.
ஈ. முகாமைத்துவத் துறையில் உள்ள சிக்கலான விடயங்களில் முடிவெடுப்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, தொழில்முறைச் சூழலில் கணிக்க முடியாத சந்தர்ப்பங்களில் கூடத் தனிப்பட்ட முடிவையும் பொறுப்புணர்வையும் கையாளுதல்.
உ. ஆய்வு செய்வதில் நெறிமுறைகளை வலுப்படுத்துவதோடு, வெளியீடுகள், விளக்கவுரைகள் மற்றும் தாக்கம் செலுலுத்தவல்ல தொடர்பாடல் வழிமுறைகள் மூலம் புதிய அறிவைப் பரப்பும் திறனைக் கொண்டிருத்தல்.

**வியாபார நிர்வாக முதுமாணிப் பட்டம் (MBA)**

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம் (PIM) மிகவும் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட வியாபார நிர்வாக முதுமாணிப் பட்டத்தை (MBA) வழங்குகிறது. இது கல்விசார் சிறப்புக்கான ஒரு அளவுகோலாகத் திகழ்கிறது. கோட்பாடு மற்றும் நடைமுறைப் பிரயோக ரீதியான கற்கைகளைத் திறம்பட ஒன்றுதிரட்டி வழங்கப்படும் கற்றை ஒன்றின் மூலம், தர்க்கவியல் சிந்தனைத் திறன்கள், தலைமைத்துவ ஆற்றல் மற்றும் எந்தவொரு துறையிலும் வெற்றியீட்டுவதற்கான மூலோபாய மனப்பாங்கு போன்றவற்றை கற்பவர்கள் வளர்த்துக் கொள்ளலாம். உண்மையான உலக சவால்களை எதிர்கொள்ளல் மற்றும் அனுபவ ரீதியான கற்றல் ஆகியவற்றின் மீதான இதன் முக்கியத்துவம், கற்கைநெறியில் பங்குபற்றுபவர்கள் பட்டப்படிப்பை முடித்தவுடன் தங்கள் வாழ்க்கையிலும் அதற்கு அப்பாலும் அக்கற்கை மூலம் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் தயார்நிலையில் இருப்பதை இக்கற்கை உறுதி செய்கிறது. தமது மூலோபாய சிந்தனையைக் கூர்மைப்படுத்துவதில் இருந்து பயனுள்ள வகையிலான தீர்மானம் மேற்கொள்ளும் கலையில் தேர்ச்சி பெறுவது வரையில், முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் MBA பாடத்திட்டம் தலைமைத்துவத் துறையில் வெற்றியீட்டுவதற்குத் தேவையான திறன்களையும் அகவாற்றலையும் இக்கற்கைநெறி பங்குபற்றுநர்களுக்கு வலுவூட்டுகிறது.

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் MBA பட்டதாரிகள் பின்வருவனவற்றை ஆற்றும் திறன் பெற்றிருப்பர்:

அ. உள்நாட்டு மட்டத்திலும் உலகளாவிய மட்டத்திலும் முக்கியத்துவம் வாய்ந்த அறிவு, திறன்கள், மற்றும் உளப்பாங்குகளை அங்கீகரிப்பதுடன் முகாமைத்துவத்தில் உள்ள தற்போதைய விடயங்கள் பற்றிய ஒரு தர்க்க ரீதியான விழிப்புணர்வையும் வெளிப்படுத்துபவர்களாக இருப்பார்கள்.

ஆ. பொருத்தமான முகாமைத்துவ உத்திகளைப் பயன்படுத்தி வணிகம் தொடர்பான பிரச்சினைகளை, ஆழமான பகுப்பாய்வு ஊடாகவும் விமர்சன ரீதியான மற்றும் தர்க்கரீதியான சிந்தனை ஊடாகவும் அடையாளம் கண்டு, சரியான தீர்வுகளுடன் அவற்றைத் தீர்ப்பவர்களாக விளங்குவர்.

இ. உள்நாட்டு மட்டத்திலும் உலகளாவிய மட்டத்திலும் சம்பந்தப்பட்ட அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களை, தொடர்புகொள்ளல் மூலம் அணுகி பிரச்சினைகளுக்கான தீர்வுகளை சம்பந்தப்பட்ட துறைசார் மற்றும் துறைசாராத குழுக்களுக்குத் தெளிவாக வழங்கக்கூடியவர்களா விளங்குவர்.

ஈ. பொருளாதார மற்றும் சுற்றாடல் சார்ந்த கரிசனைகள் மற்றும் வணிக நடவடிக்கைகளின் மனிதநேய அம்சங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து, ஒரு சிந்தனா ஆற்றல் மிக்க தலைவராக சுய-வழிப்படுத்தல் மற்றும் தனித்துவத் தன்மையை வெளிப்படுத்துதல் போன்ற அம்சங்களைக் கொண்டவர்களாக விளங்குவர்.

உ. அனைத்து மட்டங்களிலும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும்போது விழுமியங்கள் குறித்து உணர்வுபூர்வமாக இருப்பதுடன், தொழில்சார் தன்மை, நேர்மை, மற்றும் நெறிமுறைகளை வலுப்படுத்துதல் போன்ற விடயங்களில் ஆளுமை மிக்கவர்களாக விளங்குவர்.

**வரிவிதிப்பு வியாபார நிர்வாக முதுமாணிப் பட்டம் (MBAT)**

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் வரிவிதிப்பு வியாபார நிர்வாக முதுமாணிப் பட்டம் (MBAT) தெற்காசியாவிலேயே முதன்முதலில் விசேடப்படுத்தப்பட்ட முதுமாணிப் பட்டமாகும். வரிவிதிப்பு வியாபார நிர்வாக முதுமாணிப் பட்டம் (MBAT), கற்கைநெறி பங்குபற்றுநர்கள் தாம் செயற்படும் வணிகத் துறைகளில் தேர்ச்சியைப் பெறுவதற்கு ஓர் உள்நாட்டு உணர்வுடன் கூடிய உலகளாவிய மனப்பாங்கை வளர்த்துக் கொள்ள உதவும் வகையில் கவனமாக வடிவமைக்கப்பட்டு, கட்டமைக்கப்பட்டு, வழங்கப்படுகின்ற ஒரு கற்கையாகும். போட்டிச் சூழலை வெல்வதற்காக மட்டுமல்லாமல், போட்டிச் சூழலைப் பொருத்தமற்றதாக்குவதற்கும் பயிற்சி அளிக்கப்பட்டு, உருவாக்கப்படுகிறார்கள். இதன் மூலம் தமது வாடிக்கையாளர்களுக்கும் ஏனைய பங்குதாரர்களுக்கும் அதிக பெறுமானத்தை அவர்கள் உருவாக்குகிறார்கள். இது அவர்களின் வாழ்க்கையில் அடுத்த கட்டத்துக்குச் செல்ல வசதியான முறையில் இக்கற்கைநறி பங்காற்றுநர்களுக்குத் துணைபுரிகின்றது. அத்துடன் இக்கற்கைநெறி இலகுவாகக் கையாளத்தக்க வகையிலான தொழில்நுட்பத்தின் மூலம் மிகவும் திறன்படப் புதுப்பிக்கப்பட்டுள்ளது. முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் விரிவுரையாளர் குழாம் விரிவான அறிவையும் அனுபவத்தையும் கொண்டுள்ள கல்வியாளர்கள் மற்றும் தொழில் துறைத் தலைவர்கள் ஆகிய இரு தரப்பினரையும் கொண்டமைந்த ஒரு சிறந்த கூட்டாகும். இதன் விளைவாக, தொழிற்றுறையில் ஏனையவர்களுக்கு எதிராகத் தாக்குப் பிடிக்கும் வகையில் துணைநல்கும் அதே வேளையில், அவர்கள் அடைந்துள்ள தேர்ச்சியின் மூலம் காரியங்களை வித்தியாசமாகச் செய்யும் அல்லது வித்தியாசமான காரியங்களைச் செய்யும் ஒரு தொழில்சார் முகாமையாளர்களின் தொகுதியை இக்கற்கை உருவாக்குகிறது.

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் MBA (வரிவிதிப்பு) பட்டதாரிகள் பின்வருவனவற்றை செய்யக்கூடியவர்களாக இருப்பர்:

அ. உள்நாட்டு மட்டத்திலும் உலகளாவிய மட்டத்திலும் முக்கியமான அறிவு, திறன்கள், மற்றும்

மனப்பாங்குகளை அங்கீகரிப்பதுடன் நிதியியல் சூழலில் உள்ள தற்போதைய விடயங்கள் பற்றிய ஒரு விமர்சன ரீதியான விழிப்புணர்வை வெளிப்படுத்தக்கூடியவர்களாக இருப்பர்.
ஆ. விமர்சன மற்றும் தர்க்கரீதியான சிந்தனை மற்றும் ஆழமான பகுப்பாய்வுடன் பிரச்சினைகளை அடையாளம் கண்டு, சரியான தீர்வுகளுடன் நாட்டின் நிதிசார் பிரச்சினைகளைத் தீர்க்க பொருத்தமான உத்திகளைப் பயன்படுத்துபவர்களாக விளங்குவர்.
இ. உள்நாட்டு மட்டத்திலும் உலகளாவிய மட்டத்திலும் சம்பந்தப்பட்ட அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களை, தொடர்புகொண்டு அணுகி பிரச்சினைகளுக்கான தீர்வுகளைச் சம்பந்தப்பட்ட துறைசார் மற்றும் துறைசாராத குழுக்களுக்குத் தெளிவாக வழங்கும் ஆற்றல் மிக்கவர்களாக விளங்குவர்.
ஈ. பொருளாதார, சமூக மற்றும் அரசியல் சார்ந்த கரிசனைகள் மற்றும் வணிகம் மற்றும் நிதிசார் நடவடிக்கைகளின் மனிதநேய அம்சங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து, ஒரு சிந்தனா ஆற்றல் மிக்க தலைவராக பிரச்சினைகளைச் சமாளிப்பதிலும் தீர்ப்பதிலும் சுய-வழிப்படுத்தல் மற்றும் தனித்துவத் தன்மையை வெளிப்படுத்துதல் போன்ற அம்சங்களைக் கொண்டவர்களாக விளங்குவர்.
உ. நிதியியல் சூழமைவுகளில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும்போது விழுமியங்கள் குறித்து உணர்வுபூர்வமாக இருப்பதுடன், தொழில்சார்ந்த தன்மை, நேர்மை, மற்றும் நெறிமுறைகளை வலுப்படுத்தும் தன்மை கொண்டவர்களாக விளங்குவர்.

**சுங்க மற்றும் சர்வதேச வியாபார நிர்வாக முதுமாணிப் பட்டம் (MBA-CIT)**

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் சுங்க மற்றும் சர்வதேச வியாபார நிர்வாக முதுமாணிப் பட்டம் (MBA-CIT), எமது சுங்க அதிகாரிகளை முழுமையான நிபுணர்களாக மாற்றுவதன் மூலம் விரும்பிய மாற்றத்தைக் கொண்டுவருவதில் கவனம் செலுத்துகிறது. இதன் மூலம் நாட்டிற்கான அதன் மறைமுகமான தாக்கம் அளப்பரியது. இக்கற்கைநெறியானது மிகவும் அங்கீகரிக்கப்பட்ட முழுநேர கற்கைநெறியாக, குறிப்பாக சுங்க அதிகாரிகளின் தொழில் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காகத் தனிப்பயனாக்கப்பட்டுள்ள கற்கைநெறயாக உள்ளது. இதுவரையில் முதலாளிகளிடமிருந்தும், பயனாளிகளிடமிருந்தும் கிடைக்கப்பெற்ற பின்னூட்டமானது,
இக்கற்கைநெறியின் செயற்றிறனுக்கான மிகவும் எதிர்பார்க்கப்பட்ட சான்றுகளை வழங்குகிறது.

இந்த இரண்டு வருட கற்கைநெறியானது ஊடாடும் தன்மை கொண்ட வகுப்பறை அமர்வுகள், திறன்களை விருத்தி செய்வதை இலக்காகக் கொண்ட விரிவுரையாளர் கலந்தாய்வுகள், வழிகாட்டல் மிகு கல்வி, வதிவிட செயலமர்வுகள், இறுதியாக நடைமுறைக்கு ஏற்புடைய ஆய்வு / திறன்கள் செயற்றிட்டம் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.
முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் சுங்க மற்றும் சர்வதேச வியாபார நிர்வாக முதுமாணிப் பட்டமானது பட்டதாரிகள் பின்வருவனவற்றைச் செய்யக்கூடியவர்களாக இருப்பர்:
அ. உள்நாட்டு மட்டத்திலும் உலகளாவிய மட்டத்திலும் முக்கிய அறிவு, திறன்கள் மற்றும் மனப்பாங்குகளை அங்கீகரித்து, சுங்கச் செயற்பாடுகளில் உள்ள தற்போதைய விடயங்கள் பற்றிய ஒரு விமர்சன ரீதியான விழிப்புணர்வை வெளிப்படுத்துபவர்களாக மாறுவர்.
ஆ. விமர்சன ரீதியான மற்றும் தர்க்கரீதியான சிந்தனை மற்றும் ஆழமான பகுப்பாய்வுக்கான பொருத்தமான நுட்பங்களைப் பயன்படுத்தி, சரியான தீர்வுகளுடன் நாட்டின் சுங்கச் செயற்பாடுகளில் உள்ள பிரச்சினைகளை இனங்காணுதல் மற்றும் உயர் மட்டத்திலான பிரச்சினைகளைத் தீர்த்தல்.
இ. உள்நாட்டு மட்டத்திலும் உலகளாவிய மட்டத்திலும் சம்பந்தப்படுகின்ற அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களை, தொடர்புகொள்வதன் மூலம் அணுகு தனடமையுடள் கூடிய முடிவுகளை

சம்பந்தப்பட்ட துறைசார் மற்றும் துறைசாராத குழுக்களுக்குத் தெளிவாகத் வழங்கும் ஆற்றலைப் பெற்றிருத்தல்.
ஈ. பொருளாதார, சுற்றுச்சூழல்கள் சார்ந்த கரிசனைகள் மற்றும் சுங்கக் கொள்கை சார்பான தீர்க்கதரிசனமான முனைவுகள் மற்றும் மனிதாபிமான அம்சங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து, ஒரு சிந்தனாவாற்றல் மிகு தலைமைத்துவத்துடன் பிரச்சினைகளைச் சமாளிப்பதிலும் தீர்ப்பதிலும் சுய வழிப்படுத்தல் ஆற்றலையும் மற்றும் தனித்துவத்தையும் வெளிப்படுத்தும் தன்மை வாயந்தவர்களாக விளங்குவர்.
உ. சுங்கத் துறையில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பங்களில் விழுமியங்கள் குறித்து உணர்வுபூர்வமாக செயற்படுவதுடன், தொழில்சார்ந்த தன்மை, நேர்மை மற்றும் நெறிமுறைகளை வலுப்படுத்தும் தன்மை வாய்ந்தவர்களாகவும் விளங்குவர்.

### பொது நிர்வாக முதுமாணிப் பட்டம் (MPA)

1988 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட பொது நிர்வாக முதுமாணிப் பட்டக் கற்கைநெறியானது, முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம் மற்றும் இலங்கையிலுள்ள, அரச துறையின் சிரேட்ட அதிகாரிகளை இலக்காகக் கொண்ட முன்னோடி முதுமாணிப் பட்டக் கற்கைநெறிகளில் ஒன்றாகும். இக்கற்கைநெறியானது கொழும்பில் உள்ள அரச துறை அதிகாரிகளுக்கு மாத்திரமன்றி, இலங்கை முழுவதிலும் உள்ள அதிகாரிகளுக்கும் பயனுள்ளதாக அமைகிறது.

1988 ஆம் ஆண்டு முதல், முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் பொது நிர்வாக முதுமாணிப் பட்டக் கற்கைநெறியானது, அமைச்சுக்களின் செயலாளர்கள், மேலதிகச் செயலாளர்கள், ஆணையாளர் நாயகங்கள் மாத்திரமன்றி, மேலணித் தளகர்த்தர், தானாபதிகள், கடற்தளபதிகள் மற்றும் கன்னைத் தளபதிகள், வைத்தியர்கள் மற்றும் ஏனைய தொழில்சார் நிபுணர்களையும் உருவாக்கியுள்ளது. முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் பொது நிர்வாக முதுமாணிப் பட்டக் கற்கைநெறியின் மூலம் இக்கற்கையைத் தொடர்பவர்கள் தாம் பெற்றுக்கொண்ட ஏராளமான அறிவு, திறன்கள் மற்றும் நம்பிக்கை, பொதுத் துறையில் ஏனையோரையும், சகபாடிகளையும் விஞ்சி,உயர் பதவிகளை வகிப்பதற்கு பெரிதும் அவர்களுக்கு இக்கற்கை துணைபுரிந்துள்ளது. வேறு வகையில் குறிப்பிடுவதானால், முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் பொது நிர்வாக முதுமாணிப் பட்டக் கற்கைநெறியானது அதன் கற்கைநறி பங்காற்றுனர்களுக்கு தனித்துவமான திறன்களை வழங்குகிறது.

அரச துறையின் வளர்ந்து வரும் தேவைகளுக்கேற்ப அவ்வப்போது மாற்றியமைக்கப்படும் பாடத்திட்டமானது, அனைத்துப் பங்குதாரர்களின் பெறுமதியான அகவறிவுகள் மற்றும் உள்ளறிவுகளை அடிப்படையாகக் கொண்டு கலந்தாலோசித்து வடிவமைக்கப்பட்டுள்ளது. எனவே, அறிவு, ஒரு குறிப்பிட்ட சூழலுக்கு அறிவைப் பயன்படுத்துதல், திறன் மேம்பாடு, மற்றும் அரச துறையில் உள்ள சவால்களை சமாளிக்கும் திறன் ஆகியவை இக்கற்கைநெறி மூலம் வழங்கப்படுகின்றன. அத்துடன் இவை உண்மையான வாழ்க்கைச் சூழ்நிலைகள் மற்றும் உதாரணங்கள் மூலம் வலுப்படுத்தப்பட்டு, வெவ்வேறு சூழ்நிலைகளின் கீழ் தகவல் அறிந்து, பகுத்தறிவுமிக்க முடிவுகளை எடுப்பதற்கு உதவுகின்றன.
‘

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் பொது நிர்வாக முதுமாணிப் பட்டம் பட்டதாரிகள் பின்வருவனவற்றைச் ஆற்றக்கூடியவர்களாக இருப்பர்:
அ. உள்நாட்டு மட்டத்திலும் உலகளாவிய மட்டத்திலும் முக்கிய அறிவு, திறன்கள் மற்றும் மனப்பாங்குகளை அங்கீகரிப்பதுடன், அரசாங்க நிர்வாகத் துறையில் உள்ள தற்போதைய விடயங்கள் பற்றிய ஒரு விமர்சன ரீதியான விழிப்புணர்வை வெளிப்படுத்தக்கூடியவர்களாக இருப்பர்.

ஆ. விமர்சன சிந்தனை, முறையான மற்றும் ஆக்கபூர்வமான பகுப்பாய்வு மற்றும் பொருத்தமான நுட்பங்களைப் பயன்படுத்தி, அரசாங்க நிர்வாகம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதில் சரியான தீர்வுகளை வழங்கக்கூடியவர்களாக இருப்பர்.
இ. தொடர்பாடல் மற்றும் குழுப் பங்களிப்பு மூலம் சம்பந்தப்பட்ட அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களை அணுகி மேற்கொள்ளப்படும் தீர்வுகளைத் துறைசார் மற்றும் துறைசாராத குழுக்களுக்குத் தெளிவாகத் தெரிவித்தல்.
ஈ. பொருளாதார, சுற்றாடல் கரிசனைகள் மற்றும் அரசாங்க நிர்வாகத்தின் மனிதாபிமான அம்சங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து, ஒரு சிந்தனாவாற்றல் மிகு தலைமைத்துவத்துடன் பிரச்சினைகளைச் சமாளிப்பதிலும் தீர்ப்பதிலும் சுய வழிப்படுத்தல் மற்றும் தனித்தன்மையை வெளிப்படுத்துதல்.
உ. அரசாங்க நிர்வாகப் பணிகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்தும்போது முடிவுகள் எடுக்கப்படும்போது விழுமியங்கள் குறித்து உணர்வுபூர்வமாக இருப்பதுடன், தொழில்சார்ந்த தன்மை, நேர்மை மற்றும் நெறிமுறைகளை வலுப்படுத்துதல்.

**கல்வி முகாமைத்துவத்தில் பொது நிர்வாக முதுமாணிப் பட்டம் (MPA-EM)**

கல்வி முகாமைத்துவத்தில் பொது நிர்வாக முதுமாணிப் பட்டக் கற்கைநெறியானது (MPA-EM), எமது பாடசாலை அதிபர்கள், கல்வியாளர்கள் மற்றும் கல்வி நிர்வாகிகளின் விரிவான அறிவுத் தேவைகளுக்கான ஒரு தேவை மதிப்பீட்டின் அடிப்படையில் அமைந்துள்ளது. உண்மையில், முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் கல்வி முகாமைத்துவத்தில் பொது நிர்வாக முதுமாணிப் பட்டக் கற்கைநெறியானது (MPA-EM), பாடசாலை அதிபர்கள், கல்வியாளர்கள் மற்றும் கல்வி நிர்வாகிகளைத் திறமையான நிபுணர்களாக மாற்றுவதன் மூலம் விரும்பிய மாற்றத்தைக் கொண்டுவருவதில் கவனம் செலுத்துகிறது. இம்மாற்றத்தின் நேரடியான மற்றும் மறைமுகமான தாக்கம் நாட்டிற்கு மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.
கல்வி முகாமைத்துவத்தில் பொது நிர்வாக முதுமாணிப் பட்டக் கற்கைநெறியின் கற்றல் இலக்குகள்:

அ. உள்நாட்டு மட்டத்திலும் உலகளாவிய மட்டத்திலும் முக்கிய அறிவு, திறன்கள் மற்றும் மனப்பாங்குகளை அங்கீகரிப்பதுடன், கல்வி முகாமைத்துவத்தில் உள்ள கோட்பாட்டு அறிவு மற்றும் தற்போதைய விடயங்கள் பற்றிய ஒரு முழுமையான புரிதல் மற்றும் விமர்சன விழிப்புணர்வை வெளிப்படுத்துதல், அத்துடன் தொழில்சார் நடைமுறைக்கு பொருத்தமான நுட்பங்களைப் பிரயோகிக்கும் ஆற்றலைப் பெறுதல்.
ஆ. விமர்சன மற்றும் தர்க்கரீதியான சிந்தனை மற்றும் பகுப்பாய்வுடன் சிந்தித்து, கல்வி முகாமைத்துவத்தில் உள்ள சிக்கலான விடயங்களை முறையாகவும் ஆக்கபூர்வமாகவும் கையாளும் ஆற்றலைப் பெற்று, அத்தகைய விடயங்களைத் தீர்க்கவும், கல்வி அமைப்பை மேலும் மேம்படுத்தவும் தேவையான பணிகளை தொழில்சார் மட்டத்தில் திட்டமிட்டுச் செயற்படுத்துதல்.
இ. தொடர்பாடல் மற்றும் குழுப் பங்களிப்பு மூலம், உள்நாட்டு மட்டத்திலும் உலகளாவிய மட்டத்திலும் சம்பந்தப்பட்ட அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களை சென்றடைதல், உறவுகளைப் பேணுதல், மற்றும் கல்வி முகாமைத்துவம் தொடர்பான முடிவுகளை மற்றவர்களுக்குத் தெளிவாகத் தெரிவித்தல்.
ஈ. கல்வி முகாமைத்துவத் துறையில் உள்ள பொருளாதார, சுற்றாடல் கரிசனைகள் மற்றும் மனிதாபிமான அம்சங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து, ஒரு ஒரு சிந்தனாவாற்றல் மிகு தலைமைத்துவத்துடன் பிரச்சினைகளைச் சமாளிப்பதிலும் தீர்ப்பதிலும் சுய-திசைப்படுத்தல் மற்றும் தனித்தன்மையை வெளிப்படுத்துதல், அத்துடன் சரியான தீர்ப்புகளை வழங்குதல்.

உ. அனைத்துச் செயற்பாடுகள் மற்றும் முடிவெடுக்கும்போது நேர்மை மற்றும் நெறிமுறைகளை வலுப்படுத்துவதுடன், இத்தகைய விழுமியங்களை அடுத்த தலைமுறைக்குக் கடத்துவது குறித்து உணர்வுபூர்வமாக இருத்தல்.

**நிறைவேற்று வியாபார நிர்வாக முதுமாணிப் பட்டம் (EMBA)**

ஒரு வருட காலத்தைக் கொண்ட நிறைவேற்று வியாபார நிர்வாக முதுமாணிப் பட்டக் கற்கைநெறியானது (EMBA), செயலமர்வுகள், ஆய்வுச் சிக்கல்கள், கலந்துரையாடல்கள், காணொளி விளக்கக்காட்சிகள் மற்றும் ஏனைய கற்பித்தல் முறைமைகள் மூலம் கற்கைநெறியில் பங்குகொள்பவர்களுக்கு அறிவை வழங்குவதில் முக்கிய கவனம் செலுத்துகிறது. அனைத்து விரிவுரைகளும் உள்நாட்டு மற்றும் உலகளாவிய தொழில் துறை அனுபவத்தைக் கொண்ட தகுதிவாய்ந்த நிபுணர்களால் நடத்தப்படுகின்றன. வழங்கப்படும் பயிற்சிகள அவசியமான திறன்களை விருத்திசெய்கின்றன, மேலும் வழங்கப்பட்ட சூழ்நிலைகளுக்கேற்ற அறிவையும், அறிவின் பயன்பாட்டையும் பரீட்சைகள் சோதிக்கின்றன. இறுதி செயற்றிட்டம், ஒரு செயல்திறன் களவெளியை சரியாக அடையாளம் காண்பதுடன், அதனை தொழில்ரீதியாகத் தீர்ப்பதற்கும் கற்கைநெறி பங்குகொள்பவர்களுக்கு வழிகாட்டுகின்றது.

இவற்றிற்கு மேலதிகமாக, முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் நிறைவேற்று வியாபார நிர்வாக முதுமாணிப் பட்டக் கற்கைநெறியானது (EMBA), கற்கைநெறியில் பங்குகொள்பவர்களின் தொழிற் பாதையை நிறுவனத்தின் பணிப்பாளர் சபை கற்கைக் களத்திலும் அதற்கு அப்பாலும் மாற்றியமைக்கிறது. ஓர் உலகளாவிய நிறுவனத்தை நிர்வகிக்கும் தன்மையுடன் உலகெங்கிலும் உள்ள ஏனைய குழுக்களுடன் இணையவழி மூலமான போட்டித் தன்மையை எதிர்கொள்ளும் வகையில், முகாமைத்துவத்தில் ஒருங்கிணைந்த இக்கற்கைநெறி ஒரு "முக்கிய" கற்கைநெறியாக அவர்களுக்குத் துணைபுரிகின்றது. நிறுவன வருகைகளுடன் கூடிய வெளிநாட்டு கல்விச் சுற்றுப்பயணம், கற்கைநெறிக்கு மேலதிக பெறுமானத்தையும் ஆழத்தையும் ஈட்டித்தருகின்றது. இந்தக் கூறானது மிகவும் அவசியமான ஊடாட்டத்தை வழங்குவதுடன், பெறப்பட்ட அகவறிவுகள் நமது முறைமைகளை உலகளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படும் சிறந்த நடைமுறைகளுடன் ஒப்பிடுவதற்கும் கைதேர்ந்த முறையில் உதவுகிறது.

2016 ஆம் ஆண்டு நிறைவேற்று வியாபார நிர்வாக முதுமாணிப் பட்டக் கற்கைநெறி (EMBA) அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து, எமது கற்கைநெறி பங்குபற்றுநர்கள் எவ்வாறு நிறுவன உலகில் உச்ச பதவிகளை அடைந்து, இக்கற்கைநெறியை வெற்றிகரமாக நிறைவுசெய்ததன் மூலம் தங்கள் கனவுகளை நிறைவேற்றுகிறார்கள் என்பதை முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம் பெருமையுடன் கண்டுள்ளது.

நிறைவேற்று வியாபார நிர்வாக முதுமாணிப் பட்டக் கற்கைநெறியின் கற்றல் இலக்குகள்:

அ. உள்நாட்டு மட்டத்திலும் உலகளாவிய மட்டத்திலும் முக்கிய அறிவு, திறன்கள் மற்றும் மனப்பாங்குகளை அங்கீகரிப்பதுடன், முகாமைத்துவத்தில் உள்ள கோட்பாட்டு அறிவு மற்றும் தற்போதைய விடயங்கள் பற்றிய ஒரு முழுமையான புரிதல் மற்றும் விமர்சன விழிப்புணர்வை வெளிப்படுத்துதல், அத்துடன் தொழில்சார் நடைமுறைக்கு பொருத்தமான நுட்பங்களைப் பிரயோகிக்கும் ஆற்றலைப் பெறுதல்.
ஆ. விமர்சன மற்றும் தர்க்கரீதியான சிந்தனை மற்றும் பகுப்பாய்வுடன் சிந்தித்து, சிக்கலான விடயங்களை முறையாகவும் ஆக்கபூர்வமாகவும் கையாளும் ஆற்றலைப் பெற்று, தொழில்சார்

மட்டத்தில் பணிகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்துதல்.
இ. தொடர்பாடல் மற்றும் குழுப் பங்களிப்பு மூலம், உள்நாட்டு மட்டத்திலும் உலகளாவிய மட்டத்திலும் சம்பந்தப்பட்ட அரச மற்றும் தனியார் நிறுவனங்களை அணுகி, உறவுகளைப் பேணி சிக்கல்களுக்கான தீர்வுகளை மற்றவர்களுக்குத் தெளிவாகத் தெரிவித்தல்.
ஈ. வணிகச் செயற்பாடுகளின் பொருளாதார ரீதியான சுற்றாடல் ரீதியான கரிசனைகள் மற்றும் மனிதாபிமான அம்சங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து, ஒரு சிந்தனாவாற்றல் மிக்க தலைவராகப் பிரச்சினைகளைச் சமாளிப்பதிலும் தீர்ப்பதிலும் சுயதிசைப்படுத்தல் மற்றும் தனித்தன்மையை வெளிப்படுத்துதல், அத்துடன் சரியான தீர்ப்புகளை வழங்குதல்.
உ. அனைத்து மட்டங்களிலும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் போது விழுமியங்கள் குறித்து உணர்வுபூர்வமாக இருப்பதுடன், தொழில்சார்ந்த தன்மை, நேர்மை மற்றும் நெறிமுறைகளை வலுப்படுத்துதல்.

**முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு டிப்ளோமா (PGDip)**

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு டிப்ளோமா (PGDip) கற்கைநெறியானது, முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் கற்கைநெறிகளின் கற்கை வழங்கல் திட்டத்தின் ஒரு புதிய அங்கமாக இணைக்கப்பட்டுள்ளது. அதன் முக்கிய நோக்கம் நிறைவேற்று அதிகாரிகளின் ஏற்கனவே உள்ள தமது திறன்களை மேம்படுத்துவதாகும். இந்த கற்கைநெறியின் கவனம், நிறைவேற்று அதிகாரிகளை / முகாமையாளர்களை, அவர்கள் தமது துறைகளில் சிறந்த பங்காற்றுபவர்களாக மாற்றுவதாகும். இந்த முயற்சியை நோக்கி, தரமான மற்றும் பொருத்தமான முழுமையான கல்வியை வழங்குவதே, அவர்களை உயர்ந்த நிலைக்கு உயர்த்துவதற்கான சிறந்த அணுகுமுறை என்று நாம் உறுதியாக நம்புகிறோம்.
இவ்வாறு, முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு டிப்ளோமா கற்கைநெறியானது, வளர்ந்து வரும் வணிகத் தேவைகள் மற்றும் சூழ்நிலைகளை கருத்திற்கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இது தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனத்தில் உள்ள ஒரு பௌதிக கற்றல் சூழ்நிலை மூலம் செயல்திறன் கற்றலை எளிதாக்குகிறது. இந்த ஒரு வருட கற்கைநெறிக்குள், நிபுணத்துவ விரிவுரையாளர் குழாமுடன் மெய்நிகர் மற்றும் பௌதிக கற்றல் வழிமுறைகளை உறுதிசெய்யும் அதே வேளையில், கற்றலை எளிதாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இறுதியில், பங்குபற்றுநர்களை புதிய திறன்களுடன் தயார்படுத்த அனைத்து சமகால விடயங்களும் கலந்துரையாடப்படுகின்றன. புதிய சிக்கல்களைக் கையாள புதிய கருவிகள் தேவை என்பது தெளிவாகிறது.

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு டிப்ளோமா கற்கைநெறியின் கற்றல் இலக்குகள்:

அ. முகாமைத்துவத்தில் உள்ள கோட்பாட்டு அறிவு பற்றிய ஒரு தெளிவான புரிதலை வெளிப்படுத்துதல்.
ஆ. முகாமைத்துவத்தில் உள்ள தற்போதைய விடயங்கள் பற்றிய ஒரு விமர்சன விழிப்புணர்வை வெளிப்படுத்துதல்.
இ. முகாமைத்துவத்திற்கு பொருத்தமான நுட்பங்களைப் பிரயோகித்தல்.
ஈ. முகாமைத்துவத்தில் உள்ள சிக்கலான விடயங்களை முறையாகவும் ஆக்கபூர்வமாகவும் கையாளும் ஆற்றலைப் பெற்று, சரியான தீர்ப்புகளை வழங்குதல் மற்றும் முடிவுகளை மற்றவர்களுக்குத் தெளிவாகத் தெரிவித்தல்.
உ. முகாமைத்துவப் பிரச்சினைகளைச் சமாளிப்பதிலும், தீர்ப்பதிலும் சுய வழிப்படுத்தல் மற்றும் தனித்தன்மையை வெளிப்படுத்துதல், அத்துடன் பணிகளைத் தொழில்ரீதியாகவும் சுயாதீனமாகவும் திட்டமிட்டுச் செயற்படுத்துதல்.

## நிறைவேற்று நிருவாக விருத்திக் கற்கைகள் (EDP)

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம் குணநலன் மற்றும் ஆற்றல் கொண்ட சிந்தனைத் தலைவர்களை உருவாக்குவதில் முன்னணியில் உள்ளது. கடந்த தசாப்தத்தில் வளர்ந்து அபிவிருத்தி செய்யப்பட்ட நிறுவனத்தின் நிறைவேற்று நிருவாக விருத்திக் கற்கைகள் (EDP), மிகவும் நுட்பமானவை மற்றும் உள்ளடக்கம் மற்றும் நடத்தையில் நிகரற்றவை. அவை தற்போதைய தொழில் துறைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் சிறப்பாகத் தனிப்பயனாக்கப்பட்டுள்ளன. அவை தனியார் / அரச சமூகத்தை சென்றடைவதற்குத் தேவையான அத்தியாவசியமான தொடர்பை வழங்குகின்றன. இவை முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் சிறந்த கட்டமைப்பின் முக்கிய தூண்களில் ஒன்றான, அதாவது, பங்காண்மைகளை பலப்படுத்துகின்றன. நிறைவேற்று நிருவாக விருத்திக் கற்கைகள், நிறுவன முகாமைத்துவப் பயன்பாடு, முறைமைகள் மற்றும் நடைமுறைகளை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டு, நிறுவனப் படிநிலையில் வெவ்வேறு மட்டங்களில் செயற்படும் வெவ்வேறு துறைகளின் நிறைவேற்று அதிகாரிகளுக்கு பொருத்தமான பயிற்சி மற்றும் வளர்ச்சியை வழங்குகிறது. இது பௌதிக மற்றும் மெய்நிகர் ஆகிய இரு முறைமைகள் ஊடாகவும் வழங்கப்படுகிறது.

கற்றல் இலக்கு சார்ந்த அணுகுமுறைத் துறையில் முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம் பொறுப்புடைமையுடன் கூடிய பிரதிபலனை அளிக்கிறது. பங்காண்மைகளை நிறுவும் நிறுவனங்களுக்காக, முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தினால் நிறுவப்பட்ட நடைமுறை நிறைவேற்று நிருவாக விருத்திக் கற்கைகளைச் செயற்படுத்துவதற்கும், ஒருங்கிணைப்பதற்குமான அதிகரித்து வரும் தேவை காணப்படுகிறது. பயிற்சி தொடர்பான வெற்றி, நிறுவனங்களுக்கான உண்மையான பெறுமானத்தை உருவாக்கும் முதலீடுகளாக இருக்கும் விளைவுகளை நேர்மறையாக உருவாக்குகிறது என்பதைக் காட்டுகிறது. நிறைவேற்று நிருவாக விருத்திக் கற்கைகளில் (EDP) தொடர்ச்சியான கற்றல் ஈடுபாட்டுத் தளமானது, பங்கேற்பாளர்களை நிறுவனம் சார்ந்த சவால்கள், அறிவு மற்றும் பல்வேறு வேலைப் பணிகள் / செயற்றிட்டங்களுக்கு உட்படுத்துவதன் மூலம் கற்றலின் செயல்திறனுடன் நேர்மறையான தொடர்பை வெளிப்படுத்தியது. கற்றல் மற்றும் வளர்ச்சி உறுதியாக குறிக்கோள் சார்ந்ததாகவும், விளைவு சார்ந்ததாகவும் இருக்க வேண்டும். எனவே, பணியாளர்களுக்கு வழங்கப்படும் நிறைவேற்று நிருவாக விருத்திக் கற்கைகள் (EDP) பொறுப்புக்கூறத்தக்கதாக இருப்பதை உறுதி செய்வதற்காக, பங்கேற்பாளர்களுக்கு திறன்களைப் பெறுவதற்கும் பிரயோகிப்பதற்கும் ஒரு கற்றல் பாதை கிடைக்கப்பெறுவதை நிறுவனங்கள் உறுதி செய்ய வேண்டும். எனவே, புதிய முன்முயற்சியும், தற்போதைய நிறைவேற்று நிருவாக விருத்திக் கற்கைகளும், முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம் (PIM) தனது அனுபவக் கற்றல் மற்றும் முகாமைத்துவத் திறமை மூலம், கற்றல் இலக்கு சார்ந்த அணுகுமுறைத் துறையில் பொறுப்பான விளைவுகளை உருவாக்குவதற்கான மேலதிக முனைவை மேற்கொண்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துகின்றன.

## தொழில்சார் திறன் விருத்திக் கற்கைகள்

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம் தனது தொழில்சார் திறன் விருத்திக் கற்கைகள் பிரிவின் மூலம், இலங்கையின் வணிகத்துறை சார்ந்த நிறைவேற்று அதிகாரிகள், முகாமையாளர்கள் மற்றும் ஏனைய தொழில்சார் வல்லுநர்களின் ஆற்றல்களை மேம்படுத்தும் நோக்குடன், குறுகிய கால, துறைசார்ந்த கற்கைநெறிகளை வழங்கி வருகின்றது. ஏதிர்கால சவால்களையும், வாய்ப்புக்களையும் எதிர்கொள்ள இன்றே உங்களைத் தயார்படுத்தும் வகையில், எமது கற்கைநெறித் தொகுப்பை நாம் தொடர்ச்சியாக மேம்படுத்தி வருகிறோம்.

# அனைத்து வசதிகளும் கொண்ட ஒரு நிறுவகம் (A Holistic Institute)

## சர்வதேச ஒத்துழைப்பு

முகாமைத்துவப் பட்டப்பின்படிப்பு நிறுவகம் (PIM) வெளிநாடுகளிலுள்ள கீர்த்தி மிக்க கல்வி நிறுவனங்களுடன் தொடர்புகளை விருத்தி செய்வதற்கு அதி முன்னுரிமை வழங்குகின்றது, நிபுணத்துவத்தை விருத்தி செய்வதிலுள்ள ஆர்வமும் அனைத்துலக சூழலில் ஒழுக்கமான வளர்ச்சியை ஊக்குவிப்பதும் ஒத்துழைப்பிற்கான தேடலின் உந்து சக்தியாகும். உலகெங்குமுள்ள உயர் கல்வி நிலையங்களுடன் ஒத்துழைப்பதே நிறுவகத்தின் கொள்கையாகும். குறிப்பாக, ஆசியா-பசுபிக் பிராந்தியத்திலுள்ள சிறந்த நிலையங்களுடனும், பிராந்திய ஒத்துழைப்பிற்கான தெற்காசிய சங்கம் (SAARC) இந்திய முகாமைத்துவ நிறுவகம் (IIMS) மற்றும் வேறெங்குமுள்ள பல்கலைக்கழகங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள PIM எதிப்பார்க்கின்றது. PIM கன்பராவிலுள்ள நியூ சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகம் (UNSW) மற்றும் ஸ்கூல் ஒப் பிஸ்னஸ் SBU ஆகியவற்றுடன் ஆராய்ச்சி ஒத்துழைப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. இவ்விரு நிறுவனங்களும் வர்த்தகம், பொருளாதாரம், முகாமைத்துவம், மற்றும் பொதுக் கொள்கை என்பனவுத்தில் ஆய்வு நடவடிக்கைகளில் ஒத்துழைப்பு வழங்குகின்றது. உலகெங்குமுள்ள வியாபார நிகழ்ச்சித் நிகழ்ச்சித் திட்டங்களில் 5% தை மாத்திரமே வியாபாரப் பாடசாலைகள் உயர்கல்லூரிகளுக்கான சங்கத்தினால் (Association to Advance Collegiate Schools of Business) (AACSB) யினால் அங்கீகரிக்கப் பட்டிருக்கும்போது SBU மாத்திரமே AACSB யினால் அங்கீகரிக்கப்பட்ட அவுஸ்திரேலிய தலைநகர் ஆட்புல பிராந்தியத்தில் (Australian Capital Territory Region) உள்ள வர்த்தகப் பாடலைகளுள் அங்கீகரிக்கப்பட்டதாகும். இது SBU பின்வரும் துறைகளில் அதாவது, மேலாண்மை மற்றும் மேலாண்மை மற்றும் பொதுத் துறைம் கணக்கீடு, பொருளியல் அளவியல் மற்றும் பொருளாதாரப் பகுப்பாய்வு, மனிதவள மேலாண்மை, தொழில்முனைவோர் மற்றும் கண்டுபிடிப்பாளர்கள், சரக்கு மேலாண்மை மற்றும் பெரும் தரவு ஆய்வு, தலைமைத்துவம், மற்றும் மேலாண்மை மாற்றம், பொதுத்துறை முகாமைத்துவம் மற்றும் முகாமைத்துவம் போன்ற துறைகளில் ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

ENSW என்பது எண்மர் குழுவின் நிறுவனர் உறுப்பினராகும். என்பதுடன் அவுஸ்திரேலியாவின் முதன்மைத் தீவிர - ஆரய்ச்சி பல்கலைக்கழகங்களில் ஒன்றாகும்.

2020 QS உலக பல்கலைக்கழக தர வரிசைப்படுத்தலில் இது 43 ம் இடத்தைப் பெற்றுள்ளது. 2012ல் வெளியிடப்பட்ட "அவுஸ்திரேலியாவில் ஆராய்ச்சிச் சிறப்பு" அறிக்கையில் UNSW அங்கீகாரம் பெற்றது. அந்த அறிக்கை பல்வேறு பரந்த ஆராய்ச்சித் துறைகளில் பல்கலைக்கழகத்தின் செயல்திறனை மதிப்பீடு செய்து, அனைத்துத் துறைகளிலும் "உலகத் தரத்திற்குச் சமமாக, அதிகமாக அல்லது மிகவும் அதிகமாக" உள்ளதாக முடிவுசெய்தது.

UNSW வின் - ஆராய்ச்சி வலுப்புள்ளிகள் பல்வேறு மற்றும் பன்முகத்தன்மை வாய்ந்த பல கல்வித்துறைகளில் பரவியுள்ளன. UNSW மற்றும் பட்டப்பின்படிப்பு முகாமைத்துவ நிறுவகம்

ஆகிய இருதரப்பினரும் பொது விருப்பத்திற்குரிய துறைகளில் கூட்டுக் கல்வி ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொள்கின்றன, கல்வியாளர்களைப் பரிமாறிக்கொள்கின்றன. அத்துடன் பட்டப்பின்படிப்பு முகாமைத்துவ நிறுவகம் முனைவர் பட்ட நிகழ்ச்சித்திட்டத்தினை ஊக்குவிக்கின்றன.

PIM ஆனது, UNSW வில் PhD அமர்வை (நுழைவை)ப் பெற்றுக்கொள்ள ஆராய்ச்சி மாணவர்களுக்கு வசதியேற்படுத்துகின்றது. UNSW பீடத்தின் பல அங்கத்தவர்கள் PhD பரீட்சகர்களாகவும் பட்டப்பின்படிப்பு முகாமைத்துவ நிறுவகத்தின் முன்னணி ஆய்வு இதழாகிய இலங்கை முகாமைத்துவச் சஞ்சிகையின் (SLJM) பதிப்பாசிரியர் ஆலோசனைக் குழுமத்தின் அங்கத்தவர்களாகவும் சேவையாற்றுகின்றனர். இது மற்றுமொரு தனித்துவமான பெறுமதி சேர்ப்பு என்பதுடன் PIM இன் கற்கும் பங்காளர்களுக்கு வழங்கும் ஒரு சந்தர்ப்பமும் ஆகும். ஆகையால், இந்த அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளுமாறு அதன் கற்கும் பங்காளர்களை சிரத்தையுடன் கேட்டு ˙ கொள்கின்றது.

# ஒருவருக்கு ஒருவர் வழிகாட்டுதல்

ஒருவருக்கு ஒருவர் வழிகாட்டுதல் அமர்வுகளின் ஊடாக, கற்கும் பங்காளர்கள், தனிப்பட்ட ரீதியிலான வழிகாட்டுதலைப் பெற்றுக்கொள்கின்றனர். அத்துடன் கல்விச் சவால்களைக் கடந்து செல்வதற்கும் இலக்குகளை அடைவதற்கும் அவர்களின் ஆற்றலை அதிகரித்தும் கொள்வதற்கும் ஆதரவளிக்கப்படுகின்றனர். எங்களின் திறன் மேம்பாட்டுப் பயிற்சித்திட்டம் கற்கும் பங்காளர்கள் கல்வியிலும் அதற்கப்பாலும் நன்கு வசதியளிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை உறுதி செய்ய தங்கள் நேர முகாமைத்துவம், கற்கை நுட்பங்கள் மற்றும் மன அழுத்த மேலாண்மை போன்ற அவசியமான திறன்களை அபிவிருத்தி செய்வதற்கு வலுவூட்டுகின்றது. இவற்றிற்கும் மேலாக, கற்கும் பங்காளர்கள் அவர்களின் பட்டப்பின்படிப்பு சவால்களை வெற்றிகொள்ளவும், அவர்களின் கல்வி மற்றும் உயர் தொழில்வாண்மை இலக்குகளை அடைந்து கொள்வதற்கும் கல்வி அறிவுறுத்தல்கள், தொழில் வழிகாட்டுதல்கள் மற்றும் நல மூலங்கள் உட்பட்ட பரந்த அளவிலான உதவிச்சேவைகளை வழங்குகின்றது.

# முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் பிறப்பிடம் (PIM. Genesis)

PIM இன் குறிக்கோளுடன் இசைந்துபோகும் நோக்கத்துடன், அதன் வணிக அடுக்ககமான "Genesis" ஒரு

இன்றியமையாத மற்றும் முக்கியமான பாகத்தை வகிக்கின்றது. The Genesis கல்வி மற்றும் தொழிற்துறைத் திறமை ஆகிய இரண்டையும் கொண்ட நிபுணர்களின் குழுவுடன், சமூகத்தின் குறிப்பிட்ட துறைகளில் படிப்படியான தொழில்முனைவு வளர்ச்சியை ஏற்படுத்த முனைகின்றது. ஆரம்பத்தில் MBA கற்கும் பாங்காளர்களுக்கு இறுதித் திட்டமாக "தொழில் முனைப்புத் திறன் ஆய்வுத் திட்டத்தை" த் தேர்ந்தெடுப்பவர்காளுக்கு வழிகாட்டுவதே Genesis இன் முதன்மை

நோக்கமாக இருந்தது. இருப்பினும், தற்போது Genesis அதன் பௌதிக எல்லைகளைத் தாண்டி நாடு முழுவதுமுள்ள தொடக்கநிலைத் தொழில்முனைவோரின் திறன்களை உயர்த்தும் ஒரு வினையூக்கியாகத் தனது சேவைகளை விரிவுபடுத்தி வருகின்றது.

தொழில்முனைவோர்களின் வளர்ச்சி என்ற இந்த நோக்கத்துடன், Genesis மேலும் பல செயற்பாடுகனளத் திட்டமிட்டுள்ளது, அவற்றில், கற்கும் பாங்காளர்களிடமிருந்து கிடைக்கும் வணிக யோசனைகளைத் திட்ட முன்மொழிவுகள் வடிவில் தேர்ந்தெடுத்தல், முன்மொழிவுகளை மேம்படுத்துவதில் உதவி செய்தல், முன்மொழிவுகளை சாத்தியாமான தொழில் முனைவுகளாக மாற்றுவதற்கான பயிற்சி அளித்தல், திறமையான தொடக்க நிறுவனங்கள் வளர்வதை ஊக்குவித்தல், ஆரம்பத் தடைகளைக் கடந்து, தொழில்முனைவுப் பயணத்தில் நிலையாக முன்னேறுவதற்கு வழிகாட்டுதல் என்பன உள்ளடங்கும். மேலும், Genesis தமது கற்றல் பங்காளர்கள், தமது பட்டப்பின்படிப்புக்களில் பொற்றுக்கொண்ட திறன்கள் மற்றும் அறிவை அவர்களின் வணிக முகாமைத்துவத்தில் திறம்படப் பிரயோகிப்பதை உறுதி செய்கின்றது. இதன் மூலம் எதிர்பார்க்கப்படும் முடிவுகளை அடைவதற்கு அது உதவுகின்றது.
PIM இன் கற்றல் பங்காளர்கள் எனும் வரம்பைத் தாண்டிச் செயற்படும் Genesis இன் இலக்கு புதிய தொழில்முனைவோர்களை ஆயத்தப்படுத்துவதற்கான ஒரு உந்து சக்தியாக மாறுவதாகும். அவர்கள் செயற்படுத்தும் சிக்கலான வணிகச் சூழ்நிலைகளைச் சமாளிக்கும் வகையில் அத்தியவசிமான திறமைகள் மற்றும் சரியான சிந்தனை முறையை வளர்க்கும் ஒரு முக்கியமான உந்து சந்தியாக இது விளங்குகின்றது.
இந்தச் செயற்பாட்டில், Gensis ஒரு பலமான மையமாகச் செயற்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட தொடங்க நிறுவனங்களை, - வாங்குபவர்கள், பிற கல்வி நிறுவனங்கள், வணிகச் சங்கங்கள், கட்டுப்பாட்டு அதிகாரிகள் மற்றும் சாதன வழங்குனர்கள் ஆகியோருடன், PIM இன் பலம்வாய்ந்த முன்னாள் மாணவரகள் வலையமைப்பின் மூலம் இணைக்கின்றது. மேலும், இந்த ஈடுபாட்டுடன் இணைந்து, வழிகாட்டல் அமர்வுகள், தனிப்பட்ட கலந்துரையாடல்கள், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் விடய ஆய்வு விளக்கக்காட்சிகள் ஆகியவற்றைக் கொண்ட தனித்துவமான வடிவமைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் வழங்கப்படுகின்றன.

இறுதியில் இவை அனைத்தும் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பங்களிப்புச் செய்யும்.

# பேராசிரியர் உதித்த லியனகே ஞாபகார்த்த நூலகம்

இலங்கையிலுள்ள மிகவும் விசாலமான முகாமைத்துவ நூலகங்களில் 18000 க்கும் மேற்பட்ட புத்தகங்களுக்கு அணுக்கத்தை வழங்கும் PIM நூலகமும் ஒன்று. நிறுவகத்தின் கற்கும் பங்காளர்களுக்கும் உயர்தொழில் வாண்மையாளர்களுக்கும் கல்வியாளர்களுக்கும் (பீடத்திற்கும்) பிரதான தகவல் மூலமாக இது செயலாற்றுகின்றது. எப்போதும் மேம்படுத்தும் சேவையை வழங்கும் நோக்கத்துடன் நாலகத்தின் அறிவுத்தளம் அணுக்கம் மற்றும் வசதிகள் எனபன தொடர்ச்சியாக செழுமைப்படுத்தப்பட்டுள்ளதுடன் விரிவுபடுத்தப்பட்டும் உள்ளன. PIM கட்டடத்தின் முதலாம் மாடியில் PIM நூலகம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நாலகத்தில் WIFI வந்தியுடன் கூடிய தனிப்பட்ட படிப்பு மேசைகள் தொடக்கம் குழு படிப்பு மேசைகள் உள்ளடங்கியதான கற்கும் பங்காளர்கள் 60 பேருக்கான இட வசதிகள் இந்த நாலகத்தில் கிடைக்கக்கூடியதாகவுள்ளது. Ebscohost and Emarald ஆகிய இரு தரவுத்தளங்கள். முழுவிரிவான

கட்டுரைகளுக்கு அணுக்கத்தை வழங்குகின்றன. PIM நூலகமானது, பியசன் வெளியீடுகள், SAGE வெளியீடுகள், டைலர் மற்றும் பிரான்சிஸ் வெளியீடுகள் போன்றவை உட்பட ஒரு தொகையான இலத்திரனியல் புத்தக (E-book) சேகரிப்புக்களுக்கும் அணுக்கத்தை வழங்குவதுடன் ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நிகழ்நிலை அணுக்கப்பட்டியலுக்கும் அணுக்கத்தை வழங்குகின்றது.

# பட்டப்பின்படிப்பு முகாமைத்துவ நிறுவக தகவல் தொழில் நுட்ப நிலையம்

PIM இல் கற்றல் நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த தகவல் தொழில் நுட்பத்தின் உரிய பயன்பாட்டிற்கு அதியுயர் முன்னுரிமை வழங்கப்படுகின்றது. PIM இன் செயல்திறன் மிக்க திறமையானதும் பயனுறுதி மிக்கதுமான நவீன கற்றல் இணையதளமான பிரஞ்ஞா (Prajna) உலகின் முதன்மையான பல்கலைக்கழகங்களின் கற்றல் முகாமைத்துவ முறைமைகளுக்கு ஒப்பானதாக உள்ளது.

இந்தத் தேவைப்பாட்டை நிறைவேற்றுவதில் PIM இன் தகவல்தொழில்நுட்ப நிலையமானது கற்கும் பங்காளர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் நிறுவகத்தின் நிர்வாகம் ஆகிய மூன்று தரப்பினர்களுடனும் நெருக்கமாக இணைந்து செயலாற்றுகின்றது. அவர்களின் அனைத்து தகவல் தொழில்நுட்பம் சார் முயற்சிகளிலும் வழிகாட்டுதல் மற்றும் ஆதரவை வழங்குகின்றது.

மூடில் (Moodle) மென் பொருளைப் பயன்படுத்தி கவனமாக வடிவமைக்கப்பட்ட ஒரு முன்னணி கற்றல் முகாமைத்துவ முறைமையான பிரஞ்ஞா (Prajna) கல்வியைத் தொழில்நுட்பத்துடன் தடங்களின்றி ஒருங்கிணைக்கும் ஒரு தளமாகும். (Prajna) பிரஞ்ஞா, தனித்துவமான மாணவர் அனுபவத்தின் முதுகெலும்பாகச் செயற்பட்டு, மாணவர்களின் கல்விப் பயணத்தை மேம்படுத்த பல்வேறு செயற்பாடுகளைத் தடங்களின்றி ஒருங்கிணைக்கின்றது.

மின்னணு கற்றல் வளங்கள் (Digital Learning resources): மின்னணு கற்றல் வளங்களின் நிறைவான களஞ்சியத்தினுள் மூழ்குங்கள். கற்பித்தல் ஸிலைடுகள் (slides) மற்றும் (e-books) எண்ணிம நூல்கள் முதல் பல்லூடக விளக்கக் காட்சிகள் வரை, எங்கள் கற்றல் முகாமைத்துவ முறைமை (LMS) கற்றல் வளங்கள் (meterials) எப்போது வேண்டுமானாலும், எங்கு வேண்டுமானாலும் அணுகக்கூடியதாக இருப்பதை உறுதி செய்கின்றது.

ஒன்லைன் வினாடி வினாக்கள் மற்றும் தேர்வுகள் (Online Quizzes and Exams): செயற்றிறனை எளிதாக மதிப்பீடு செய்தல். (Prajna) பிரஞ்ஞா ஊடாட்ட வினாடி வினாக்கள் மற்றும் காலக்கெடு தேர்வுகளை நடாத்துகின்றது. கருத்துரையை உடனடியாக வழங்குகின்றது. அத்துடன் முன்னேற்றத்தைக் கணிக்கும் வசதியையும் ஏற்படுத்துகின்றது.

கருந்தரங்குகள் : பிரஞ்ஞா (Prajna) சுறுசுறுப்பான ஒன்லைன் சமூகங்களை வளர்க்கின்றது. இது கேள்விகள் கேட்பதை, கருத்துக்களைப் பகிர்வதை அத்துடன் சகாக்கள் மற்றும் போதனாசிரியர்களுடன் ஒத்துழைப்பதை
இலகுவானதாகவும் வசதியானதாகவும் ஆக்கியுள்ளது. மெய்நிகர் வகுப்பறையானது கருத்துக்கள், அபிப்பிராயங்கள் மற்றும் அறிவுப் பரிமாற்றம் என்பவைற்றால் நிறைந்த சுறுசுறுப்பான பணிநிறைவு

அரங்கமாக உள்ளது.

நூாலகக் குறியிடு, முன்னேற்ற அறிக்கைகள், வருகைப் பதிவு மற்றும் பல: அடிப்படைச் செயற்பாடுகளைப் பார்க்கிலும் அதிகமாக (Prajna) பிரஞ்ஞா மாணவர்களின் கல்வி முன்னேற்ற அறிக்கைகள், நேரடி வகுப்பு வருகைக் கணக்கீடு மேலும் உணவகச் சாப்பாடுவரை முன் பதிவுசெய்ய உதவுகின்றது. இவை அனைத்தும் ஒரே இடத்தில் ஒருங்கிணைந்த வடிவமைப்பில் கிடைக்கின்றன.

பிரஞ்ஞா (Prajna) மாணவர்களுக்கு வசதியானதன்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் தனித்துவமான கவனிப்பு (தனிப்பயனாக்கம்) என்பவற்றை வழங்குகின்றது.

PIM இன் தகவல்தொழில்நுட்ப நிலையம் முகாமைத்துவத்தில் கற்கும் தொழில்நுட்ப பிரயோகத்தை வழங்குகின்றது. செயன்முறைப்பயிற்சி அமர்வுகள் மற்றும் இணையத்தள அலைச்சறுக்கு என்பவற்றை நடாத்துகின்றது. நிறுவகத்தில் LAN முறையைக் கட்டுப்படுத்துகன்றது. அத்தடன் உள்ளக தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய தேவைப்பாடுகளையும் கட்டுப்படுத்துகின்றது. இந்த நிலையத்தில் 80 நவீன பல்லூடக கணிணிகள் இணைக்கப்பட்டுள்ளன. இவை அண்மைக்கால முன்னணி மென்பொருட்கள் பிரயோகத்துடன் உயர்வேக இணையம்கொண்ட உள்நாட்டு வலைப்பின்னல் ஒன்றுடன், கம்பியில்லா உயர்வேக இணைய வலையமைப்பு ஒன்றுடனும் (WIFI) உயர்தர பல்லூடக படவீழ்த்தி ஒன்றுடன் DTS 6.1 ஒலி அமைப்பு முறை என்பவற்றுடன் தரவேற்றப்பட்டுள்ளன.

# தர உறுதிப்பாடு மற்றும் தாரதர அங்கீகாரம்

இலங்கையின் பல்கலைக்கழக முறைமையினுள் தர உறுதிப்பாட்டிற்கு மிகுந்த முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. அனைத்துப் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களிலும் முழுச்செயற்பாட்டுத் திறனுடன் ஒரு அகத்தர உறுதிப்பாட்டு முறைமையை நிறுவுவது கட்டாயமாகும்.
பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தேவைப்படுத்தும் விதமாக PIM தர உறுதிப்பாட்டுச் செயல்முறை, உள்ளக தர உறுதிப்பாட்டு நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்கும், மேம்படுத்துவதற்கும், வசதியரிப்பதற்கும் மற்றும் கண்காணிப்பதற்கும் வடிவமைக்கப்பட்டுள்ளது. PIM வழங்கும் கற்கை நிகழ்ச்சித்திட்டங்களின் அங்கீகாரத்தை அதிகரித்துக்கொள்வதற்கும் தர சான்றைப் பெற்றுக்கொள்லதற்கும் PIM உள்நாட்டு மற்றும் சர்வதேச தர அங்கீகார அமைப்புக்களுடனும் இணைந்து செயலாற்றுகின்றது.

PIM பல்கலைக்கழக மானிய ஆணைத்குழுவின் தர உறுதிப்பாடு மற்றும் தராதர அங்கீகாரப் பேரவை (QAAC) மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் தர உறுதிபாடு நிலையம் (IQAU) ஆகியாவற்றுடன் மட்டுமல்லாது சர்வதேச தர அங்கீகார அமைப்புக்களுடனும் இணைப்புக்களைக் கொண்டுள்ளது. மேலும் இது வெளிவாரி தர உறுதிப்பாட்டு மதிப்பீட்டிற்கான சுய மதிப்பீட்டு அறிக்கைகளைத் தயாரிப்பதோடு அனைத்து ஊழியர்களுக்கும் தர உறுதிப்பாடு குறித்த வழிகாட்டுதலை வழங்குகின்றது. அத்துடன் ஊழியர்களிடையே நல்ல நடைமுறைகளை பகிர்ந்து கொள்வதற்கும் வழி வகுக்கின்றது.

# சமகால கற்றல் சூழல்

PIM என்பது கற்கும் பங்காளர்களுக்கு அவர்களின் கல்வி முயற்சிகளுக்கு ஆதரவாக அதிசிறந்த கல்வி மையங்கள், டிஜிட்டல் உதவிக் கருவிகள் மற்றும் ஆராய்ச்சி வசதிகள் உள்ளிட்ட பல்வேறு வளங்கள் மற்றும். வசதிகளை வழங்கும் ஒரு நவீன நிறுவகமாகும். எங்கள் கற்கும் பாங்காளர்கள் தமது கல்வி மேம்பாட்டிற்கும் (தங்களின்) இலக்கை அடைவதற்கும் தேவையான கருவிகளையும் ஆதரவையும் நிகழ்நிலை வளங்களை அணுகுதல், குழு கற்கைகளில் பங்குபற்றுதல் அல்லது அனுபவம் வாய்ந்த வழிகாட்டுநர்களின் வழிகாட்டுதலைப் பெற்றுக்கொள்ளுதல், எதுவாயிருப்பினும் அணுக்கத்தைப் பெற்றுக் கொள்கின்றனர்.

# பட்டப்பின்படிப்பு முகாமைத்துவ நிறுவகத்தின் முன்னாள் மாணவர்கள்

எமது முன்னாள் மாணவர்களின் சாதனைகள் எமது MBA நிகழ்ச்சித் திட்டத்தின் ஆழமான தாக்கத்திற்குச் சான்றாக உள்ளன. வணிகம், கைத்தொழிற்துறை மற்றும் பரந்த சமூகத்தின் ஒவ்வொரு துறையிலும் அவர்கள் மும்முரமாகப் பங்களித்துக்கொண்டிருக்கின்றனர். அவர்களின் சாதனைகள் ஊக்கத்திற்கான கலங்கரை விளக்கமாக (வழிகாட்டியாகத்) திகழ்ந்து, எதிர்கால கற்றல் பாங்காளர்காரக்கு அவர்களின் வழிக்கு ஒளிவீசிக் கொண்டிருக்கின்றது. எங்களின் முன்னாள் மாணவர்கள் ஒவ்வொருவரும் தங்களின் கற்றலை பல்வேறு துறைகளின் தாக்கமுள்ள பங்களிப்புக்களாக மாற்றுவதன் மூலம் எங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய திறனை உருவகப்படுத்துகின்றார்கள். அவர்களின் வெற்றிகள் எங்களின் MBA நிகழ்ச்சித்திட்டத்தின் சக்திவாய்ந்த தன்மையையும் அது வழங்கும் தனித்துவமான வாய்ப்புக்களையும் வலியுறுத்துகின்றன.

புதுமைப் புனைவு தொழில் முனைவோரிலிருந்து செல்வாக்கு மிகுந்த நிறுவனத் தலைவர்கள் வரை எங்கள் முன்னாள் மாணவர்களின் வலையடைப்பு (பிணையம்) சுறுசுறுப்பான திறனாய்வாளர்களை உருவாக்கும் எங்கள் கல்வியின் சக்திக்கு ஒரு சான்றாக விளங்குகின்றது. PIM பட்டதாரிகள் PIM இன் முன்னாள் மாணவர்கள் சங்கத்தில் இணையுமாறு எதிர்பார்கப்படுகிறார்கள்.

இச்சங்கம் PIM பட்டதாரிகள் அனைவரும் சந்தித்துக்கொள்வதற்கும் சமூகமயமாவதற்கும் மற்றும் வலையமைப்பு உருவாக்கத்திற்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்துகின்றது. PIMA தனது உறுப்பினர்களுக்கு தொடர் கல்வி வாய்ப்புக்களை வழங்குவதில் மும்முரமாகச் செயற்படுகின்றது. இது PIM பட்டதாரிகள் தமது உயிர்தொழில் வாய்ப்புகளை விருத்தி செய்வதற்கான ஒரு மன்றமாகவும் திகழ்கின்றது.

# ஆராய்ச்சி

**ஆராய்ச்சி நிலையம்**

PIM கூட்டு ஆராய்ச்சி மூலம் மேம்பட்ட கல்வியியல் செயற்பாடுகளுக்காக ஒரு ஆராய்ச்சி மையத்தை நிறுவியுள்ளது. பல்வேறு களங்களை உள்ளடக்கிய நடவடிக்கைகளை ஆராய்ச்சி மையம் கண்காணிக்கின்றது, இது கல்வித் தரத்தின் உயர்ந்த நிலைகளுக்கான PIM ன் உறுதிப்பாட்டிற்கு சான்றாக உள்ளது. இந்த ஆய்வு மையம். முனைவர் பட்ட மேற்படிப்புக்களை நிர்வகிக்கின்றது. மேலும், தொடர் ஆராய்ச்சித் திட்டங்கள், விடய ஆய்வுகள் மற்றும் தொழிற்துறைக் கணக்கெடுப்புகளுக்கு ஆதரவளித்து, அவறின் முடிவுகளை சஞ்சிகைக் கட்டுரைகள் மற்றும் மாநாட்டு ஆய்வுக் கட்டுரைகளாகப் பரப்புகின்றது.
இது முகாமைத்துவத்தின் பரந்த பகுதியில் குறிப்பாக குறுக்கு பண்பாட்டு மேலாண்மை மற்றும் நிர்வாகத்தில் கவனம் செலுத்தி, இடைப்படடத்துறை ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சிகளை ஏற்பாடு செய்கின்றது, வழிநடத்துகின்றது மற்றும் ஊக்குவிக்கின்றது. ஆராய்ச்சி மையம் ஆராய்ச்சி முடிவுகளைக் கலந்துரையாடுவதற்கு மாநாடுகள் மற்றும் செயலமர்வுகளையும் ஏற்பாடு செய்கின்றது. இந்த முயற்சிகள் மூலம், ஆராய்ச்சி மையம் அறிவை நடைமுறைக்கு மாற்றுகின்றது. அத்துடன் பிணக்குத் தீர்த்தல் மூலம் நிறுவனங்களின் பெறுமதியை (மதிப்பை) உருவாக்குகின்றது.

ஆய்வு நிலையத்தின் பௌதிக வளங்களில் 03 தனி பணியிடங்கள், ஒரு பொதுப் பகுதி, ஒரு கலந்தாய்வு அறை மற்றும் ஒரு படிப்பறை என்பன அடங்கும். மேலும், தர அளவு மற்றும் அளவறிதரவுப் பகுப்பாய்வுக்குப் பயன்படுத்தப்படும் மென் பொருள்களுடன் கூடிய 04 கணிணிகளும் இதில் உள்ளன.

# நிறுவகத்தால் வெளியிடப்பட்ட வெளியீடுகள்

**இலங்கை முகாமைத்துவ சஞ்சிகை (SLJM)**

1996 ஆம் ஆண்டு முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் மூலம் இலங்கை முகாமைத்துவ சஞ்சிகை (SLJM) அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் நோக்கம் “முகாமைத்துவ” துறையில் கல்வி நிறுவனங்களுக்கு புதிய அறிவை சேர்ப்பதும், பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் பீட உறுப்பினர்களின் அறிவு சார்ந்த பங்களிப்பை (IC) மேம்படுத்துவதுமாகும். இரண்டு மறைப்பு அட்டையிடப்பட்டு சக மதிப்பாய்வு செய்யப்பட்டு வெளிவரும் இலங்கை முகாமைத்துவ சஞ்சிகையானது(SLJM), முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தால் தொடர்ந்து 28 ஆண்டுகளாக வெளியிடப்பட்டு வருகிறது மற்றும் இது இலங்கையின் எல்லைகளைக் கடந்து, குறிப்பாக EBSCOhost தரவுத்தளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நிறுவனங்களுகக்கிடையில் ஏற்படும் பரந்த அளவான பிரச்சினைகளை நிவர்த்தி செய்யும் வகையில் கோட்பாட்டு அடிப்படையிலான ஆய்வுகளை வெளியிடுவதற்கு இந்த சஞ்சிகை அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இது தரமான ஆய்வுகளை, பண்பியல், எண்ணியல், மீளாய்வு மற்றும் கருத்தியல் முறைகள் உள்ளிட்ட பல்வேறு அணுகுமுறைகளிலிருந்தும் ஏற்றுக்கொள்கிறது.

இலங்கை முகாமைத்துவ சஞ்சிகை (SLJM) கல்வியாளர்களுக்கும் தொழில்துறை சார் ஆராய்ச்சியாளர்களுக்கும் தங்களது ஆய்வுக் கண்டுபிடிப்புகளை வெளியிடுவதற்கான வாய்ப்புகளை வழங்குகிறது.

1996 ஆம் ஆண்டிலிருந்து, இலங்கை முகாமைத்துவ சஞ்சிகை (SLJM) இடையறாது வருடத்திற்கு இரண்டு சஞ்சிகைகளை வெளியிட்டு வருகிறது. தற்போது, ஒரு சஞ்சிகையில் 05 கட்டுரைகள் வீதம், வருடத்திற்கு 10 கட்டுரைகள் வெளியிடப்படுகின்றன. பல்வேறு காலகட்டங்களில் பல கற்றறிந்த பதிப்பாசிரியர்கள் இலங்கை முகாமைத்துவ சஞ்சிகையில் (SLJM) பணியாற்றி மனிதவளம் (HR) மற்றும் நிறுவன நடத்தை (OB) தொடர்பான பகுதிகளில் முக்கியமாக கவனம் செலுத்தி வெளியீடுகளின் தரம் மற்றும் நெறிமுறைகளைப் பேணியுள்ளனர். எவ்வாறாயினும், 2022 ஆம் ஆண்டிலிருந்து, "முகாமைத்துவ வகைகள்" என்ற பிரிவின் கீழ், சந்தைப்படுத்தல், நிலைபேண்தகு தன்மை, நிருவாகம், மூலோபாய முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவம் என வெளியீட்டுப் பகுதிகள் விரிவுபடுத்தப்பட்டன.

## தொழில்சார் முகாமையாளர்

தொழில்சார் முகாமையாளர் அரையாண்டிற்கொருமுறை நிறுவனத்தினால் வெளியிடப்படும் வெளியீடாகும். சிறந்த முகாமைத்துவ சிந்தனை மற்றும் பிரயோகங்கள் குறித்த முன்னேற்றகரமான அறிவு, முக்கியமாக எப்படி செய்வது என்பது குறித்த அறிவைப் பரப்புவதே இந்த சஞ்சிகையின் முக்கிய நோக்கமாகும். முகாமையாளர்கள் தங்களைச் சுற்றியுள்ளவற்றையும், தங்களுக்குள்ளேயுள்ளவற்றையும் எவ்வாறு கண்டறிய வேண்டும் என்பதற்கு துரிதமாக பொருத்தமான பயனுள்ள அறிவை வழங்க முயற்சிப்பதால், ஆராய்ச்சி அடிப்படையிலான இலங்கை முகாமைத்துவ சஞ்சிகையிலிருந்து (SLJM) தொழில்சார் முகாமையாளர் (PM) வேறுபட்டதாகும்.

தொழில்சார் முகாமையாளர் சஞ்சிகையில் காணப்படும் மேலும் ஒரு சிறப்பம்சம், கட்டுரைகளையும் காட்சிப்பட விளக்கங்களையும் விளக்கப்படங்கள், வரைபடங்கள் மற்றும் புகைப்படங்கள் மூலம் சமநிலையுடன் இணைத்து வழங்கும் கூட்டு முயற்சியாகும். இதுவே இச்சஞ்சிகையை வண்ணமயமான வெளியீடாக மாற்றியுள்ளது. உண்மையில், இந்த அம்சங்கள் இதே வகையான வெளியீடுகளிடையே ஒரு தனித்துவமான தர அடையாளத்தை உருவாக்க காரணமாகவுள்ளன. இந்த இதழ், இலங்கை முகாமையாளர் சமூகத்துக்குத் தேவையான சமகால அறிவை ஆர்வமூட்டும் வகையிலும் பயனளிக்கும் வகையிலும் வழங்கும் நோக்கத்துடன் வெளியிடப்படுகிறது. எளிதில் வாசிக்கக்கூடிய வகையில் எழுதப்பட்டுள்ளதால், முகாமையாளர்கள் தங்களின் வேலைநேரங்களுக்கிடையிலும் இதனை வாசிக்கலாம். தொழில்சார் முகாமையாளர் சஞ்சிகையின் 21ஆம் இலக்க வெளியீட்டின் ஆசிரியர் பக்கத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதுபோல்: "இது தொழில்சார் முகாமையாளர்களால் தொழில்சார் முகாமையாளர்களுக்காக வெளியிடப்படும் சஞ்சிகை ஆகும். உண்மையில், எமது இலக்குகளுக்கு ஏற்ற நட்பான சூழலை உருவாக்க கூடிய ஒரு முகாமைத்துவ கலாச்சாரத்தின் மூலம், எமது நிறுவனங்களின் அபிலாசைகளை எளிதாகக் கையாள்வதற்கு இலங்கை தொழில்சார் முகாமையாளரொருவரை உருவாக்குவதே இதன் உச்ச நோக்கம்." அதன்காரணமாக, தொழில்சார் முகாமையாளர் சஞ்சிகை ஒரு சாதாரண முகாமைத்துவப் பாடப்புத்தகத்திற்கும் மேலானதாகும். 2024 ஆம் ஆண்டில் இலங்கை முகாமைத்துவ சஞ்சிகையின் இரண்டு சஞ்சிகைகள் வெளியிடப்பட்டன.




**முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் எடுத்துரைப்பு வழிகாட்டுதல்கள்**

ஒரு புகழ்பெற்ற உயர் கல்வி நிறுவனத்தின் சிறப்பம்சம், அதன் கல்வியையும் செயற்பாட்டுத் தரங்களையும் இடையறாது மேம்படுத்தி, உயர்த்திக் கொண்டிருப்பதிலேயே இருக்கிறது. பல ஆண்டுகளாக, முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் தன்னுடைய தரங்களை மீளாய்வு செய்யவும், மதிப்பீடு செய்யவும், மேம்படுத்தவும் தனது சுய எடுத்துக்காட்டு செயன்முறையை உருவாக்கியுள்ளது. முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் எடுத்துரைப்பு வழிகாட்டுதல்கள்இதற்கான சிறந்த எடுத்துக்காட்டாகும் ஏனெனில், இது காலந்தோறும் மேற்கொள்ளப்படும் மேம்பாட்டு முயற்சிகளின் ஒரு பகுதியாகக் காணப்படுகிறது. இந்த சுயமேம்பாட்டு செயன்முறை, இவ்வெளியீட்டில் செய்யப்பட்ட திருத்தங்களின் எண்ணிக்கையிலிருந்தே தெளிவாகக் காணப்படுகிறது.

பல ஆண்டுகளாக, ஆராய்ச்சி வெளியீடுகள் உட்பட கல்விசார் கட்டுரைகள் அவற்றின் ஆரம்பப்புள்ளிகளைக் கடந்தும் விரிவடைந்துள்ளன. அதனால், இத்தகைய ஆய்வுக் கட்டுரைகளுக்கு, சர்வதேச ரீதியில் பரிந்துரைக்கப்பட்ட விரிவான தரநிலை அடிப்படையிலான ஒரு பொதுவான கட்டமைப்பை உடையதாக இருக்கவேண்டும். எனவே, இந்த நிறுவனங்கள், சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற மையங்களால் உருவாக்கப்பட்ட குறிப்பிட்ட வழிகாட்டுதல்களை கருத்தில் கொண்டு, தங்கள் கல்வியாளர்கள் மற்றும் கற்கை சமூகத்தினர் பின்பற்றுவதற்காக தனித்துவமான நிறுவனம் சார்ந்த வழிகாட்டுதல்களை உருவாக்கியுள்ளன.

இந்த முயற்சியில், முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம், தன் கற்கை சமூகத்தினரை கல்விசார் கட்டுரைகளில் ஒழுங்குத் தன்மையை பேண வைப்பதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. அதாவது, அறிக்கைகள் மற்றும் ஒப்படைகளைத் தயாரிக்கும் ஆரம்பக் கட்டங்களிலிருந்தே அவர்களது கட்டுரைகளை ஒழுங்குபடுத்தி, பின்னர் மேம்படுத்தப்பட்ட வெளியீடுகளை வெளியிடுவதே அதன் நோக்கமாகும்.

தற்போதைய முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் சமர்ப்பித்தலுக்கான

வழிகாட்டுதல்களின் வெளியீடு, அதன் தொடர்ச்சியான பதிப்புகளில் 7ஆவது பதிப்பாகும். இந்த மேம்பாடுகளைச் செய்யும் போது, பேராசிரியர்கள் மற்றும் பிற பங்காளர்களின் அனைத்து கருத்துக்களும், தற்போதைய சர்வதேச தரநிலைகளும், மேலும் கல்விசார் கட்டுரைகளில் முன்னேறிக் கொண்டிருக்கும் எதிர்காலப் போக்குகளும் கவனமாக கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், திருத்தத்தின் இறுதிக்கட்டங்களில்கூட, கற்கை பீடம் பெற்றிருந்த விரிவான அனுபவம் ஒருங்கிணைக்கப்பட்டது. அதன் விளைவாக, கல்விசார் கட்டுரைகளில் ஒழுங்குமுறையைக் கொண்டு வருவதற்கான கூட்டுப்பணியாக இது ஆரம்பிக்கப்பட்டது. குறிப்பாக கற்கை சமூகத்திற்குப் பெரும் பயனளிக்கும் வகையில், அவர்கள் தங்களின் அனைத்து கட்டுரைகளிலும் பின்பற்றக்கூடிய விரிவான வழிகாட்டுதல்களின் தொகுப்பு ற்போது அவர்களிடம் உள்ளது.

**பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் முகாமைத்துவ ஆய்வுப்பொருள்கள்**

மிகுந்த கவனத்துடன் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வுகள் முகாமைத்துவ பட்டப் படிப்பு நிறுவகத்தின் ‘‘முகாமைத்துவ ஆய்வுப் பொருள்’’ வெளியீட்டில் பிரசுரிக்கப்படுகின்றன. இவ்வாய்வுப்பொருள்கள், அர்ப்பணிப்புடன் செயல்படும் கற்கை பங்காளர்களால் அவர்களின் இறுதியாண்டு ஆய்வுகளாக தயாரிக்கப்படுகின்றன அவை பட்டப்பின் படிப்பு நிறுவக பீடத்தின் திறமையான மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

வெளியீட்டில் இடம்பெற்றுள்ள ஆய்வுப்பொருள்கள், ஆய்வுப்பொருள் 1:
ப்ரங்ஞாவினூடாக அமைப்பிற்கும் சமூகத்திற்கும் நன்மை செய்யும் மதிப்பை உருவாக்கல்
ஆய்வுப்பொருள் 2:
யானைச் சாணம் மூலம் நேரிய உற்பத்திப்பொருளைக் கண்டறிதல் ஆய்வுப்பொருள் 3:
கட்டுமானத் துறையின் பெருமளவு விரிவாக்கம் ஆய்வுப்பொருள் 4:
வணிக தொழில்நுட்ப துறையில் மேன்மையை வெளிப்படுத்தல் ஆய்வுப்பொருள்5:
கப்பற் தலைவர்கள் அடிக்கடி மாறினாலும், கடினமான கடல் பயணத்தை தொடர்தல்.
ஆய்வுப்பொருள் 6:
வங்கி மற்றும் நிதித்துறையில் கல்விசார் மேன்மை ஆய்வுப்பொருள் 7:
அதிகரித்து வரும் பிரபலமான இனிப்பு வகைகளில் உள்ளூர் இனிப்புகளையும் தயாரித்தல்
ஆய்வுப்பொருள் 8:
பணக்காரர்களின் ஆதரவின்றி, இலட்சக்கணக்கான மக்களுக்கு மகத்தான முறையில் சேவையாற்றுதல்.
ஆய்வுப்பொருள் 9:
முட்டையை வைத்து தனித்துவமாகச் சிந்தித்து திறன்பட மேற்கொள்ளப்பட்ட வணிகம்
ஆய்வுப்பொருள்10:
விமான நிலையம் மற்றும் விமான சேவைகளில் மக்களுடன் இணைந்து மேன்மையான இடத்தைப்பெறல்

# உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

**உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் கட்டமைப்பும் தொழிற்பாடுகளும்**

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது பல்கலைக்கழக சேமநிதிய மீளளித்தல், பணிக்கொடைக் கொடுப்பனவு ஒய்வூதிய விடுவிப்புகள் போன்ற 2024 ஆம்

ஆண்டுக்கான கணக்காய்வு முந்திய வழமையான கட்டாய செயற்பாடுகளை நிறைவுசெய்வதற்கு மேலதிகமாக ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழத்திற்கு இணைக்கப்பட்டுள்ள ஏற்கனவே காணப்படகின்ற அலுவல்களுடன் வருடாந்த கணக்காய்வு திட்டத்திற்கமைவாக கணக்காய்வுகளை நடாத்துகின்றது.

**கணக்காய்வுக் குழு**

2024 ஆம் ஆண்டுக்காக நியமிக்கப்பட்ட கணக்காய்வுக் குழு முகாமைத்துவப் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் மூன்று நிறைவேற்றுத்தரமல்லாத, சுயாதீன ஆளும்சபை உறுப்பினர்களை கொண்டுள்ளது.

2024 ஆம் ஆண்டில் பணிப்பாளர், சிரேஷ்ட உதவிப் பதிவாளர், பிரதிப் பதிவாளர் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் அழைப்பின் பேரில் தொடர்புடைய நிருவாக அலுவலர்கள் போன்றோரின் பங்கேற்புடன் நான்கு கணக்காய்வுக் குழு கூட்டங்கள் இடம்பெற்றன. இலங்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பிரதிநிதியாவிருக்கின்ற தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் நிறுவனங்கள் பற்றிய கணக்காய்வுக் கண்காணிப்பாளரும் சமூகமளித்திருந்தார். கணக்காய்வுக் குழு, நிதியியல் முகாமைத்துவம் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை வலுப்படுத்துவதற்கும் நிறுவனத்தில் நிருவாக நடைமுறைகளை மேம்படுத்துவதற்குமான சிறந்த ஆளுகைக்கான பொது தொழில்முயற்சிகள் வழிகாட்டல் நோக்கெல்லைக்கமைவாக அதன் கடமைகளை செயலாற்றி பரிந்துரைகளை மேற்கொள்கின்றது

**முன்னேற்றம்**

மீளாய்வு செய்யப்படுகின்ற ஆண்டின்போது கணக்காய்வுக்குழு பல பரிந்துரைகள், பணிப்புரைகள் மற்றும் முன்மொழிவுகளை மேற்கொண்டது. இவை பின்வருவன உள்ளடங்கலாக நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளையும் செயன்முறைகளையும் வுலுப்படுத்துவதை நோக்கி வழியமைத்தது.

அ. நிதியியல் கூற்றின் நேர்மையினை உறுதிசெய்தல்

ஆ. தொடர்புடைய கணக்கீட்டு மற்றும் நிதியியங்கள் அறிக்கைகள் நியமங்கள் உள்ளடங்கலாக சட்டங்களுடன், விதிகளுடன், ஒழுங்குவிதிகளுடனான இணங்குவித்தலை கண்காணிப்பதற்கான முறைமையொன்றினை நிறுவனம் பேணுகின்றது என்பதனை உறுதிசெய்தல்.

இ. உள்ளகக் கணக்காய்வு தொழிற்பாடுகளின் ஒட்டுமொத்த மேற்பார்வை மற்றும் ஆண்டுக்கான உள்ளகக் கணக்காய்வு திட்டத்தை அனுமதித்தல்.

கணக்காய்வுக்குழு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பிரதிநிதியுடன் ஒருங்கிணைத்து கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் எடுத்துக்காட்டப்பட்ட பலவீனங்கள் மற்றும் குறைபாடுகள் பற்றி பின்தொடர் நடவடிக்கைகள் எடுப்பதற்கு அலுவலர்களுக்கும் உள்ளகக் கணக்காய்வாளர்களுக்கும் பணிப்புரை விடுத்தது.

**எதிர்கால முன்னேற்றம்**

நிறுவனத்தின் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் தொடர்ச்சியான மேம்பாடுகளின் விளைவாக கணக்காய்வுக்குழு முறைமைகளையும் கட்டுப்பாடுகளையும் மீளாய்வுசெய்வதற்கும் அதன் குறிக்கோள்களை நீடிப்பதற்கும் திட்டமிடுவதுடன் நிறுவனத்தின் நிதியியல் மற்றும் நிருவாக நடைமுறைகளை தரமுயர்த்துவதற்காக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை மேலும் வலுப்படுத்துவதற்கும் பரிந்துரைகளை மேற்கொண்டது.

# ஒட்டுமொத்த நிதி மீளாய்வு

**நிதியியல் பொது நோக்கு**

**வருமானம்**

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம் (PIM) கடந்த வருடத்தை விட 2024 ஆம் ஆண்டில் மொத்த வருமானத்தில் சற்று அதிக வருமானத்தைப் பதிவு செய்துள்ளது, 2023 உடன் ஒப்பிடும்போது ஒட்டுமொத்தமாக 5% அதிகரித்துள்ளது. இந்த வளர்ச்சிக்கு கற்கைநெறிக் கட்டணங்கள், நிறைவேற்று அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் (EDP) மற்றும் ஆலோசனைகளால் கிடைக்கப் பெறும் வருமானங்கள் காரணமாகும், மேலதிகமாக, நிலையான வைப்பு வட்டியிலிருந்து கணிசமான வருமானமும் இதற்கு பங்களித்தது.




**செயற்பாடுகளின் அடிப்படையில் மொத்த வருமானம் (ரூ. மில்லியன்)**



## செலவினங்கள்

அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை உயர்வு, நிகழ்ச்சித் திட்டங்களின் விரிவடைந்த செயற்பாடுகள் காரணமாக, இலங்கையின் பொருளாதார நிலைமை இந்த ஆண்டில் செயற்பாட்டுச் செலவினத்தில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது. இதன் விளைவாக, 2024 ஆம் ஆண்டிற்கான மொத்தச் செலவினம், 2023 ஆம் ஆண்டை விட 16% அதிகரித்துள்ளது.

**மொத்த செலவின தொகுப்பு (ரூ. மில்லியன்)**




## பொதுத் திறைசேரிக்கான அறவீடு

